DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999



Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் உலகில்
எத்திக்கும் தமிழ் விதம்
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1337 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 19, 2021



Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON. L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099


# மொன்றியால் நகரில் தொடர்ந்து பேசப்படும் நிகழ்வாக ஆர்வலர்களின் அங்கீகாரத்தைப் பெற்ற 'உதயன்' வெள்ளி விழாவும் 'நண்பன்' விருது விழாவும்





கனடாவில் வெள்ளி தோறும் விருப்புடன் விரியும், 'உதயன்' வார இதழின் 'கதிரோட்டம்' கண்டறிந்து – கற்றுணர்ந்து காலங்கள் இருபத்து ஐந்து ஆண்டுகள் ஆகி 'வெள்ளி விழா' கொண்டாடும் 2021ல் 'நண்பன்' என அறிமுகம் ஆகும் நல்ல தமிழ் உறவின் பெயரில் 'விருது' பெற வந்தவர்கள் - விழா பார்க்க வந்தவர்கள் - கவிதை சொல்ல நிமிர்ந்தவர்கள் - ஆடல் கலை நர்த்தகிகளின் களி நடனம், காதுகளில் தேன்பாய்ச்சி வயலினிசை வழங்கியவர், வீணையிசை மீட்டியவர் - தமிழ் மொழி வாழ்த்திசைத்தும் - கனடியத்தாயை வாய்மலர்ந்து, பாடிவைத்தும் - வருகைதந்த தாய்க் குலத்தைப் பெரியோரை, விருந்தினரை வாயார வாழ்த்துரைத்து, வரவேற்றும் பலர் பங்களிக்க, தலைமையுரை இரு மொழியில் நிகழ்த்தியே தான் தலைமை தாங்கிய விழா உதயன் தொடர் எழுத்தாளர் வீணைமைந்தன் சண்முகராஜா அவர்கள் மேடையில் மொன்றியால் **Mayor of Dollard Des Ormeaux, Alex Bottausci** அவர்களை கௌரவிப்பதையும். விழா வயலின் இசை வழங்கி மாணவ மாணவிகளையும் அவர் தம் ஆசிரியையும் கௌரவிப்பதையும்த போது இங்கே காணலாம். *(உள்ளே மேலும் படங்களும் செய்திகளும்- படங்கள்: சத்தியன்)*

# சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மின் மயான திட்ட நிதிக்கு ஐந்து இலட்சம் ரூபா வழங்கிய தமிழ் சி.என்.என் அதிபர் அகிலன் முத்துக்குமாரசுவாமி



தென்மராட்சி மக்களின் வேண்டு-கோளுக்கு இணங்க தமிழ் சிஎன்என் அதிபர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி அவர்களின் ஐந்து இலட்சம் ரூபா நிதி அன்பளிப்புடன் சாவகச்சேரி "கண்ணாடிப்பிட்டி மின் மயான திட்டமானது" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தின் தலைவர் வி.சு.துரைராஜா அவர்களினால் 16-11-2021 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அவசியமான திட்டத்திற்கு தென்மராட்சி அன்பர்கள் அனைவரும் தங்களால் இயன்ற நேரடிப் பங்களிப்பினை வழங்குமாறு தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். நேரடியாக பணம் வைப்புச் செய்வதற்கு:-

**Chavakachcheri Kannadippiddy Electrical Cemetry Project**
**Bank :- People's Bank, Chavakachcheri.**
**A/C No :- 110-2-001-7-0008145**


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மீசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

# தாமோர் நகை அடைவு மாளிகை
# THAMOR PAWN BROKER

THAMOR®

- கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
- நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
- குறைந்த வட்டி 2% இருந்து

தாமோர்
வர்த்தக துறையில்
20 வருட
முன்னோடிகள்

உடனடியாக உங்கள் கைகளில்
குறைந்த வட்டியுடன் அடவு பிடித்துக்கொள்ள
தாமோர் அடவு மாளிகையை நாடுங்கள்



107 Dundas St, East (Second Floor)
Mississauga, ON, L5A 1W7

905-272-1222
Online service: www.remitbee.com


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244

### இலங்கைக்குப் பணம் அனுப்ப வேண்டுமா

RemitBee

- 500 டாலருக்கு மேல் அனுப்பும் பணத்திற்கு எந்தவிதமான கட்டணமும் கிடையாது
- *வேகமான பணப்பரிமாற்றம்
- கனடாவில் வேறு யாராலும் தரமுடியாத எக்ஸ்சேஞ்ச் ரேட்டை வழங்குகிறோம்

remitbee.com

Download on the App Store
GET IT ON Google Play

### CLEANERS WANTED

Woodbridge, Scarborough, North York, & Downtown

Please Contact Us @

(416) 412-3223

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### BASEMENT FOR RENT

Morningside & Sewells சந்திப்புக்கு அருகில் உள்ள வீட்டின் Walk-Out Basement ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. Two Bed Rooms, One Wash Room, one Parking ஆகியன உண்டு. TTC Bus மற்றும் தமிழர் கடைகள் மிக அருகில். குடும்பம் அல்லது மாணவிகள் விரும்பத்தக்கது.

விபரங்களுக்கு:

647-766-9767

### DZ Driver Wanted

DZ driver wanted
GTA and surrounding area.
Call Nathan.
Salary: $20/hr

416-520-1324

or email:

Sentax72@gmail.com

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6

Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### PART-TIME CLEANERS WANTED

ஸ்காபுறோவில் உள்ள சில இடங்களில் காலை நேரத்தில் பகுதி நேர CLEANERS வேலைக்கு வெற்றிடங்கள் உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும்-

416 858 6316

### Home Renovations



Coverall Group Inc.

- Basements
- Bathrooms
- Kitchen
- Flooring
- Accent Walls

Contact: Siva
416-706-8160

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இவ்வருடத்தின் மாவீரர் வாரத்தின் ஆரம்பத்தில் இடம்பெறும் மகத்தான தமிழீழத் தேசிய கொடி நாள் நிகழ்வு

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் கனடாவிலும் ஏனைய சில நாடுகளிலும் தமிழீழ தேசியக்கொடி நாள் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன.கனடாவில் ரொறன்ரோ. தலைநகர் ஒட்டாவா மற்றும் மொன்றியால் ஆகிய நகரங்களில் இந்த உணர்வுபூர்வமான நிகழ்வைக் கண்டு களிக்க மக்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த நிகழ்வு தொடர்பான நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஊடகப் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் பல முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

நாளை தனித் தமிழ் நாடாக மலரவிருக்கும் தனித் தமிழீழத் தேசத்தின் தேசிய சின்னமாக தமிழீழத் தேசியக்கொடி மிளிர்வதைக் கருத்தில் கொண்டும், தமிழீழத் தேசியப் பண்பாட்டுக் கோவையில் நாடு உருவாகுவதற்கு முன்பே நாட்டுமக்கள் முறைப்படி கொடிவணக்கம் செலுத்தி, கொடிவணக்கப் பாடலை இசைத்து, முதன்மை விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதன் மூலம் தமிழீழ மண்ணினது தேசியக்கொடி எமது வரலாற்றில் ஒரு புதுமை சேர்த்திருக்கின்றது என்ற கூற்றை கவனத்தில் எடுத்துக்கொண்டும், தமிழீழத் தேசியக்கொடி மாவீரர்களின் குருதியால் நெய்யப்பெற்றது என்பதையும் கருத்தில் கொண்டும் தமிழீழத் தேசியக்கொடியானது சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத்தை அமைப்பதில் எம்மிடம் உள்ள உறுதியை உலகிற்கு பறை சாற்றுவதைக் கருத்தில் கொண்டும் கொடி வணக்கம் செய்வது மக்களிடையே நிலவும் தேசப்பற்றுக்கு வலுச் சேர்க்கும் என்பதையும் கருத்திற் கொண்டு நாளை மலரவிருக்கும் தமிழீழ தேசம் அனைத்துலகப்பரப்பில் இறைமை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் மற்றைய நாடுகளுடன் நிமிர்ந்து நிற்கும் என்ற செய்திக்குக் கட்டியம் கூறுவதாக தமிழீழத் தேசியக்கொடி பறப்பதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

இந்த வகையில் தமிழீழத் தேசியக்கொடி பயன்பாட்டு முறைகள் தலைவர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பெற்றது. தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர் வாரத் தொடக்க நாளில் அதாவது 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் முதல் தடவையாகத் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களால் அவரது பாசறையில் ஏற்றிவைக்கப்பெற்றது என்பதையும் நினைவில் நிறுத்திய வண்ணம் கார்த்திகை மாதம் 21வது நாள் தமிழீழ தேசியக் கொடிநாளாக முரசறையப்படுகிறது. ஏனத் தெரிவிக்கப்பெற்றுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று உலகத் தமிழ் மக்கள் அனைவரும் தமிழீழ தேசியக் கொடிநாளைக் கொண்டாட திரள வேண்டும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

# மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பொதுச் சுடர் ஏற்றும் பீடம் இராணுவத்தால் இடித்தழிக்கப்பட்டது



மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பிரதான சுடர் ஏற்றும் பீடம் இராணுவத்தினரால் முற்றாக இடித்தழிக்கப்பட்டது.

அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான செயல் என மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக துயிலுமில்ல ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டாளரும் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவருமாகிய வி.எஸ் சிவகரன் தெரிவிக்கையில்...

துயிலுமில்ல நுழைவாயிலுக்கு அருகில் இராணுவம் உள்ள போது யார் உடைத்திருக்க முடியும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

பல வருடங்களாக இருந்த இந்த பொதுச்சுடர் ஏற்றும் தீம் பீடத்தை சற்றும் மனிதாபிமானம் இன்றி மிலேச்சத்தனமான முறையில் உடைத்து சேதப்படுத்தி உள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை (18) மாலை தகவல் கிடைத்ததும் தானும் துயிலுமில்ல ஏற்பாட்டுக் குழுவின் பொருளாளரும் மன்னார் நகர சபை தலைவருமாகிய அன்ரனி டேவிற்சனும் சென்று பார்வையிட்டோம்.

எனவே இவ்வாறு தீபமேற்றும் பீடத்தை அழிப்பதன் ஊடாக அரசு சிற்றின்பம் அடையலாம்.

தமிழ் மக்களின் மனங்களில் அனுதினமும் தியாகச் சுடராக ஒளிர்ந்து கொண்டிருக்கும் எமது விடுதலை வீரர்களின் தியாகத்தையோ இலட்சிய வேட்கையையோ அரசால் சிதைத்து விட முடியாது என்பதை இக் கேவலமான செயலில் ஈடுபடுவோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இச்சம்பவம் மாவீரர்களின் பெற்றோர்கள் மத்தியில் மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது.என அவர் மேலும் தெரிவித்தார்.

# 'உதயன்' வெள்ளி விழாவும் 'நண்பன்' விருது விழாவும் மொன்றியால் அபிமானிகளை மகிழ்வித்தன




கனடியத் தமிழர்களின் இரண்டாவது தலைநகரம் என்று உச்சரிக்கப்படுகின்ற மொன்றியால் மாநகரில் களிப்போடும் கலை உணர்வோடும் வாசிப்புத் திறனோடும் வாழ்ந்து வரும் தமிழ் உறவுகளின் ஆதரவோடும், வர்த்தக அன்பர்கள் வழங்கிய அளப்பெரிய ஆதரவோடும் அங்கு 'உதயன்' வெள்ளி விழாவும் 'நண்பன்' விருது விழாவும் நடைபெற்றன. மொன்றியால் வாழ் 'உதயன்' தொடர் எழுத்தாளர் வீணைமைந்த கே. ரி. சுண்முகராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு தங்கள் முழுமையான ஆதரவை கடந்த சில மாதங்களாக வழங்கி வந்த பெயர்களைக்குறிப்பிட்டு நன்றியைப் பகிர்ந்துகொள்ளக் கூடியவர்களான வீணைமைந்ததன் சண்முகராஜா. வாகீசன் நடராஜா. "பகவதி" உதயகுமார். புரூட்ஸ் ஹபி சிறி அவர்கள். துர்க்கா பேனிச்சர்ஸ் சிறி மற்றும் வதனி ஆகியோர். "வைகப் புயல்" பாலா. தவராஜா (முன்னாள் சீமெந்துத் தொழிற்சாலை) திருமதி சாரதா சுப்பிரமணியம், முத்துக்குமார் சிவானந்தன் (முன்னாள் ஆசிரியர்) ஆகியோருக்கும். ஆசியரை வழங்கிய அருள்மிகு திருமுருகன் ஆலய சிவாச்சாரியார் ஸிரீ ஐயா அவர்களுக்கும். கவிதை சமர்ப்பணம் செய்த கவிஞர் இருவருக்கும் வரவேற்புரை நிகழ்த்திய உமா மோகன்

அவர்களுக்கும். இன்னும் பல வழிகளிலும் திரைக்குப் பின்னால் நின்று உதவிகளை நல்கியவர்களுக்கும்.

அன்றைய விழாக்களுக்கு அருகிருந்து உதவிகள் புரிவதற்காக ரொரன்ரோ மாநகரிலிருந்து எம்மோடு வருகை தந்த நண்பர்கள் சங்கர் சிவநாதன். அவர் புதல்வர் கெவின். மற்றும் சங்கர் நல்லதம்பி. மரியராசா மரியாம்பிள்ளை. குமார் தம்பியப்பா. கெம்சோனிக்ஸ் ரஜீவ் செபராசா. மகேந்திரன். தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் ஆகியோருக்கும். கலை நிகழ்ச்சிகளை வழங்கிய சங்கீத நடன ஆசிரிய ஆசிரியைகளுக்கும். அரசியல் பிரமுகர்களை விழாவிற்கு அழைப்பதற்கு வழிசெய்த திருமதி வதனி மற்றும் வாகீசன் ஆகியோர்க்கும் இசை நடன நிகழ்ச்சிகளை வழங்கிய ஆசிரியர்கள் மற்றும் கலைஞர்கள். நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய உமா ராஜ் மற்றும் அர்ஜ்சுன் ஆகியோர்க்கும் பார்வையாளர்களுக்கும் எமது நன்றி.

*கனடா உதயன்- தலைமையகம்- ரொரன்ரோ*

**CAREGIVER WANTED (LIVE-IN)**

- Looking for a Male caregiver to look after a 91-year-old father and 78-year-old mother
- The language requirement will be English and Tamil
- Someone who is caring, trustworthy and who would live with them like a part of the family
- Previous experience, related training and passion for the job will be an asset
- Salary will be negotiated
- Interested candidates, please email your resume to **nmaithely@gmail.com**


ஈழமுரசு
ஈழமுரசும்,
கனடாவாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்களின்
அகவை
67
விழா!
தலைவன் பிறந்தநாள்
அதுவே தமிழன் நிமிர்ந்த நாள்!
வீழ்ந்து விடாத வீரம்
மண்டியிடாத மானம்
இருப்பாய் தமிழா நெருப்பாய்!
மாபெரும் எழுச்சி விழா
2021 நவம்பர் 26 வெள்ளிக்கிழமை
மாலை 5-மணி
இசைக் குழுவினரின், எழுச்சிக் கானங்கள்
சுதந்திர பறவைகள்
இடம்:
Metropolitan Centre
3840, Finch Ave East,
Scarborough on MIT 3T4
(Kennedy & Finch)
647-783-3466 / 647-808-7766

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைக்குமாறு என். டி.பி கட்சி கோரியுள்ளது. இது தொடர்பாக குயின்ஸ் பார்க் பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை வாக்களிப்பு இடம்பெறும்



ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றமான. குயின்ஸ் பார்க் - டக் ∴போர்டின் குறைந்த ஊதியக் கொள்கையை மாற்றி அமைக்கவும், ஒன்றாரியோ குடும்பங்களின் வாழ்க்கையைக் கடினமாக்கும் உயர்ந்த வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கவும் தன்னுடன் இணையுமாறு உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியான என். டிபி யின் தலைவர் ஆண்ட்ரியா ஹார்வத், சட்டமன்றத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

"பல ஆண்டுகளாக, நாம் விரும்பும் வாழ்க்கையை வாழ்வதற்காகப் பிரயத்தனப்பட்டு உழைத்தாலும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படியானதாக ஆக்குவது கடினமாக உள்ளது. ஒரு வீட்டை வாங்குவது, கட்டணங்களை அவற்றின் கெடுவிற்கு முன்னரே செலுத்துவது, எதிர்காலத்திற்காகச் சேமிப்பது, போன்ற இந்த வாய்ப்புகள் எமது குழந்தைகளுக்கு இல்லை. இந்த வாய்ப்புகள் எமது குழந்தைகளின் பெற்றோராகிய எமக்கும், அவர்களது பாட்டன் பாட்டிகளுக்கும் இருந்தன" என்றார் ஹார்வத். "மக்களுக்கு இந்தத் தேவைகள் மிக முக்கியம்".

கடந்த லிபரல் அரசாங்கம் 2014 முதல் 2017 வரை குறைந்தபட்ச ஊதியத்தை தேக்க நிலையில் வைத்திருந்தது. "ஹைட்ரோ வன்"ஐ விற்று கட்டணங்களை உயர்த்தியது. குழந்தை பராமரிப்புச் செலவுகளை உயர்த்தி அதை நாட்டின் அதியுயர்ந்த செலவாக ஆக்கியது. பெட்ரோல் பம்ப் விலையை கட்டுப்படுத்த மறுத்தது. மேலும் வீடுகளின் விலை கட்டுப்பாடின்றி அதிகரித்துக் கொண்டேயிருந்தபோது அதை அனுமதித்தது.

ஒட்டாவாவில் இருந்து நாளொன்றுக்கு $10 குழந்தை பராமரிப்பு திட்டத்தை டக் ∴போர்ட் நிறுத்தியுள்ளார். இப்போது பெற்றோர்கள் மாதந்தோறும் வானமளவு உயர்ந்த கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளது. எரிவாயு விலைகளை ஒழுங்குபடுத்தவோ அல்லது வீட்டுவசதி அல்லது ஹைட்ரோ விலை சார்பாக நடவடிக்கை எடுக்கவோ அவர் மறுக்கிறார்.

∴போர்டின் ஊதிய குறைந்த பட்ச வரம்புச் சட்டக் கொள்கையானது, சுகாதாரம் மற்றும் கல்வித் துறை ஊழியர்களின் ஊதியத்தை வாழ்க்கைச் செலவை விடக் குறைவான அளவில் வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியுள்ளது. இதன் விளைவாக குறைந்த பட்ச ஊதிய அதிகரிப்பு மூன்று ஆண்டுகளுக்குத் தடுத்து நிறுத்தப்பட்டது. எல்லா விலைகளும் அதிகரித்த நிலையில், குறைந்த பட்ச ஊதியம் அதிகரிக்கப்படாத போது, இச்செயல் நடுத்தர வர்க்கத்தினரிடையே ஒரு அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது எனலாம்.

"இது இப்படி இருக்க வேண்டியதில்லை" என்று ஹார்வத் கூறினார். "∴போர்டின் நண்பர்களின் மீது கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, வேலை செய்பவர்களைப் பற்றியும், இங்கு மிகச் சிறந்த வாழ்க்கையை உருவாக்க அவர்களுக்கு உதவுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்துவோம்".

∴போர்ட் தனது குறைந்தபட்ச ஊதிய முடக்கத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இழந்த வருவாயை மீட்டெடுத்துக் கொடுக்க வேண்டும் இது குறைந்தது $5,300 ஆகும் கட்டுப்படியாகாத வாடகை, மற்றும் அதிகரித்துக் கொண்டிருக்கும் வீட்டு விலைகள் மீது யதார்த்தமான நடவடிக்கைகளைச் செயல்படுத்துங்கள் ஒரு நாளைக்கு $10 குழந்தைப் பராமரிப்பைச் செயல்படுத்துவதற்காக, கூட்டாட்சி அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுங்கள் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறு வணிகங்களுக்கு நிதி உதவி வழங்குங்கள் மேலும் ஹைட்ரோ, வாகனக் காப்பீடு மற்றும் பெட்ரோல் விலையைக் குறைக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் என்றும் ஹொர்வர்த் கோரியுள்ளார்.

# ஒட்டாவாவில் உள்ள கனடா பராளுமன்ற முன்றலில் தமிழீழத் தேசியக் கொடிநாள் நறிகழ்வுகளை நடத்த அனுமதி வழங்கப்பெற்றுள்ளது



கனடாப் பாராளுமன்ற சட்டதிட்டங்களுக்கு அமைய முறைப்படி அனுமதிபெற்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தமிழீழத் தேசியக் கொடிநாள் நிகழ்வினை நடத்துகின்றது. இல் ஒட்டாவா நகரில் (Wellington St., Ottawa) கனடாப் பாரளுமன்ற (PARLIAMENT HILL) முன்றலில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமை 21.11.2021 காலை பதினொரு மணிமுதல் மதியம் இரண்டு மணிவரை இந்நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஈழத்தமிழ் இனத்தின் அடையாளக் கொடியான "தமிழீழத் தேசியக் கொடியை" ஏந்தி தங்கள் கொடிதினத்தை ஈழத் தமிழ் மக்கள் கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு ரொறன்ரோவில் இருந்து நெடுஞ்சாலை 401 வழியாக ஒட்டாவா நோக்கிய கொடி ஏந்திய வாகனப் பேரணி செல்வதற்கும் OPPயின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இந்த வாகனப் பேரணியானது 445 மில்னர் அவனியூ யூனிட் இலக்கம் 11 இல் அமைந்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்க அரசவை உறுப்பினர்கள் பணிமனை முன்றலில் இருந்து காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். மார்க்கம் வீதியினூடாக சென்று நெடுஞ்சாலை 401 இனுடாக பயணம் வலது தடத்தில் (றைற் லேன்) பயணம் தொடரும்.

தமிழ் ஈழ மக்களுக்கு பூர்வீகமான தனித்துவமான தேசம் உள்ளது. அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது. சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமையாகும். அந்த அடிப்படை உரிமைகளின் அடையாளமான எங்கள் தேசியக்கொடியை நாங்கள் ஏந்தும் உரிமையை, கனடா மதித்து தமிழ் மக்களுக்கும் சனநாயரீதியாக அமைந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கும் அனுமதியை வழங்கியுள்ளது.

ஒட்டவாவில் பாராளுமன்ற முன்றலில் நடைபெறும் இந்நிகழ்ச்சி மட்டுமல்லாது ரொறன்ரோ, மொன்றியல் மற்றும் ஒட்டாவா நகரங்களிலும் நாடுகடந்த அரசாங்கத்தின் அரசியல் விவகார அமைச்சின் பணிப்பின் பேரில் "கனடா நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் பணிமனை" உள்ளரங்க நிகழ்வுகளை முன்னெடுப்பதும் குறிப்பிடத்தக்கது. வாகனப் பேரணியிலும், நிகழ்வுகளிலும் தாயகத்தின் விடுதலையை நேசிக்கும் மக்கள் எழுச்சியுடன் பெருமளவாக அணி திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை கொவிட் கால விதிமுறைகளைப் கட்டாயமாகக் கடைப்பிடிக்கும் படி விழா ஏற்பாட்டாளர்கள் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆமை என நினைத்து முதலையுடன் விளையாடிய சிறுவன்

உலக செய்திகள்
World News



நமது குழந்தை பருவத்தில் பல வித வினோத முயற்சிகளை செய்திருப்போம். 5 படிக்கட்டுகளுக்கு மேல் இருந்து கீழே குதிப்பது, குருவிகளை உண்டிகோலால் குறி வைத்து அடிப்பது, சின்ன சின்ன கோழிகளை வளர்ப்பது போன்ற பல்வேறு செயல்களை செய்திருப்போம்.

ஆனால் இவற்றில் பல நேரங்களில் நமக்கு பாதிப்பு தர கூடிய விளைவுகள் நடந்திருக்க கூடும். சில நேரங்களில் நாம் செய்வது என்னவென்று அறியாமல் அவற்றை செய்திருப்போம். இருப்பினும் அதனால் உண்டாகும் பாதிப்பு அதிகம் இருக்கலாம். இப்படியொரு சம்பவம் தான் அமெரிக்காவை சேர்ந்த சிறுவனுக்கும் நடந்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள ∴புளோரிடா மாகாணத்தை சேர்ந்த ஜோ பிரென்னர் என்பவருக்கு 2 வயதில் ஒரு மகன் உள்ளார். எல்லோரையும் போலவே தனது குழந்தையை விளையாடுவதற்காக அனுப்பி விட்டு, பிறகு இவர்களின் வீட்டு வேலைகள் மற்றும் அலுவலக பணிகளை செய்து வந்திருக்கிறார்கள். இந்த 2 வயது சுட்டி பையனும் தினமும் விளையாடுவதற்கு வெளியில் சென்று வந்துள்ளான்.

நாளுக்கு நாள் அதிக நேரம் விளையாடி வந்துள்ளார் இந்த சிறுவன். இதை கவனித்த ஜோ பிரென்னர், தன் மகன் இவ்வளவு நேரம் எங்கு விளையாடி வருகிறான், யாருடன் விளையாடி வருகிறான் என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டுள்ளார். எனவே தனது மகனை ஒருநாள் பின்தொடர்ந்து சென்றுள்ளார். அங்கு தான் அவருக்கு மிக பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

அந்த 2 வயது சிறுவன் ஆமை என்று தவறுதலாக நினைத்துக்கொண்டு ஒரு பெரிய முதலையுடன் சில நாட்களாக விளையாடி வந்துள்ளான். இதை பார்த்த அந்த தந்தைக்கு தூக்கி வாரிப் போட்டுவிட்டது. உடனே அவரின் மகனை அங்கிருந்து சட்டென அழைத்து சென்று விட்டார். தன் மகன் முதலையுடன் விளையாடியும் இப்படி உயிருடன் இருப்பதை கண்டு அவர் பீதியுடன் ஆச்சரியப்பட்டார்.

ஜோ பிரென்னர் வீட்டின் அருகில் உள்ள ஒரு கால்வாயில் இந்த முதலை தவறுதலாக மாட்டி கொண்டுள்ளது. இதை பார்த்த அவரின் மகன் அது ஆமையாக தான் இருக்கும் என்று நினைத்து கொண்டு அதனுடன் விளையாடி வந்திருக்கிறார். மேலும் அந்த முதலை வெளிய வருவதற்காக இந்த 2 வயது சிறுவன் உதவ முயற்சித்த போது தான் அவரின் தந்தை அங்கு சென்று மகனை காப்பாற்றி உள்ளாராம். இல்லையேல் அவர் தனது மகனை இழந்திருப்பார்.

இந்த திகில் சம்பவத்தை கேள்விப்பட்ட அக்கம்பக்கத்து வீட்டினர் உடனே வனவிலங்கு மீட்பு குழுவிற்கு தகவல் தெரிவித்துள்ளனர். அங்கு விரைந்து வந்து அந்த பெரிய முதலையை மீட்பு குழுவினர் மீட்டெடுத்து சென்றுவிட்டனர். இதே போன்ற ஒரு சம்பவம் இங்கிலாந்தை சேர்ந்த பெண் ஒருவருக்கும் நடந்துள்ளது. அவரின் வீட்டுக்கு அருகில் 4 அடி உயரம் கொண்ட ஒரு முதலை உலாவி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். குழந்தைகள் எப்போது வெளியில் விளையாட சென்றாலும் அவர்களின் செயல்களை பெற்றோர்கள் மிக கவனமாக பார்த்து கொள்வது அவசியம். இதை இந்த 2 வயது சிறுவனுக்கு நடந்த சம்பவத்தின் மூலம் நாம் மீண்டும் நினைவில் வைக்க வேண்டும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் தகர்க்கப்பட்ட நீர்த்தாங்கியில் இருந்து அரிய வகை ஆந்தை ஒன்று உயிருடன் மீட்பு



மன்னார் கோந்தை பிட்டி பகுதியில் நீண்ட நாட்களாக பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட நீர் தாங்கி திங்கட்கிழமை (15) இராணுவத்தினரின் உதவியுடன் தகர்க்கப்பட்ட நிலையில் அந்த நீர் தாங்கியில் இருந்து அரிய வகை கூகை ஆந்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வகை ஆந்தை இனம் மிக அரிய வகை என்பதுடன் நீண்ட நாட்களாக குறித்த நீர் தாங்கியில் வசித்து வந்த நிலையில் இன்றைய தினம் வெடிப்பின் காரணமாக இறக்கை ஒன்று உடைந்த நிலை-யில் தாங்கியின் சிதைவுக-ளில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

**- மன்னார் நிருபர்**



# மன்னார் மாவட்டத்தில் கொரோனா நிலமை தொடர்பாகவும், டெங்கு கட்டுப்பாடு தொடர்பாகவும் விசேட கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்தின் கொரோனா நிலமை தொடர்பாகவும், டெங்கு கட்டுப்பாடு தொடர்பாகவும், அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் தொடர்பாகவும் ஆராயும் அவசர கலந்துரையாடல் திங்கட்கிழமை (15) மாலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.


டெங்கு தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் எவ்வித டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்படவில்லை எனவும், ஆனால் டெங்கு பரவலை கட்டுப்படுத்த சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

மேலும் கொரோனா தொற்று தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்ட தோடு, விசேட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக போக்குவரத்து துறையினருக்கு.அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளின் போது பயணிகள் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்கும் வகையில் தமது சேவையினை பாதுகாப்பான முறையில் முன்னெடுக்க கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



மேலும்யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்ற ஆசிரியர்களுக்கான விசே-ட பஸ் சேவையினையும், வெள்ளாங்குளத்தில் இருந்து பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான பஸ் சேவையையும் உடன-டியாக ஆரம்பிக்க உரிய தரப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



மேலும் மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2 ஆம் 3 ஆம் அலைகளுக்கு நாங்கள் எவ்வாறு மிக துரிதமாக செயல்பட்டு மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தோமோ அவ்வாறு மீளவும் தற்போதைய சூழ்நிலையில் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர்.

எனவே மீண்டும் சகல நடைமுறைகளையும் மிகவும் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

குறித்த விசேட கலந்துரையாடலில் தள்ளாடி 54 ஆவது படைப் பிரிவு அதிகாரி, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன், பிரதேச செயலாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதே வரவு செலவுத் திட்டத்தின் நோக்கம் — மீண்டும் பொய் உரைக்கும் மஹிந்த

கொவிட் தொற்று நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதே இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் நோக்கம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பின் போது பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்னேற்றகரமான முன்மொழிவுகள் எதிர்வரும் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்று பிரதமர் தனது உரையில் நம்பிக்கை தெரிவித்தார்.

இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பின் போது பிரதமர் ஆற்றிய முழுமையான உரை, மிகவும் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்கள் சமர்ப்பித்தமைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து எனது உரையை ஆரம்பிக்க விரும்புகிறேன்.



பல துறைகளின் சவால்களுக்கு மத்தியில் இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு முக்கியமான தருணத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்றே கூற வேண்டும். இது முக்கியமாக கொ-விட்-19 பாதிப்பில் இருந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கொவிட்-19 தொற்றுநோய் உலகம் முழுவதையும் பாதித்து மக்களைக் கடுமையா-கப் பாதித்தது. அந்த தாக்கங்களில் இருந்து இலங்கையால் கூட விடுபட முடியவில்லை.

மேலும், கொவிட் தொற்றில் இருந்து மக்களைக் காப்பாற்ற நமது அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நாம் முன்னெடுத்த செயற்பாடுகளின் ஊடாக பொருளாதாரத்தை விரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வர முடியும் என நம்புகின்றோம்.

வரையறுக்கப்பட்ட அரச நிதியை கொண்டிருந்த போதிலும், சுபீட்சத்தின் நோக்கு கொள்கையை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொண்டது.

இதுவரை நாம் சுமார் 60,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கியுள்ளோம். வறுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் குறைந்த வருமா-னம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் (100,000) பயிற்சி பெறாத நபர்களுக்கு அரச துறையில் வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளோம்.

அரச துறையில் புதிதாகப் பணியமர்த்தப்படுபவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக அரசாங்கம் மாதாந்தம் சுமார் 3.5 பில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது. சவால்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பில் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. நீர் வழங்கல், எரிசக்தி, போக்குவரத்து, நகர்ப்புற மேம்பாடு, சுகாதாரம், கல்வி மற்றும் வறுமை ஒழிப்பிற்காக தொடர்ந்து மேற்கொண்டுள்ள முதலீடுகள் கொவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியிலும் இது பொருளாதாரத்தின் இயக்கவியல் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் திறனை நிரூபித்துள்ளது.

எவ்வாறாயினும், அண்மைக் காலங்களில் அரச நிதி தொடர்பாக பல கடுமையான சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இருப்பினும், எதிர்வரும் காலங்களில் எதிர்பார்த்தபடி பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்திக்கான வசதிகளை ஏற்படுத்தல் என்பவற்றை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

தொற்றுநோயின் தாக்கத்தால் நமது பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது. அந்நியச் செலாவணி, பணப்புழக்கம் மற்றும் ரூபாயின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்கு, எதிர்காலத்தில் அந்நியச் செலாவணி வரவைப் பாதுகாக்க அரசாங்கமும் மத்திய வங்கியும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

உலகளாவிய சுற்றுலாத் துறை மீள ஆரம்பிக்கப்பட்டதுடன், இலங்கையின் சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க சாதகமான வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டில் பணியாற்றுபவர்கள் அனுப்பும் பணத்தை வங்கி முறைக்கு ஈர்ப்பதற்கும் நாங்கள் மத்திய வங்கியுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

வெளிநாட்டுத் துறையின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதற்கு குறுகிய கால மூலோபாய திட்டங்கள் உட்பட பொருளாதாரத்தில் அனைத்து பங்குதாரர்களின் நம்பிக்கையை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட "பாரிய பொருளாதாரம் மற்றும் நிதி அமைப்புகளின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான ஆறு (6) மாதக் கண்ணோட்டம்" மத்திய வங்கியினால் அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டமை குறித்தும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

பொருளாதாரம் ஒரு சவாலான காலகட்டத்தை கடந்து செல்வதை நாம் அறிவோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட முற்போக்கான முன்மொழிவுகள் எதிர்காலத்திலும் அதற்குப் பின்னரும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்' அவர்களின் தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்ட "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கையில் எமது எதிர்காலத் திட்டங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைவருக்கும் பயனளிக்கும் மக்களை மையமாகக் கொண்ட சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் சிறந்த பலம் கிடைத்துள்ளது.

நாடு எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கு நாம் செயற்படுத்தும் நிலையான வேலைத்திட்டத்துடன் கைக்கோர்த்து நாட்டின் எதிர்கால பயணத்திற்கு பங்களிக்குமாறு அனைவரிடமும் கோருகின்றோம் என பிரதமர் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்குலகப் பயணம் தொடர்பில் தமிழர்களுக்கு சந்தேகம்

**த**மிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கான விஜயம் ராஜபக்ச அரசுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுமா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

வார இறுதியில் கொழும்பில் இருந்து அமெரிக்கா சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட உயர்மட்ட சட்டத்தரணிகள் குழு பின்னர் கனடா மற்றும் ஐக்கிய இராச்சியத்திற்கு செல்லவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுமந்திரனை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் இங்கிலாந்தில் சந்திக்க உள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார செயலகத்தின் அழைப்பின் பேரில் வொஷிங்டன் பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் குழு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி கே. கனக ஈஸ்வரன் மற்றும் சட்டத்தரணி டாக்டர் நிர்மலா சந்திரஹாசன் ஆகியோரைக் கொண்டுள்ளது.

“சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து இலங்கை அரசைக் காப்பாற்ற” தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் வெளிநாட்டு அரச தலைவர்களைச் சந்திக்கப் போவதாக 1730 நாட்களாகப் போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி வவுனியா சத்தியாக்கிரக மைதானத்தில் 15 வருடங்களுக்கு முன்னர் வீதியில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நடராஜா ரவிராஜின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அமெரிக்கா சென்று தமிழ் மக்களை அவமானப்படுத்த வேண்டாம் என வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின்



செயலாளர் கோபாலகிருஷ்ணன் ராஜ்குமார் சுமந்திரன் உள்ளிட்டவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

## அமெரிக்க தலையீடு

அரசாங்கம் கொண்டுவர திட்டமிட்டுள்ள புதிய அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அப்பால் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதே தமது நோக்கமென தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்த ஆர்.சம்பந்தன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குழு, புதிய அரசியலமைப்பு தொடர்பாக நிபுணர்கள் குழுவொன்றை வொஷிங்டனுக்கு அனுப்புவதாக தெரிவித்திருந்தனர். இதற்கமைய இந்த பயண ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் ஸ்தாபகப் பங்காளியாக அமெரிக்கா தனது அபிலாஷைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமை ஒப்புக்கொண்டுள்ளது.

ராஜபக்ச அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு வரும் புதிய அரசியலமைப்பை கருத்திற் கொண்டு அதிகாரப் பகிர்வுக்கான சமஷ்டி தீர்வு தொடர்பில் அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வார இறுதி ஆங்கில பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தார்.

“எங்கள் அரசியல் அபிலாஎ‘கள் என்ன என்பதையும், அமெரிக்காவைப் போன்று ஏனைய நாடுகளில் உள்ள கூட்டாட்சி கட்டமைப்புகளை ஆராய்வதன் ஊடாகவும் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்க்க காணலாம் என்பதை விளக்குவோம்” என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு வரைபு இந்த வருட இறுதிக்குள் தயாராகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தியுள்ளார். ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரி தமிழ்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் தலைமைத்துவ மட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழுவினரின் அமெரிக்க விஜயம் அமைந்துள்ளது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கட்சிகள் பிரசன்னமாகியிருந்த போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலமான கட்சியான தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

மேலும், நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பன இதற்கு பங்களிப்பு வழங்கவில்லை.

சம்பந்தன், சுமந்திரன் மற்றும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை




சேனாதிராஜா ஆகியோரை நவம்பர் 11ஆம் திகதி சந்தித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, தமிழ்-முஸ்லிம் கட்சித் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு பங்களிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மனோ கணேசனும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் எதிர்காலத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனை தம்முடன் இணைத்துக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

ஒற்றையாட்சியின் கீழ் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், வடக்கு, கிழக்கை இணைத்து சமஷ்டி முறைமையை ஏற்றுக்கொள்வதே தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வாகும் என அமெரிக்கா செல்லும் குழு வலியுறுத்த வேண்டுமென, முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக இந்தியாவின் தலையீட்டுடன் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 13வது திருத்தம் ஒற்றையாட்சியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்வாக கட்டமைப்பாகும் என, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மீளமுடியாத அதிகாரப் பகிர்வைக் கோருவதே தேசியப் பிரச்சினைக்கான தீர்வாகும் எனவும், அதற்கு சமஷ்டி முறையே தீர்வு எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

TAMILS SOCIETY OF PEEL
பீல் தமிழ் முதியோர் சங்கம்
Not profit Registration # 1406004 (Established in 1999)

JOB POSTING – PROJECT COORDINATOR DATE NOVEMBER 1 2021

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors & others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active & healthy lifestyle by organizing weekly activities and health seminars.

The project coordinator will report to the STSP secretary & will work on.
- Ensuring project activities adheres to provided timelines & deliverables
- Ensuring documentation is maintained throughout the length of the project
- Communicating plans, actions, & issues with Board of directors
- Working with the STSP treasurer to record all financial transactions & creating monthly financial reports for projects
- Analyzing project data & producing progress reports
- Teaching basic computer programs such as Word, Excel & Zoom to seniors
- Maintaining & updating the STSP Webpage periodically
- Support in organizing the weekly activities for seniors.

QUALIFICATIONS/EXPERIENCE:
- Diploma/Degree in Accounting & Computer programs
- Two years' experience working on computerized accounting such as Quick Books
- Experience in teaching basic computer programs
- Experience on designing & updating websites
- Effective interpersonal, communication & organizational skills
- Working knowledge of community resources & services for seniors in Peel & relevant government programs and policies
- Ability to work with a teams of seniors
- Fluency in Tamil & English languages

Salary and benefits: Negotiable & according to the experience
Duration of engagement:
Minimum of one year on part time basis with possible extension.
Minimum 20 hours per week working hours required.

Deadline for application: November 10, 2021
Please forward your application with your updated resume by email to:
info@peeltamilseniors.ca
Nadarajah Moorthy
Secretary
Cell: (416) 473-5380, nmoorthy10@gmail.com
250 Dundas Street West , Unit 206, Mississauga, Ontario, L5B 1J2
Tel: 905-290-3000
Email: info@ peeltamilseniors.ca, peelseniortamils@hotmail.com
Visit us at www.peeltamilseniors.ca

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பளையில் மரநடுகை

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுப் பல்வேறு இடங்களிலும் மரநடுகையை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒருகட்டமாக ஞாயிற்றுக்கிழமை (14.11.2021) பளையில் மரநடுகை இடம்பெற்றுள்ளது.

முகமாலை தெற்கு தூய ஆரோக்கியமாதா ஆலய வளாகத்தில் நிழல் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டதோடு, பொது மக்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இம்மரநடுகையில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன், சூழல் பாதுகாப்பு அணி-யின் துணைச் செயலாளர் த. யுகேஸ், ஆலயத்தின் அருட்பணிச் சபையின் அங்கத்தவர்கள் ஆகியோருடன் பொது மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.











தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரந-டுகை மாதத்தை முன்னிட்டுப் பொதுமக்களுக்கும், பொது அமைப்புகளுக்கும் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மக்கள் சேவைக்காக வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதற்கு ஓய்வூதியம் — இரா. சாணக்கியன் கேள்வி

மக்கள் சேவைக்காக வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதற்கு ஓய்வூதியம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்கு உரையாற்றிய போ-தே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "ஆளும் தரப்பினரும், எதிர் தரப்பினரும் கொள்ளையடித்தவர்கள் தொடர்பாக பேசுகிறார்கள். நாமும் இந்தக் கொள்ளையர்கள் எப்போது பிடிப்பட்டு சிறைக்குச் செல்வார்கள் என்பதை காண ஆவலாக இருக்கிறோம். மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்கள் இருந்தால், அவர்களை சிறையில் அடையுங்கள். நாமும் அதனைக் காண மகிழ்ச்சியாக காத்துக் கொண்டிருக்கிறோம்.

நிதியமைச்சரின் 2022 வரவு - செலவுத் திட்ட உரையானது, திருமண வீட்டில் கதைக்க வேண்டிய கதையை மரண வீட்டில் கதைத்ததைப் போன்றுதான் காணப்பட்டது. மிகவும் சவால் மிக்கதொரு காலத்தில் தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாமும் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், நிதியமைச்சரின் ஊடாக மக்களுக்கு ஏதேனும் நிவாரணங்கள் கிடைக்கும் என எதிர்ப்பார்த்தோம்.

இந்த வரவு - செலவுத் திட்டமானது, இலங்கையின் பொருளாதாரம் குறித்து அக்கறையில்லாமல் தயாரித்தது போன்றுதான் காணப்படுகிறது. உதாரண-மாக, ஒரு கிராம அபிவிருத்திக்காக 3 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது எதிர்வரும் தேர்தலை குறிவைத்து கொண்டுவரப்பட்டதாகவே தெரிகிறது.

செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டிய இந்த நேரத்தில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் அவசியமா? என்பதைத்தான் நாம் சிந்திக்க வேண்டும். இது நாட்டின் அபிவிருத்தியை பெரிதும் பாதிக்கும். 30 வருடமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கென விசேட நிதிகள் ஒதுக்கப்படவில்லை.

வீதிகளை அபிவிருத்தி செய்யும்போதும், மக்களுக்கு பயனுள்ளதாக அவற்றை அமைக்க வேண்டும். மாறாக பிரதேச சபை உறுப்பினருக்காகவோ, கட்சித் தொண்டர்களுக்காகவோ, நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்களுக்காகவோ வீதிகளை நிர்மானிக்கக்கூடாது. அத்தோடு, வேலை செய்ய முடியாத இராஜாங்க அமைச்சர்களை அரசாங்கம் பதவிலிருந்து விலக்க வேண்டும். அவருக்கு வாகனம் கொடுத்து, டீசல் கொடுத்து, சாரதி, அலுவலம், சம்பளம் என எல்லாம் கொடுத்து அவரால் வேலை செய்ய முடியாவிட்டால் அவர் அந்தப் பதவியில் இருப்பதில் பயனில்லை.

அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களாலேயே நன்றாக வேலையை செய்ய முடியும். எனவே, அரசாங்கம் இதுதொடர்பாகவும் சிந்தித்து, ஒரு கொள்கை முடிவொன்றை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் தொடர்பாக பேசப்படுகிறது. எனக்கு வயது 31 தான் ஆகின்றது. எனக்கு உண்மையில் ஓய்வூதியம் தற்போது தேவையில்லை. என்னைப் பொறுத்தவரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் எனும் ஒன்றே தேவையில்லை. மக்கள் சேவைக்காக வரும் உறுப்பினர்களுக்கு எதற்கு ஓய்வூதியம்?

ஓய்வூதியம் தொடர்பான சர்ச்சை தற்போது எழுந்துள்ள நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இரவு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துக் கொண்டு குறித்த விடயம் தொடர்பாக அதிருப்தியடைந்துள்ளனர் என நான் அறியக்கிடைத்தேன். மக்களை ஏமாற்றும் வகையில் கருத்துக்களைக் கூறாமல், பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டுமெனில் சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்தே ஆக வேண்டும்.

இன்று நாட்டில் எரிப்பொருள் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, எரிப்பொருள் விலை குறித்து சூத்திரமொன்றை அறிமுகப்படுத்தினார். இது அப்போது கடுமையாக கேலிக்குள்ளாக்கப்பட்டது.

ஆனால், இதனை நடைமுறைப்படுத்தியிருந்தால் உண்மையில் எரிப்பொருள் கொள்வனவிற்கு அரசாங்கத்தினால் செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. இன்று சம்பளத்தை வழங்கக்கூட பணத்தை அச்சடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், அரசாங்கம் கூறியுள்ள சில விடயங்களை நடைமுறைப்படுத்த எங்கிருந்து பணம் கிடைக்கப்போகிறது என்று இதுவரை தெரியவில்லை.

அன்று எம்.சி.சி.க்கு எதிர்ப்புத் தெரிவித்த தேச அபிமானிகளில் ஒருவர் கூட கொழும்பு, துறைமுக நகரத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அரசாங்கம் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் சுப்பர் சார்ஜ் டெக்ஸை விதித்துள்ளது. 1960 களில் கூட இந்த வரி விதிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் நிதியமைச்சராக ரவி கருணாநாயக்க இருக்கும்போது, இவ்வாறான வரியைத் தான் விதித்திருந்தார். 2019 ஆம் ஆண்டு வரை பொருளா-தாரம் மற்றும் வரிகள் தொடர்பான கொள்கைகள் நன்றாகத் தான் நாட்டில் காணப்பட்டது. மக்களும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தார்கள். இதனை மாற்றுமாறு மக்கள் அரசாங்கத்திடம் கூறவில்லை.

ஆனால், இந்த அரசாங்கம் வந்தவுடன் அனைத்தையும் இல்லாது செய்து, தனக்கு நெருக்கமான தரப்பினர் பயனடையும்வகையில் தான் புதிய வரிகளை விதித்தார்கள்.

தற்போது மீண்டும் சுப்பர் சார்ஜ் டெக்ஸை விதித்துள்ளார்கள். உண்மையால் இதனால் முதலீட்டாளர்களுக்கான நம்பிக்கை இல்லாமல் போகும் அபாயம் காணப்படுகிறது.

வரிக்கொள்கைகள் தொடர்பாக நாம் சர்வதேச நாடுகளின் உதவியை பெற்றுக் கொள்ள வேண்டும். முடிந்தால் சர்வதேச நாணய நிதியத்தில் ஆலோசனை-களைப் பெற்று இதனை வகுக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை முழுவதும் தற்போது சுமார் 300 தேசியப் பாடசாலை-கள் காணப்படுகின்றன. நாட்டில் ஒட்டுமொத்தமாக 4 மில்லியன் மாணவர்கள் இருக்கிறார்கள். 1000 தேசியப் பாடசாலைகளை புதிதாக அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஊடாக சுமார் 2000, 3000 மாணவர்கள்வரை தேசி-யப் பாடசாலைகளுக்குச் செல்வார்கள். மாகாணப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 10 ஆயிரமாக உள்ள நிலையில், அதிலிருந்து ஆயிரம் மாணவர்கள்வரை தேசியப் பாடசாலைக்குச் சென்றால், மாகாணப் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களின் விகிதம் குறைவடை-யும் நிலைமைக் காணப்படுகிறது. இது மாகாணசபைகளை பலவீனப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடா எனும் கேள்வியும் எழுகிறது. எமக்கு இப்போது தேச-ியப் பாடசாலைகள் தேவையில்லை. மாறாக அனைத்துப் பாடசாலைகளையும் தேசியப் பாடசாலைகளின் தரத்திற்கு உயர்த்த வேண்டும்.

சுகாதாரத் துறையை எடுத்துக் கொண்டால், நாம் பொது வைத்தியசாலைகளின் தரத்தை மேலும் அதிகரிக்க வேண்டும். சுகாதாரத்துறையை மேம்படுத்த சிறிய வரிவிதிப்பை செய்தால் கூட அதனை பொது மக்கள் ஒருபோதும் நிராகரிக்க மாட்டார்கள். இதில் வரும் நிதியைக் கொண்டு, சுகாதாரத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு, சுற்றுலாத் துறையென்பது இலங்கையில் பொருளாதாரத்திற்கு முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

ஆனால், சுற்றுலாத்துறையில் அண்மையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஒரு நாளைக்கு 5 மில்லியன் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. என-ினும், இந்தத் தொகை சரியானதா என்பதை அரசாங்கம் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். சுற்றுலாத்துறையை மேம்படுத்த சுப்பர் மார்க்கட்டுகளில் மதுபானங்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது. அப்படி ஒரு திட்டமிருந்தால் தயவு செய்து வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கோ பின்தங்கிய கிராமங்களுக்கோ அதனை நடைமுறைப்படுத்த வேண்டாம் என நான் கேட்டுக் கொள்கிறேன். சுற்றுலாப் பயணிகளின் வருகைக் குறைவாக இருக்கும் இந்தக் காலப்பகுதியில் இவ்வாறாதொரு திட்டம் கொண்டுவரப்பட்டால், அதனை அந்தக் கிராமத்தில் வசிப்போர்தான் கொள்வனவு செய்து குடிப்பார்கள்.

தற்போது இருக்கும் மதுபானசாலைகளின் எண்ணிக்கையே போதுமானதா-கும். கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு செல்ல 7 மணித்தியாலங்கள் செல்கிறது. யாழ்ப்பாணத்திற்கு செல்ல 8 மணித்தியாலங்கள் தேவைப்படுகிறது.

நான் வெளிவிவகார அமைச்சின் ஆலோசனைக் குழுவிடம் சென்று இராமேஸ்வரம் - மன்னார் படகு சேவையை மீள ஆரம்பிக்குமாறும், பலாலி விமானநிலையத்தை இயக்குமாறும், மட்டக்களப்பு உள்ளூர் விமானநிலையத்தை புனரமைத்து விமானசேவைகளை ஆரம்பிக்குமாறும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்திருந்தேன்.

வடக்கு-கிழக்கிற்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க பல்வேறு யோசனை-களை நாம் முன்வைத்துள்ளோம். அரசாங்கம் இந்த விடயங்களில் அக்கறை செலுத்தவில்லை. இந்தியாவுடன் இலங்கை நட்புறவாக இருப்பதாக கூறிக் கொள்ளும் இந்த அரசாங்கம், இந்தியாவுடனான சுற்றுலாத் துறையை மேம்படுத்த எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை.

தற்போது பிரதமராக இருக்கும் மஹிந்த ராஜபக்'வுக்கு நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க கடந்த காலங்களில் இரண்டு தடவைகள் பொன்னான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

யுத்தம் முடிவடைந்தவுடன் 2010 இல் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக் கொண்ட நாடாளுமன்றம் இருந்தது. 18 ஆம் திருத்தச்சட்டத்தை கொண்டுவந்தார். சர்வதேசத்தின் ஆதரவும் இருந்தது. ஆனால், அவரால் நாட்டின் தேசியப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் போனது. தற்போது மூன்றாவது முறையாக மீண்டும் ஆட்சிக்கு இவர்கள் வந்துள்ளார்கள். இப்போதாவது இந்தப் பிரச்சினைகளுக்கு இவர்கள் தீர்வினை வழங்க வேண்டும்.

ஆசியாவில் மூத்த அரசியல்வாதியாக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, ஏன் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்காமல் இருக்கிறார்? அனைவருக்கும் சமமான உரிமையை வழங்குமாறுதான் தமிழ் மக்கள் கோருகிறார்கள். இதனை ஏன் வழங்க முடியாமல் உள்ளது?

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வினை முன்வைக்கத் தவறினால், 30-40 வருடங்கள் கிழித்து ராஜபக்ஷவினரை மக்கள் தூற்றும் நிலைமை நிச்சயமாக ஏற்படும். ராஜபக்ஷவினரால் தான் இந்த நாடு அழிவடைந்தது எனும் வரலாறு பதியப்படும். இந்த நிலைமைக்கு செல்ல வேண்டாம் என்று தான் நாம் கேட்கிறோம்.

அரசாங்கம் இன்று செய்யும் இந்தச் செயற்பாடுகளினால் எமது வருங்கால சந்ததியினர்தான் பாதிக்கப்படுவார்கள். நாம் பிளவடையாத நாட்டுக்குள்தான் ஒரு தீர்வை எதிர்ப்பார்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரிவினைவாதக் கட்சியாக சித்தரித்து தான் இதுவரை காலமும் நீங்கள் வாக்குக் கேட்டீர்கள். ஆனால், இனியும் இவற்றை மக்கள் நம்பத் தயாரில்லை." எனக் குறிப்பிட்டுள்ளார்.


தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக
உலகெங்கும்
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா மற்றும் பாரம்பரிய உணவுகள்...
Coriander
Chilli
Jaffna
Briyani
Chicken
கனடாவில் Tasty Tamila தயாரிப்புகள் கிடைக்கும் இடங்கள்:-
Shankar & Co (Kennedy & Eglinton)
Gunam Supermarket (Morningside & Sheppard)
தேன் நெல்லி
நாட்டு சக்கரை
கருப்பட்டி
வியாபார தொடர்புகளுக்கு
+1 647 762 9512
+91 7845 00 6977


MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்
உங்களைக் கேளுங்கள்?
நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?
gta™ credit
மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.
உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்
Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400
Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3
Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2
North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6
Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7
Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3
Mark Shamly
Tamil Consultant
Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com
Ajay Oberoi
Experienced Credit Counsellor

# சோமாலியா ஆகிறதா ஸ்ரீலங்கா?

- பார்த்தீபன்

**எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமசிங்க கூறியதைப் போல புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியைப் பெற்றால் பொருளாதார நெருக்கடியில் இருந்து ஸ்ரீலங்கா மீளலாம். புலம்பெயர் தமிழர்களே உலகின் பலமான அமைப்பு என்றும் நிதி மற்றும் திறமை அவர்களிடமே உண்டு என்றும் அவர் கூறியுள்ளார். தமிழர்களின் தேசத்தை அவர்களிடம் கொடுத்து, அவர்களின் ஆளும் உரிமையை அவர்கள் வசமே விடுவதன் வாயிலாக இதனை ஸ்ரீலங்கா அரசு பெற்று பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளலாம்.**



பூகோளமயமாதல் சூழலில் பன்னாட்டுக் கரங்களின் கைகோர்ப்பின் மத்தியில் சர்வதேச நாடுகளின் மைதானமாக இலங்கை மாறிவிட்ட நிலையில் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி என்பது தவறான அரசியல் தீர்மானங்களின் விளைவு ஆகும். ஒரு பக்கம் யுத்த ஆயுதங்களின் போர், இன்னொரு பக்கம் பொருளாதாரத் தடை என்றும் மற்றொரு போர் இதற்கு மத்தியிலும் அன்றைக்கு தமிழீழம் தன்னிறைவாக இருந்தது எனப்தை இப்போதும் ஒரு பாடமாக ஒரு வரலாற்றுச் சாதனையாக நாம் மீட்டிப்பார்க்க வேண்டியுள்ளது. புலிகள் இல்லாத இலங்கை அரசியலில் மாத்திரமின்றி பொருளாதாரத்திலும் வெறுமையை நிரப்பியுள்ளது.

இலங்கைத் தீவில் ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக போராடத் துவங்கிய போது எஞ்சிய உரிமைகளும்கூட பறிக்கப்பட்டன. தமிழர்கள் கல்வி உரிமை வேண்டும் என்று போராடினார்கள். பள்ளிக்கூடங்களின்மீது குண்டுகள் வீசப்பட்டன. தமிழர்கள் நிர்வாக உரிமை வேண்டும் என்று போராடினார்கள். எஞ்சிய நிர்வாகங்களும் அழிக்கபட்டும் பறிக்கப்பட்டும் அநீதிகள் நிகழ்த்தப்பட்டன. தமிழர்கள் தங்களைத் தாங்கள் ஆள வேண்டும் என்று கோரி போராடினார்கள். ஒட்டுமொத்தமாக ஊரோடும் மண்ணோடும் மக்கள் அழித்து ஒழிக்கப்பட்டார்கள்.

இதன் இன்னொரு ஆயுதமாக பொருளாதாரத் தடையை இலங்கை அரசு தமிழர்கள்மீது திணித்தது. பசி என்பது இந்த உலகின் பொல்லாத வலி. தமிழர்கள் விடுதலைப் பசியில் போராடிய போது ஸ்ரீலங்கா அரசு அவர்களின் வயிற்றில் அடித்தது. இன்றைக்கு இலங்கையில் பொருளாதார நெருக்கடி தோற்றுவிக்கப்பட்ட தருணத்தில் கொழும்பில் அருசிக்காக நீண்ட வரிசையில் நிற்கும் மக்களையும் மண்ணெண்ணைக்காக நீண்ட வரிசையில் நிற்கும் மக்களையும் பார்க்கின்ற போது அன்றைக்கு வடக்கு கிழக்கில் ஒவ்வொரு பல நோக்குச் சங்கங்களிலும் நீண்ட வரிகைகளில் நிற்கின்ற மக்கள்தான் நினைவுக்கு வருகின்றனர்.

அரிசி, கோதுமை மா, சீனி, தேயிலை என்ற அடிப்படை உணவுப் பொருட்களை இலங்கை அரசு தடுத்தது. வடக்கு கிழக்கு மக்களுக்கு அவற்றை கிடைக்கவிடாமல் இன்னொரு தேச மக்களாக கருதி அவர்கள்மீது பொருளாதாரப் போர் தொடுத்தது. சவற்காரம், பற்றி, மண்ணெண்ணை என அன்றாடம் மக்களுக்குத் தேவையான பொருட்களை தடுத்த போது வடக்கு கிழக்கு மக்கள் அடைந்த நெருக்கடி சொல்லி மாளாதவை. 90களின் ஆரம்பம் முதல் 2001 வரையான அந்தக் காலம் நினைத்துப் பார்க்க முடீயாத கொடுங்காலம். பசியினால் தாகத்தினால் தமிழினம் துடித்தபோது சீர்மையான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இறங்கியது விடுதலைப் புலிகள் இயக்கம்.

வடக்கு கிழக்கு மண்ணுக்கு உகந்த வகையில் உற்பத்திகள் திட்டமிடப்பட்டன. வீட்டுத் தோட்டம், விலங்கு வளர்ப்பு, பொருள் உற்பத்திகள், தொழிற்சாலைகள் என விடுதலைப் புலிகளின் அரசினாலும் வடக்கு கிழக்கின் தனியார் நிறுவனங்களினாலும் பாரிய பொருளாதார முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அன்றைக்கு தமிழீழத்தின் நிதிநெருக்கடியை தீர்த்து சிறப்பான நிதிநிர்வாகத்தை தமிழீழ நிதித்துறை மேற்கொண்டது. அத்துடன் தமிழீழ வைப்பகம் வழியாக சேமிப்பு மற்றும் எளிய வட்டியில் தொழில் முனைவுகளுக்கான கடன்கள் வழங்கப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயம் மற்றும் விலங்கு வளர்ப்பு திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டின. போரால் இடம்பெயர்ந்து அகதிகளாக அலைந்த நிலத்திலும் காடு வெட்டி மண்ணை உழுது பயிர் நட்டு அறுவடை செய்து மக்கள் தமது பசியைப் போக்கி பிறர் பசியையும் போக்கிய அந்தக் காலம் உன்னதமான நினைவுக்காலமாகும். ஸ்ரீலங்கா அரசின் பாரபட்சமே தமிழீழத்திற்கு வலிகோலியது என்பதைப் போலவே ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையே தமிழீழப் பொருளாதாரத்துறையை உருவாக்க வழிகோலியது.

ஸ்ரீலங்கா அரச படைகளின் சுற்றி வளைப்பு மத்தியிலும் தமிழீழத்திற்குத் தேவையான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதுவும் விடுதலைப் புலிகளின் சாதனையாக கருதப்படுகிறது. ஸ்ரீலங்கா அரசின் ஒடுக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க விடுதலைப் புலிகள் ஒவ்வொரு நிர்வாக அலகையையும் உருவாக்கி தமிழீழ அரசை விரிவுபடுத்தத் துவங்கினார்கள். இதனால் ஏராளமான இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களும் போதிளவிலான ஊதியமும் வழங்கப்பட்டன. அன்றைய காலத்தில் ஸ்ரீலங்கா அரசு அரச ஊழியர்களுக்கு வழங்கிய சம்பளத்தை விஞ்சுகின்ற வகையில் தமிழீழ அரசின் கொடுப்பனவு அமைந்தது.

ஒரு நாட்டின் பொருளாதார நிலமையை சொல்லாமல் சொல்பவர்கள் அந்நாட்டின் குடிமக்கள்தான். அவர்களின் வாழ்வியல் செழுமையும் உயர்வும்தான் ஒரு நாட்டை அளக்கும் பொருளாதார அளவுக் கருவியாகும். குறிப்பாக நாட்டின் நெருக்கடியும் தீர்க்க தரிசனமற்ற பொருளாதாரக் கொள்கைகளும் குடிமக்களை பிச்சைக்காரர்கள் ஆக்குகிறது. தமிழீழம் பிச்சைக்காரர்கள் அற்ற நாடாக அன்றைக்கு இருந்தமைதான் தமிழீழத்தின் தன்னிறைவான வளர்ச்சிக்கு சிறந்த அடையாளமாக இருந்தது. இன்றைக்கு பெரும் செல்வந்தர்கள்கூட பிச்சைக்காரர்கள் ஆகின்ற நிலைமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது வெளிநாட்டுத் தூதரகங்களின் முன்னால் சிங்கள இளைஞர்கள் விசாவுக்காக வரிசையில் நிற்பதாகவும் நாளுக்கு நாள் இந்தத் தொகை அதிகரிக்கிறது என்றும் ஸ்ரீலங்கா எதிர்கட்சியினர் சொல்லுகின்றனர். இதற்கு பதில் அளித்துள்ள ஸ்ரீலங்கா அரச தரப்பினர் வெளிநாடு செல்வது நல்லதுதான் என்று சொல்கின்றனர். தமிழர்கள் தமது மண்ணில் தம்மை தாமே ஆளக்கூடாது என்று இனவழிப்புப் போரை செய்தது சிங்கள அரசு. இன்று சிங்கள மக்களே தென்னிலங்கையை விட்டு புலம்பெயர்கின்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது. நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம் பொருளாதார நெருக்கடி இலங்கை மக்களின் கழுத்தை நெறிக்கிறது.

எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமசிங்க கூறியதைப் போல புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியைப் பெற்றால் பொருளாதார நெருக்கடியில் இருந்து ஸ்ரீலங்கா மீளலாம். புலம்பெயர் தமிழர்களே உலகின் பலமான அமைப்பு என்றும் நிதி மற்றும் திறமை அவர்களிடமே உண்டு என்றும் அவர் கூறியுள்ளார். தமிழர்களின் தேசத்தை அவர்களிடம் கொடுத்து, அவர்களின் ஆளும் உரிமையை அவர்கள் வசமே விடுவதன் வாயிலாக இதனை ஸ்ரீலங்கா அரசு பெற்று பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளலாம்.

அத்துடன் கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சி நீடித்தால் சோமாலியா போலவும் எதியோப்பியா போலவும் ஸ்ரீலங்காவில் பசியால் மக்கள் செத்து விழுவார்கள் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. தமிழர்களின் நிலத்தில் இரசாயனக் குண்டுகளை வீசி இனப்படுகொலை செய்தும் அந்த இனப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் உடல்களை மக்கச் செய்ய சீனாவின் இராசயனப் பதார்த்தங்களை மண்ணில் ஊற்றியும் நிலத்தை இனப்படுகொலை செய்த கோத்தபாய ராஜபக்ச இப்போது நிலத்தை காக்கவே உர இறக்குமதியை நிறுத்தியதாக புனிதர் வேடம் போடுகிறார். இன்றைக்கு இனப்படுகொலை குற்றத்தை மறைத்து அதிலிருந்து தப்ப, பொருளாதார நெருக்கடி யுத்தத்தை கோத்தபாய முடுக்கி உள்ளார் என்பதை பற்றியே நாம் இங்கு அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

# பிரபல எழுத்தாளர் கோவி.மணிசேகரன் காலமானார்



திரைப்பட இயக்குனரும், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளருமான கோவி. மணிசேகரன் (95) வயது மூப்பு காரணமாக காலமானார்.

1992ல் இவர் எழுதிய வரலாற்றுப் புதினமான குற்றால குறவஞ்சி தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. இவர் எட்டு நாடகங்கள், 29 சிறுகதைத் தொகுப்புகள், 50 வரலாற்றுப் புதினங்களை எழுதியுள்ளார்.

கே.பாலசந்தரிடம் உதவி இயக்குனராக இருந்த இவர் தென்னங்கீற்று படத்தை இயக்கியுள்ளார். இவருடைய மறைவிற்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# ஆண்டுகள் 20 ஆனாலும் தத்தளிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு – நிறைவுப் பகுதி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)



சரித்திரப் பாடங்களில் சம்பவங்களைக் குறிப்பிடும் போது காலத்தை அறிந்து கொள்வதற்காக கி.மு அல்லது கி.பி என்று குறிப்பிடுவது வழக்கம். அதில் சில மாற்று கருத்துக்கள் இருந்தாலும், அது பொதுவாக கிறிஸ்துக்கு முன் அல்லது கிறிஸ்துக்கு பின் அன்று அறியப்படுகிறது. அதாவது 2020 ஆண்டுகளுக்கு முன்னர் அல்லது அதற்கு பின்னர் என்று அதைப் புரிந்து கொள்ளலாம். இந்தியாவில் இராமாயணம் மற்றும் மகாபாரத காலங்களைக் குறிக்கும்போதோ அல்லது இதர காலங்களைக் குறிப்பிடும் போது கிருத யுகம், தூவபர யுகம், திரேதாயுகம் என்றும் தற்போதைய காலத்தை கலியுகம் என்று குறிப்பிடும் வழக்கமுள்ளது.

தற்போது கலிகாலம் நடைபெறுகிறது. எனவே சத்தியம், நீதி, நேர்மை, ஆகியவற்றுடன் ஜனநாயகம், உழைப்பு, போன்றவற்றை எதிர்பார்க்க முடியாது என்பதைப் பல முனிவர்கள் மற்றும் ஆன்மீகப் பெரியவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர் என்பதை இந்து மதத்தில் நம்பிக்கைக் கொண்டவர்கள் கூறுகின்றனர்.

இதே கலியுகத்தில் தர்மத்தை மீறிச் செயல்படுபவர்களுக்கு என்னவாகும் என்றும் குறிப்புணர்த்தப்பட்டுள்ளது. அதில் தர்மம் என்பது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும். அதில் போர் தர்மமும் அடங்கும். இப்படி பெரியவர்கள் மற்றும் புராணங்கள் கூறுவதை வைத்துப் பார்க்கும் போது இலங்கை தர்ம பூமியா அங்கு நீதி நேர்மை மற்றும் ஜனநாயகம் நிலவுகிறதா என்பதற்கு விளக்கம் தேவையில்லை.

இலங்கையில் “தந்தை” செல்வா தொடங்கிப் பல தமிழ்த் தலைவர்கள் பல காலகட்டங்களில் ஆளுமை செலுத்தி வந்துள்ளனர். இதில் பொன்னம்பலம் இராமநாதன், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், ஆனந்தசங்கரி, ராஜதுரை, முருகேசு சிவசிதம்பரம், வல்லிபுரம் நல்லதம்பி நவரத்தினம் போன்ற பலர் வடக்கிலும் கிழக்கிலும், மலையகத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான் போன்றோரும் அரசியல் மற்றும் தமிழ்ச் சமூகத்திற்காகப் பங்காற்றியுள்ளனர். இவர்களை போன்று எண்ணற்ற தலைவர்களும் தொண்டர்களும் தமிழ் மக்களின் உரிமைகள், ஜனநாயகத்தின் ஆட்சி, தர்மத்தின் அடிப்படையில் தமிழர்களுக்கு நியாயம் போன்ற விஷயங்களுக்குக்காகப் பாடுபட்டுள்ளனர். அவ்வகையில் இன்று இலங்கையில் ஆளுமை செலுத்தி வரும் மூத்த தமிழ்த் தலைவர் என்றால் அது சந்தேகத்திற்கு இடமின்றி ராஜவரோதயம் சம்பந்தர் ஐயா என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மிக நீண்ட நாடாளுமன்ற அனுபவமும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ள சம்பந்தர் தமிழ் மற்றும் இலங்கை அரசியலைக் கரைத்துக் குடித்தவர். மும்மொழியிலும் நல்ல புலமை கொண்டவர். தெளிவாகவும், தான் சொல்ல விரும்புவதை மட்டுமே சொல்லக் கூடியவர். இராஜதந்திர வழிமுறைகளைச் சிறப்பாகக் கையாளக் கூடியவர், 88 வயதைக் கடந்த நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்று அவரைப் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். அவரது அரசியல் அனுபவம் மற்றும் ஆளுமை காரணமாக இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற ஒரு அரசியல் கலவை ஏற்படுத்தப்பட்ட போது அதற்குத் தலைவராக அவரே நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து இன்றுவரை மிகக் கடுமையான விமர்சனங்களைக் கடந்து இன்றளவும் கூட்டமைப்பின் தலைவராக நீடிக்கிறார்.

ஆனால் இன்னும் எவ்வளவு காலம் அவரால் கூட்டமைப்பிற்குத் தலைமையேற்று வழிநடத்த முடியும் என்கிற மிகப் பெரிய கேள்வி உள்ளது. அவ்வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதர்க்காலத்தை ச.மு -ச.பி அதாவது சம்பந்தருக்கு முன் மற்றும் -அவர் காலம் மேலும்- சம்பந்தருக்குப் பின் என்று பார்க்க வேண்டியுள்ளது. கூட்டமைப்பு தொடங்கப்பட்டதன் நோக்கம் அதன் பின்புலம், தேவை, 2000 ஆம் தேர்தலில் ஏற்பட்டிருந்த நெருக்கடி, தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை ஆகியவை குறித்து முந்தைய மூன்று பகுதிகளில் பார்த்தோம்.

விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் மற்றும் சூழல், போர் மற்றும் அதற்கு பிந்தையக் காலம் மற்றும் இன்றுவரை அந்த அமைப்புக்கு வேறு யாராவது தலைவராக இருந்திருக்க முடியுமா என்பதை நினைத்தும் கூட பார்க்க முடியவில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவரது மொழி ஆளுமை, யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளுதல், சர்வதேச சமூகம் பற்றிய புரிதல், நாட்டின் அரசியல் யாப்பிலுள்ள நுணுக்கங்கள், அரசியலுக்கு அப்பாற்பட்டு அவர் தென்னிலங்கையில் கட்சித் தலைவர்களுடன் பேணி வந்த நட்பு, அவரது ஆளுமை காரணமாக அவர் பெற்ற மரியாதை என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

எனினும், இவ்வளவு சிறந்த குணாம்சங்கள் இருந்தும் அவரும் சில இழுபறிகளுக்கு ஆளானார். சில தவறான முடிவுகளை எடுத்தார் அல்லது எடுக்கப்பட்ட சூழலுக்கு ஆதரவாக இருந்தார். இதில் கடந்த பகுதியில் குறிப்பிட்டிருந்ததைப் போல் மஹிந்த ராஜபக்சவை அல்லது ராஜபக்சக்களை எதிர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ ஆகியோரை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரித்தது, போர்க் குற்ற விசாரணையில் புலம்பெயர்ந்து வாழ்வோரின் அழுத்தங்களுக்கு ஆளானது என்று பல அம்சங்கள் உள்ளன.

தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்வில் சம்பந்தர் ஒரு பரிபூரணமான வாழ்வை வாழ்ந்துள்ளார்.

சம்பந்தர் ஐயாவுக்குப் பிறகு யார்? என்கிற மிகப்பெரிய கேள்வி தொடர்ச்சியாக எழுந்துள்ளது. கூட்டமைப்பு என்கிற கட்டமைப்பு தொடர்ந்து உறுதியாக இருந்தால் மட்டுமே தமிழ் மக்களுக்கான உரிமைகளை ஜனநாயக ரீதியில் பெற முடியும் என்கிற நிலைப்பாட்டில் அவர் தொடர்ந்து இருக்கிறார். அரசியல் தீர்வை பெறுவதில் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமான பங்குள்ளது, உள்நாட்டில் தான் தீர்வுக்கான சாத்தியம் உள்ளது, பன்னாட்டுச் சமூகங்கள் துணையாக இருக்க முடியுமே தவிர அவையே தீர்வை தராது என்பதில் அவர் உறுதியாக நம்புவது போலுள்ளது. கடந்த தேர்தலில் அவர் திருகோணமலையில் போட்டியிட விரும்பவில்லை. கனடாவிலிருந்து திரும்பி அவருடன் இணைந்து பணியாற்றிய குகதாசனே திருமலையில் நிறுத்தப்பட வேண்டும் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது. ஆனால் அவர் போட்டியிடாவிட்டால் திருகோணமலையில் கிடைக்கும் வாய்ப்புள்ள ஒரு ஆசனமும் பறி போகும் என்று கூறப்பட்டதால் போட்டியிட்டர். தனது வாழ்நாளிலேயே நீடித்திருக்கக் கூடிய அரசியல் தீர்வையும், தமிழ் மக்கள் சம உரிமைகளோடு சமாதானமாக, ஒன்றிணைந்த இலங்கைக்குள் நிம்மதியாக வாழ வேண்டிய சூழலைப் பெற்றுத்தர அவரது ஆழ் மனதில் இன்றளவும் ஆசையும் அதற்கான எண்ணமும் உள்ளது. ஆனால் அவரது உடல் நிலையும், வயதும் அதற்கு ஒரு தடையாக உள்ளன.




இச்சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த தலைவரை அடையாளம் காண வேண்டிய தேவை மிகவும் அவசியமாகிறது. வயது, அரசியல் அனுபவம், கட்சியின் உறுப்புரிமை, போராட்டம் போன்ற பல அம்சங்களில் சம்பந்தருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் “மாவை” சோமசுந்தரம் சேனாதிராஜா. சம்பந்தரைப் போலவே அவரும் நீண்ட நாடாளுமன்ற அனுபவம் பெற்றவர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவர். சிறைவாசம் அனுபவித்தவர். இலங்கை தமிழ்ரசுக் கட்சியின் பொதுச் செயலராக இருந்து பின்னர் இப்போது அதன் தலைமை பொறுப்பில் இருப்பவர். அவருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவி அவருக்கு மறுக்கப்பட்டு கசப்பான உண்மை. அது அவரை மிகவும் பாதித்துள்ளது என்பதை வெளிப்படையாக காண முடிகிறது.

வயது, அனுபவம், அரசியல் முதிர்ச்சி, போராட்ட ஈடுபாடு என்று அனைத்து வகையிலும் அவரே அதற்கு பொருத்தமானவர் என்றாலும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர், கொழும்பிலிருந்து ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனை “இறக்குமதி செய்து” அவரை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தினர். சி.வி விக்னேஸ்வரன் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்றாலும், அவர் கொழும்புத் தமிழர் என்பதே யதார்த்தமாக இருந்தது. இது கூட்டமைப்பிற்கும் இருந்த உட்கட்சி மோதலை வெளிப்படையாக்கி அது மேலும் பெரிதாக வழிவகுத்தது. விக்னேஸ்வரன் முதல்வர் ஆக்கப்பட்டது கூட்டமைப்பிற்கு நன்மையைவிட தீமையே அதிகம் ஏற்பட்டதது. அவரால் ஒரு நிர்வாகியாக இருக்க முடியாது என்பது நிரூபணமானது. ஒரு கட்சி மற்றும் ஆட்சியைத் தலைமையேற்று வழிநடத்த அவருக்கு அனுபவமில்லை என்பதை எடுத்துக் காட்டியது. பிறகு “வளர்த்த கிடா மாரில் பாய்ந்தது” போல் அவரே சம்பந்தருக்கு எதிராக செயல்பட ஆரம்பித்து, கூட்டமைப்பை விட்டு வெளியேறி தனிக்கட்சி தொடங்கி தனியாவர்த்தனம் வாசிக்க ஆரம்பித்தார்.

வட மாகாண சபையின் முதலாவது முதலமைச்சர் என்கிற வகையில் அவர் என்ன சாதித்துள்ளார் என்பதற்கான விடையை எங்கு தேடினாலும் கிடைக்காது. விமர்சகர்களையும் விமர்சனங்களையும் அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். அவருக்குப் பதிலாக மாவை சேனாதிராஜா முதல்வராக்கப்பட்டிருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கக் கூடும். தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து செயல்பட அவரது அரசியல் அனுபவம் உதவியிருக்கும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் தோல்வியடைந்தது அவருக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.



கூட்டமைப்பின் அடுத்த தலைவராக அவரைக் கருத முடியுமா என்றால் அதிலும் சில சிக்கல்கள் உள்ளன. முதலாவதாக அவரது வயது. 80 வயதை அவர் நெருங்கிவிட்டார். இனிவரும் காலங்களில் எந்தளவுக்கு தீவிர அரசியல் செய்வதற்கு அவரது உடல்நிலை ஒத்துழைக்கும் என்பது தெரியவில்லை. அதுமட்டுமில்லை கூட்டமைப்பின் தலைவராக அவர் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு கொழும்பில் அரசியல் செய்ய வேண்டும். அதற்குச் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டிய தேவையுள்ளது. அவருக்கும் சிங்களம் தெரியாது மற்றும் ஆங்கிலமும் சரளமாக பேச வராது என்பதே உண்மை. இந்நிலையில் கொழும்பில் தங்கி உள்நாட்டு மற்றும் பன்னாட்டுத் தலைவர்களுடன் உரையாடுவதோ அல்லது அரசியல் செய்வதோ சிரமமானதாக இருக்கும்.

(தொடர்ச்சி _12_ பக்கம்)

(தொடர்ச்சி _11_ பக்கம்)

# ஆண்டுகள் 20 ஆனாலும் தத்தளிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு – நிறைவுப் பகுதி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளேயே அவருக்கு மறைமுகமான எதிர்ப்பு உள்ளது. கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் அவருக்கு முழுமையான ஆதரவை இன்னும் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. இன்றைய நிலையில் சரியோ பிழையோ மாவையின் அரசியல் வாழ்வு யாழ்ப்பாணத்திற்கு வெளியே சாத்தியம் இல்லை என்கிற சூழலே நிலவுகிறது.

கூட்டமைப்பில் இருக்கும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாவைக்கு இருக்கும் அதே போன்ற மொழிப் பிரச்சனை உள்ளது. இதில் சுமந்திரன், சாணாக்கியன் ராஜபுத்திரன் போன்றோர் மட்டுமே விதிவிலக்காக உள்ளார். இதில் சாணாக்கியன் மஹிந்த கட்சியிலிருந்து வந்தவர். சுமந்திரனைப் பரிசீலிக்கலாம் என்றால் அவரை கூட்டமைப்பின் தலைவராக ஏற்றுக் கொள்வதில் பல கேள்விகள் இருக்கின்றன. கூட்டமைப்பிலுள்ள பலர் அதற்கு ஆதரவாக இல்லை. அவரது பல சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பெரும் பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளது. ஒப்பீட்டளவில் அவரது நாடாளுமன்ற அனுபவமும் குறைவு. அவர் இன்னும் கொழும்பு வாழ் மேட்டுக்குடி வர்க்கமாகவே பார்க்கப்படுகிறார். தமிழ் அரசியலுக்கு மிகவும் தேவையான "வீதி போராட்ட" குணம் அவரிடம் இதுவரை காணப்படவில்லை. அவரால் ராஜபக்சக்கள், பிரேமதாஸக்களைப் போன்று "தடாலடி அரசியல்" செய்ய முடியுமா என்று தெரியவில்லை. விடுதலைப் புலிகள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் தெரிவித்திருந்த கருத்துக்களும் அவருக்கு எதிராக உள்ளன.

இலங்கையில் சிறுபான்மையினரின் உரிமைகளை வென்றெடுக்க தமிழ்-முஸ்லிம் மக்களும் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள பல தலைவர்களுக்கு அதில் தயக்கங்கள் உள்ளன. அதேவேளை முஸ்லிம் கட்சிகளுக்கு தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயல்பட விருப்பமில்லை. அவர்களுக்கு சிறுபான்மையினர் நலன் என்பதைவிட தமது வாக்கு வங்கியே முக்கியமாகவுள்ளது. இதுவே தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் பலமாக உள்ளது.

இப்படியான சூழலில், நெருக்கடிகளுக்கு இடையே 20 ஆண்டுகளைக் கடந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2026 ஆம் ஆண்டுவரை தாக்குப்பிடித்து தனது வெள்ளிவிழாவை காணுமா என்பது மிகப்பெரிய கேள்வி.

நாடு தழுவியளவில் அனைத்து தமிழ் மக்களையும் உள்ளடக்கிய ஒரு தமிழ் அமைப்பு அல்லது கூட்டணியே காலத்தின் தேவையாக உள்ளது. இதில் அனைத்து தரப்பினரும் இதய சுத்தியோடு இணைந்து செயற்பட வேண்டியது அவசியம்.

"இனி ஆண்டவனே வந்தாலும் தமிழர்களைக் காப்பாற்ற முடியாது" என்று "தந்தை" செல்வநாயகம் சொன்னதே இப்போது நினைவுக்கு வருகிறது. எச்சரிக்கை: இது பகுப்பாய்வின் அடிப்படையில் எழுதப்பட்ட தொடர். இதில் எழுத்தாளருக்கு தனிப்பட்ட விருப்பங்களோ அல்லது காழ்ப்புணர்ச்சியோ இல்லை.


**வன்னிச் சங்கம் - கனடா.**

**VUnited Care for Kids Inc.**

Organization – Reg # 1913363. Charitable Organization.

Head office address: 12 Pine crest St, Markham (ONT) L6E1C8.

Branch address: 3351 Markham Rd, Scarborough ON, M1X 0A6.

Secretary@vcarekids.org info@vcarekids.com 416-644-1113.


## கனடா வன்னிச்சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்று முடிந்தது

.

கனடா வன்னிச் சங்கத்தின் (V united care for kids Inc)ன் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் 30-10-2021 அன்று மிகச் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட அறக்கட்டளை அமைப்பு என்பதனால் கடந்த பல மாதங்களாக இயக்குனர்சபைக் கூட்டங்களில், எவ்வாறு சிறப்பாக பொதுக்கூட்டத்தை நடத்தி முடிப்பது என்பது விரிவாக ஆராயப்பட்டு அதற்கமைவாக இக்கூட்டமானது நடைபெற்றது. கோவிட் - 19 தொடர்பான அரசாங்க நடைமுறை ஒழுவிதிகளினால் கடந்த இரு ஆண்டுகளாக பொதுச்சபைக் கூட்டத்தினை நடாத்தமுடியாத சூழ்நிலை காணப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் அத்தகைய ஒழுங்கு நடைமுறைகள் சிறிது சிறிதாக தளர்த்தபட்டு மக்கள் சில கட்டுப்பாடுகளுடன் ஒன்று கூடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதனால் இப்பொதுக்கூட்டமானது சட்டத்தரணி அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கான அறிவித்தல்கள் முறையாக அங்கத்துவம் பெற்றிருந்த பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அவர்களது மின்னஞ்சல்களுக்கு அனுப்பட்டதுடன் பொது அறிவித்தலாக கனடா உதயன் பத்திரிக்கை வாயிலாகவும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. மண்டபவாயிலில் கோவிட் - 19 தொடர்பான அனைத்து விவரங்களும் தெளிவாக ஒட்டப்பட்டிருந்தன. உள்ளே வரும் பொது சபை உறுப்பினர்கள் அனைவரும் vaccin பாஸ்போர்ட் ,பெயர்கள், அடையாள அட்டைகள், அனைத்தும் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தினர் முன்னிலையில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டனர். பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் ஏற்கனவே மின்னஞ்சல் மூலமும் covid -19 சம்பந்தமான ஒழுங்கு நடைமுறை விதிகள் அனுப்பி வைக்கப்பட்டது. பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரும் அவ் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி அதற்கேற்ப முகக் கவசம் அணிந்து, சமூகஇடைவெளியையும் பேணி கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

பொதுவான கூட்ட நடைமுறைகள் நடைபெற்று முடிந்ததன் பின்னர் ஏற்கனவே பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட புதிய யாப்புத் தொடர்பாக எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்கள் சபையில் ஆராயப்பட்டு சபையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டது. இறுதியில் புதிய யாப்பினை சபையின் அனுமதிக்கு விடப்பட்டபோது அது மூன்றில் இரண்டுக்கும் அதிகப்படியான வாக்குனால் சபையில் நிறைவேறியது.

அடுத்து புதிய இயக்குனர்சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு ஏற்கனவே கோரப்பட்டிருந்த இயக்குனர்சபை உறுப்பினர்களாவதற்கான விண்ணப்பங்கங்களின் அடிப்படயில் மறைமுக வாக்கெடுப்பின் மூலம் 21 இயக்குனர்சபை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். இத்தேர்தல்களை நடாத்துவதற்குப் பொறுப்பாகப் பொதுச்சபையினால் திரு தங்கராசா சிவபாலு தலைமைத் தேர்தல் அதிகாரியாகவும் திரு கா. யோகநாதன் அவர்களும், திரு க. அம்பலவாணர் அவாகளும் உதவியாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இம் மூன்று செயற்பாட்டாளர்களதும் நேர்த்தியான கடமையினைச் சபை வெகுவாகப் பாராட்டுகின்றது. இத்துடன் 1:45 மணி ஆரம்பிக்கப்பட்ட கூட்டமானது மாலை 7 மணியளவில் இனிது நிறைவேறியது.

**பொ. சிவசுதன்,**
**செயலாளர், வன்னிச் சங்கம்-கனடா.**


**DEBT FREE CREDIT SOLUTION**

- **கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்**
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- **பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்**
  We shield you from your creditors and offer you a guranteed protection
- **கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு**
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- **உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்**
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6



416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan

ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

# சூப்பர் ஸ்டார்கள், உலகநாயகன்கள், தலைகள், தளபதிகள் எங்கே?

## இன்று சூரியாவுக்கு. நாளை இவர்களுக்கும் நடக்காது என்பதில் என்ன நிச்சயம்







ரசிகர்கள் நடிகர் சங்கமும் தயாரிப்பாளர் சங்கமும் என்ன செய்கின்றன? சூப்பர் ஸ்டார்கள், உலகநாயகன்கள், தலைகள், தளபதிகள் எங்கே? இன்று சூரியாவுக்கு நடப்பது நாளையே இவர்களுக்கும் நடக்காது என்பதில் என்ன நிச்சயம்? என காட்டமாக கேள்வி எழுப்பி வருகிறார்கள்.

கோலிவுட்டில் முன்னணி நடிகராக வலம் வரும் நடிகர் சூர்யா நடிப்பில் சமீபத்தில் அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியான படம் தான் ஜெய் பீம். உண்மை சம்பவத்தை மையமாக வைத்து உருவான இப்படம் வெளியான நாள் முதல் தற்போது வரை அடுத்தடுத்து பிரச்சனைகள் உருவானது. தற்போது இந்த பிரச்சனை விஸ்வரூபம் எடுத்துள்ளது. படத்தில் மறைந்த வன்னியர் சங்க தலைவர் காடுவெட்டி குருவின் பெயரை குற்றவாளி கதாபாத்திரத்துக்கு வைத்ததாகவும், வன்னியர்களின் அடையாளமான அக்னி குண்டத்தை காட்டியதாகவும் பாமக மற்றும் வன்னியர் சங்கத்தினர் சூர்யாவிற்கு எதிராக போர்க்கொடி தூக்கினார்கள். அந்த பிரச்சனை தான் தற்போது சூர்யா வீட்டிற்கு துப்பாக்கி ஏந்திய காவலர்கள் பாதுகாப்பு அளிக்கும் அளவிற்கு விஸ்வரூபமாகி உள்ளது.

இந்த பிரச்சனையில் பலர் சூர்யாவிற்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்தாலும், தற்போது வரை தமிழ் திரையுலகில் இருந்து யாரும் ஆதரவாக குரல் கொடுத்தது போல் தெரியவில்லை. குறிப்பாக நடிகர் சங்கமோ, தயாரிப்பாளர் சங்கமோ எந்த கருத்தையும் தெரிவிக்காமல் உள்ளது. இதுவரை சூர்யாவிற்கு ஆதரவாக சில அரசியல் கட்சிகள் மட்டுமே குரல் எழுப்பி வருகிறார்கள்.

உலக நாயகன் கமல்ஹாசன் நடிப்பில் வெளியான விஸ்வரூபம் படத்திற்கு பிரச்சனை எழுந்த போது நடிகர் சிவகுமார் குடும்பத்துடன் கமல் வீட்டிற்கே சென்று பத்திரிகையாளர்களை அழைத்து கமலுக்கு ஆதரவாக பேசினார். அப்படி இருக்கும் போது தற்போது சூர்யாவிற்கு ஆதரவாக கமல் ஒரு சிறு உதவி கூட செய்யவில்லை. மேலும் எதற்கெடுத்தாலும் குரல் எழுப்பி வரும் சீமான் கூட இந்த விஷயத்தில் வாய் திறக்கவில்லை. ஒரு நடிகராக அல்லாமல் நாம் தமிழர் கட்சியின் தலைவராகவாவது அவர் குரல் கொடுத்திருக்கலாம் என்பதே ரசிகர்களின் கருத்தாக உள்ளது.

இதுதவிர உச்சக்கட்ட கோபத்தில் இருக்கும் சூர்யா





மீண்டும் இணையத் தயாராகுங்கள்

டெரோண்டோவிலிருந்து தோஹா வரையிலான எங்களுடைய இடைநில்லா விமானங்கள் மூலமும், கொழும்பு மற்றும் அதற்கு அப்பால்* உள்ள இடங்களுக்குச் சிக்கலில்லாத இணைப்புப் பயண வசதிகளை அளிப்பதன் மூலமும் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் இணையப் போகும் தருணங்களைத் திட்டமிடுவது முன்பை விட எளிதானதாக மாறியுள்ளது.

உங்களுடைய பயணம் முழுவதும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பை அளிக்கும் பொருட்டு உயிர் காப்பு அம்சங்களை அளிக்கும் எங்களுடைய முன்னோடியான **Air Canada CleanCare+** திட்டம் மூலமாக உங்களுடைய விமானப் பயணத்தை மன அமைதியுடன் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**AEROPLAN® உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு AIR CANADA விமானப் பயணத்திற்கும் புள்ளிகள் வழங்கப்படும்.**

கூடுதலாக, புள்ளிகளை வேகமாகச் சேர்த்து அதைப் பரிசுப்பொருளைப் பெறும் பொருட்டு மீள சமர்ப்பிக்க உங்கள் புள்ளிகளை 8 குடும்ப உறுப்பினர்களின் புள்ளிகளோடு ஒன்றிணைத்துக்கொள்ள முடியும். உங்களைப் போன்ற பயணிகளுக்காகவே **Aeroplan®** உருவாக்கப்பட்டுள்ளது.

**aircanada.com/aeroplan** -ல் சேர்வது எளிதானது மற்றும் இலவசமானது.

AEROPLAN A STAR ALLIANCE MEMBER AIR CANADA

* தோஹாவிற்கு அப்பால் இணைப்பு விமானங்கள் Qatar Airways ஆல் இயக்கப்படுகின்றன.
® Aeroplan மற்றும் Aeroplan ஆகியவை Aeroplan Inc. இன் பதிவு செய்யப்பட்ட வணிகச்சின்னங்கள் ஆகும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுனியாவில் இராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கை



வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் சுகாதார அதிகாரிகள், இராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து இன்றைய தினம் விசேட சோதனை நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியாவில் கொரோனா தொற்றாளர்கள் மீண்டும் அதிகரித்துவரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் சுகாதார பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் வவுனியாவில் அமைந்துள்ள வங்கி, மற்றும் வியாபார நிலையங்கள், தனியார் மருத்துவ நிலையங்கள், மற்றும் உணவகங்களில் செவ்வாய்க்கிழமை (16) காலை முதல் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சுகாதார நடைமுறைகளை பேணாமை மற்றும் முக கவசங்கள் அணியாதவர்களின் விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது டன், எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

வைத்தியர்கள் அரங்கன் மற்றும் பிரசன்னா தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள், இராணுவத்தினர், பொலிஸார், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் சிறப்பாக இடம் பெற்ற திருவள்ளுவர் விழா








வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்டச் செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை யும் இணைந்து ஏற்பாடு செய்த திரு வள்ளுவர் விழா மற்றும், மன்னார் மாவட்ட கீதம் வெளியீட்டு விழாவும் செவ்வாய்க்கிழமை 16ம் திகதி காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் கலாச்சார உத்தியோகத்தர் இரத்திணம் நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமல் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன் போது மன்னார் மாவட்டச் செயலக நுழைவாயிலில் இருந்து திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு,மண்டபம் வரை திருவள்ளுவர் சிலை பவனியாக கொண்டு வரப்பட்டது.

இதனை தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றதோடு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் வருகை தந்த விருந்தினர்கள், கலைஞர்கள் இணைந்து மன்னார் மாவட்ட கீதம் வெளியீடு செய்தனர்.

அதனைத்தொடர்ந்து சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, திருவள்ளுவர் விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்வகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், இளம் கலைஞர்களுக்கும் பரிசில்கள் மற்றும் வெற்றி கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் மதத்தலைவர்கள் உள்ளடங்களாக பிரதேச செயலாளர்கள், கலைஞர்கள், திணைக்களத் தலைவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகருடன் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் சந்திப்பு



இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னனுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை (16) மாலை கொழும்பில் உள்ள கனடா இல்லத்தில் இடம்பெற்றது.

இலங்கை-கனடா பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் இம் மாத முற்பகுதியில் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கனேடிய உயர்ஸ்தானிகருடன் இடம் பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

கனடா உயர்ஸ்தானி கருடனான இச் சந்திப்பில் இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளுவதற்கு சாத்தியமான அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும், இலங்கையில் கல்வி, விவசாயம் மற்றும் தொழில் நுட்பத் துறை ஆகியவற்றின் அபிவிருத்திக்கு கனடாவிடமிருந்து உதவிகள் பெற்றுக் கொள்வது தொடர்பில் காணப்படும் சாத்தியமான வழி முறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சர்வதேசத் தரம் வாய்ந்த கனடாவின் தொழிற்கல்வியினை இலங்கை இளையோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதன் மூலம் இலங்கையில் தொழில் தகமையுள்ள இளையோரை உருவாக்குவதுடன் கனடா மற்றும் மேற்குலகின் தொழில் சந்தைகளில் இலங்கையின் இளையோர் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கு வழி வகைகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் க சுரேன் ராகவன் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன் புதுப்பிக்கத்தக்க சக்கி தொடர்பில் கனடாவின் உதவிகளை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் கனடா உயர்ஸ்தானிகராலய அரசியல் உத்தியோகத்தர் திருமதி இந்திராணி ஜயவர்த்தனவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# இரட்ணம் Foundation அனுசரனையுடன் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை திறன் வகுப்பறை திறப்பு விழா




யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் திறன் வகுப்பறைய திறப்புவிழா 15.11.2021 (திங்கட்கிழமை) நடைபெற்றது. திறன் வகுப்பறைக்கான திறன் பலகையினை பாடசாலையின் பழைய மாணவியும், ஓய்வுநிலை ஆசிரியையுமாகிய திருமதி. செல்வநாயகி மகாலிங்கம் அவர்களின் பங்களிப்புடனும் இரட்ணம் Foundation நிறுவனத்தின் (திறன்பலகை) அனுசரனையுடனும் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. இதனை வழங்கியமைக்காக பாடசாலை அதிபரினால் மனப்பூர்வமான நன்றியும் பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பழைய மாணவனும், பிரபல தொழிலதிபருமான திரு. மாசிலாமணி அருளேந்திரன் (லண்டன்) அவர்களால் பின்தங்கிய பாடசாலைகளுக்கு இரட்ணம் Foundation வழங்கி வருகின்ற திறன் வகுப்பறைகள் மூலம் மாணவர்கள் ஆசிரியர்கள் மகிழச்சிகரமான கற்றல், கற்பித்தல்களை மேற்கொண்டு உச்சப் பயன்பாட்டை அடைந்து கொள்ளக்கூடியதாக அமையும் என்பதை சுட்டிக்காட்டியதுடன் இரட்ணம் நிறுவனத்திற்கும் பாராட்டுதல்களையும் தெரிவித்தார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளரும் IMOH இணைப்பாளருமாகிய திரு. கிருஸ்ணகுமார் அவர்களால் இவ்வாறான பின்தங்கிய பாடசாலைக்கு இரட்ணம் Foundation நிறுவனத்தால் வழங்கப்பட்ட திறன் பலகை ஊடாக மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தல் செய்ாட்டை உயரிய அளவில் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சியினை தாம் வழங்கத் தயாராக இருப்பதோடு நிகழ்வு ஒழுங்கமைப்பையும் பாராட்டினார். மேலும் திறன் வகுப்பறையை அமைப்பதற்கு புலம்பெயர் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் உதவிகளுக்கும் பாடசாலை பழைய மாணவ சங்க செயலாளரினாலும் பாடசாலை அதிபரினாலும் வலயக்கல்வி அதிகாரிகளாலும் புலம்பெயர் பழைய மாணவர் சங்க தொடர்பாடலுமான ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் திரு. சத்தியமூர்த்தி அவர்களாலும் மனப்பூர்வமான பாராட்டுக்களும் நன்றிகளும் தெரிவிக்கப்பட்டது.




**திரு. த.மனோகரன்**
**அதிபர்**




# மொன்றியல் மாநகரில் "உதயன்" வெள்ளி விழாவும் "நண்பன்" விருது வழங்கும் விழாவும்

வெள்ளி தோறும் விருப்புடன் விரியும், "உதயன்" வார இதழின் "கதிரோட்டம்" கண்டறிந்து - கறுணாந்து காலங்கள் இருபத்து ஐந்து ஆண்டுகள் ஆகி "வெள்ளி விழா" கொண்டாடும் 2021ல் "நண்பன்" என அறிமுகம் ஆகும் நல்ல தமிழ் உறவின் பெயரில் "விருது" பெற வந்தவர்கள் - விழா பார்க்க வந்தவர்கள் - கவிதை சொல்ல நிமிர்ந்தவர்கள் - ஆடல் கலை நர்த்தகிகளின் களி நடனம் காதுகளில் தேன்பாய்ச்சி வயலினிசை வழங்கியவர், வீணையிசை மீட்டியவர் - தமிழ் மொழி வாழ்த்திசைத்தும் - கனடியத்தாயை வாய்மலர்ந்து, பாடிவைத்தும் - வருகைதந்த தாய்க் குலத்தைப் பெரியோரை, விருந்தினரை வாய-ார வாழ்த்துரைத்து, வரவேற்றும் - தலைமையுரை இரு மொழியில் நிகழ்த்தியே தான் - இறும்பூதெய்ய வைத்து - இடையிடையே தொகுப்பாளர் நிகழ்ச்சிகளைச் சுவையாக வர்ணித்து கரவொலியை எழுப்பி வைத்துக் கலையரங்கை அதிர வைத்தார்.

கடந்த இரு ஆண்டுகளாய் கொரோனாக் கிருமிகளின் படையெடுப்பால் பதுங்கி ஒளிந்தவர்கள் - பயங்கொண்டு மிரண்டவர்கள் - அச்சமும் - பீதியும் நீங்கப்பெற்று அலை அலையாய் அமரர் - வர்ண இராமேஸ்வரன் கலையரங்கில் களிப்புடனே வருவதற்கு வழிசமைத்த உதயன் நிறுவன நிறுவனர் திரு.ஆர். என்.லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு அரசியல் பிரமுகர்களும் - ஆன்றோர், பெரியோர்களும் - ஆசியுரை வழங்கி அகமகிழ்ந்து வாழ்த்தினர்: வாயாரப் புகழ்ந்தனர்! மொன்றியல் நகருக்கு இது புதியதொரு விழா உதயன் இதழோடு உறவாடும் தமிழர் சமூகத்திற்கும் - ரொரன்ரோ வாழ் தமிழர் சமூகத்திற்கும் குறிப்பாக ஊடகத்துறை சார்ந்தவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் - வாசகர்கள் - எழுத்தாளர்களுக்கிடையே காத்திரமான உறவுப் பாலத்தை அமைத்து - ஆரோக்கியமான ஆதரவாளர்களையும் அறிமுகம் செய்து வைத்த உதயன் நிர்வாகமும் - நிறுவனரும் நன்றிக்குரியவராகிறார்கள். விழாவின் முக்கிய அங்கமான - "நண்பன் விழா 2021" எல்லோரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் - கட்புலன் இழந்த நிலையிலும் தாயக மக்களின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்தெறிய வேண்டும் என உயர்ந்த இலட்சியத்துடன் இசை நிகழ்ச்சிகளின் மூலம் நிதி உதவிகள் வழங்கி வரும் இளம் பாடகர் செல்வன் - கௌரீஸ் சுப்பிரமணியம், கடந்த 30 ஆண்டுகளாக 'நாட்டியஷ்ருங்கா' நடனப்பள்ளியின் நிறுவனராகவும் - பிரதம ஆசானாகவும் - கலைத் தொண்டும் - சமூகப்பணியும் ஆற்றிவரும் திருமதி. தாரகா சற்குணபாலா, நாடகச் சித்திரங்களை எழுதியும், மேடையேற்றியும், கலைப் பணி புரிந்து வரும் நாடகக் கலைஞரின் தொடர் சேவையைப் பாராட்டி திரு.கந்தையா - திரு.லோகநாதன், இலங்கையிலும் - தமிழகத்திலும் - ஐரோப்பிய நாடுகளிலும் பொப்பிசை - மெல்லிசை பாடல்கள் மூலம் புகழ்பெற்ற பாடல் கலைஞர், திரு.அமுதன் அண்ணாமலை அவர்களின் வாழ்நாள் சாதனைப் பாராட்டி - மேற்கூறிய நால்வருக்கும் - 2021க்குரிய 'நண்பன்' விருது வழங்கப்பெற்றமை வரலாற்று நிகழ்வாகிவிட்டது, கலை விருந்துகளோடு - அறுசுவை விருந்தும் யாவருக்கும் மனமகிழ்வோடும் - மனநிறைவோடும் வழங்கப்பெற்றது.

























இவ்வாண்டின் முத்திரை விழாவாக "உதயன்" வெள்ளி விழாவும் 'நண்பன்' விருது வழங்கிய நிகழ்வும் உலகம் அறிந்து நல்விழாவாகும்.

**- தொகுப்பு வீணைமைந்தன்.**


தமிழீழத் தேசியக்கொடி நாள்
Tamil Eelam National Flag Day
21 NOV
SUNDAY
JC's Banquet Hall & Convention Centre
J1686 Ellesmere Rd, Scarborough, ON M1H 2V5
Time : 12:30 pm
Contact : TGTE office (647) 864-8483 / (416)-830-4305
Omni Centre
375 Boul cardinal léger , Pincourt , QC J7V 9H 6
Time : 2:00 pm
Contact No: 1 (514) 655-7410
TRANSNATIONAL GOVERNMENT OF TAMIL EELAM

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**






உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



More Choices at www.HomyCasa.com

# BLACK FRIDAY SALE

USE YOUR PHONE TO SCAN THE QR CODE TO GET THESE INCREDIBLE SAVINGS! Valid Nov. 18 - 29, 2021



Elegant Scrolling Detailed Metal Twin Bed
MUDIAY TWIN
was $308.99
Save $124
130.99



50% OFF

L-shaped desk in dark wood colour with integrate shelves
BABETTE
was $175.99
Save $88
87.99

FREE SHIPPING



50% OFF

Modern and Practical Desk with Three Intergrated Shelves in Black or White
POUCHU
was $224.99
Save $91
88.99



Only $58 ea.

SET OF 2
Counter Bar Stool 23.4 In.
WICHITA
was $193.99
Save $78
115.99



Sofa End Table Mobile Snack / Laptop Stand
ROZELLE
was $55.99
Save $17
38.99



Only 66.50 ea.

SET OF 2
Upholstery Counter Barstool
BALLON
was $221.99
Save $89
132.99



Bar Table and 4 Stools Set Perfect for Small Spaces
MAGALLANES
was $224.99
Save $90
134.99

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGREMENT CANADA

## Clinic Location:
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# சுதந்திரத்திற்குப் பிறகு இன, மதவாத அரசியலால் நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது!

**- கனடா நக்கீரன்**

இலங்கையின் தலைநகரம் கொழும்பில் ஐய்க்கிய மக்கள் சக்தியினால் கடந்த செவ்வாய்க்கிழமை (நொவெம்பர் 16) மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் இராசபக்ச வம்ச அரசியலுக்கு ஒரு காத்திரமான செய்தியைச் சொல்லியுள்ளது. இன்று ஒரு தேர்தல் நடந்தால் ஆளும் பொது சன பெரமுன படுதோல்வி அடையும் என்பதே அந்தச் செய்தியாகும். 2019 நொவெம்ரில் சனாதிபதி தேர்தலில் கோட்டாபய இராசபக்ச 6,924,255 வாக்குளால் வெற்றி பெற்றது தெரிந்ததே.

அரசு காவல்துறையை ஏவிவிட்டு கொழும்புக்கு வண்டிகளில் வந்த போராட்டக்காரர்கள் தடுக்கப்பட்டார்கள். இப்படி தடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் எந்த இடைஞ்சலும் இல்லாமல் கொழும்பு நகரத்துக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தால் ஆர்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும்.

காவல்துறை கோவிட் தொற்றைக் காரணம் காட்டி ஆர்ப்பாட்டத்தை தடை செய்யுமாறு நீதிமன்றங்களில் முறையீடு செய்தார்கள். பல நீதிமன்ற நீதிபதிகள் தடை விதிக்க மறுத்துவிட்டனர். சில நீதிபதிகள் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி அளித்தார்கள்.

கடுமையான தடைகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றை மீறி அரசுக்கு எதிராக மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டதை சாதாரணமாகப் பார்க்க முடியாது. கமம் செய்பவர்கள், தோட்டம் செய்பவர்கள் பயன்படுத்தும் யூரியா பசளையின் பயன்பாட்டை திடீரென தடை செய்துவிட்டதால் அவர்கள் வீதியில் இறங்கிப் போராட நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். இராசயன பசளையில் இருந்து இயற்கைப் பசளைக்கு மாற அவர்களுக்கு அரசாங்கம் அவகாசம் வழங்கவில்லை.

அசேதனப் பசளையின் பாவனை காரணமாக பல்வேறு நோய்களுக்கு இலக்காகி வருவதோடு நீரினதும், நிலத்தினதும் மாசுக்கு அது வித்திட்டுகிறது என்பது உண்மைதான். அதனை மறுக்க முடியாது. இருந்தாலும் விவசாயிகளால் திடீரென இயற்கைப் பசளைக்கு மாறிவிட முடியாது. அதற்கு அவகாசம் தேவையாகும்.

இயற்கைப் பசளையில் இரசாயனப் பசளையை விட பல நன்மைகள் உண்டு. அது மண்ணின் அமைப்பை மேம்படுத்தி, தண்ணீரை நீண்ட நேரம் வைத்திருக்க அனுமதிக்கிறது. மேலும் மண்ணில் நுண்ணுயிரிகளின் செயற்பாட்டை அதிகரிக்கிறது. எனவே, அவை பயிர்களுக்கு உதவுவது மட்டுமல்லாமல், மண்ணைப் பண்படுத்தவும் உதவுகின்றன. ஆனால் இரசாயன பசளையைவிட இயற்கைப் பசளை அதிகம் ஒறுப்பானது. குறைவான ஊட்டச்சத்துக்களைக் கொண்டது.

பெரும்போக நெல் விளைச்சல் பாதியாகக் குறையும் எனக் கமக்காரர்கள் சொல்கிறார்கள். வெள்ளம் கழுத்தளவுக்கு வந்த பின்னர் கோட்டாபய அரசாங்கம் அவசர அவசரமாக இந்தியாவிடம் இருந்து 100 தொன் நானோ உரத்தை இறக்குமதி செய்துள்ளது.

செயற்கைப் பசளை தடைசெய்யப்பட்டதற்கு முக்கிய காரணம் அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாததான். இராசபக்ச அரசாங்கம் நொவெம்பர் 2019 இல் ஆட்சிக்கு வந்த போது வெளிநாட்டு நாணய கையிருப்பு அ.டொலர் 7.5 பில்லியனாக இருந்தது. இன்று இது 2.7 பில்லியனாகக் குறைந்துவிட்டது.

அந்நிய செலாவணியை மிச்சப்படுத்த செயற்கைப் பசளை மட்டும் தடைசெய்யப்படவில்லை, கடந்த ஏப்ரில் தொடக்கம் மேலும் பல அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

மட்பாண்டங்கள், கண்ணாடி, அழகுசாதனப் பொருட்கள், புடவை, தோல், கைப்பேசிகள், மின்விசிறிகள், தொலைக்காட்சிகள், குளிர்சாதன பெட்டிகள் மற்றும் உதிரி பாகங்கள், வளிசீராக்கல் இயந்திரம், சொக்லேட், ஆப்பிள், திராட்சை, ஆரஞ்சு, மோல்ட், மற்றும் வெண்ணெய் போன்ற 623 பொருட்கள் அத்தியாவசியமற்ற அல்லது அவசரமற்ற பொருட்களாக பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த இறக்குமதித் தடைகள் நாட்டில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் பொருட்களின் பற்றாக்குறையை உருவாக்கியது. வியாபாரிகள் விலைகளை உயர்த்தி அதிக விலைக்கு விற்று இலாபம் அடைந்தார்கள். உடனே அரசாங்கம் விலைக்கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தது. வியாபாரிகள் அந்த விலைக்கு விற்கமுடியாது என்று சொல்லி பொருட்களைப் பதுக்கினார்கள்.

அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு மத்தியில் உணவுப் பற்றாக்குறை மோசமடைந்ததால் கறுப்புச் சந்தை வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் அரசாங்கம் விலைக் கட்டுப்பாட்டை விலக்கிக் கொண்டது.

விளைவு மறுபடியும் பொருட்களின் விலை சராசரி 70% ஏறிவிட்டது. விலை அதிகரிப்பு தோராயமாக 38% இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தின் முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது.

நொவெம்பர் 7 முதல் விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட நிலையில், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பால் மாவின் விலை மூன்றில் ஒரு பங்காக அதிகரித்து ரூபா 1,300 ($6.5) காணப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். எரிவாயுவின் விலையும் சுமார் 35மூ உயரும்.

இந்தப் பின்னணியில் கடந்த நொவெம்பர் 12 இல் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் பசில் இராசபக்ச 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். ஆனால் அது ஒன்றுக்கும் உதவாத வரவு – செலவு திட்டம் ஏமாற்றம் தருகிறது என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

கழுத்தை நெரிக்கும் விலைவாசி உயர்வு, இரசாயன பசளை உட்பட அன்றாடும் தேவைப்படும் பொருட்களின் தட்டுப்பாடு போன்றவற்றால் அவதிப்படும் மக்களுக்கு எந்த நிவாரணமும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பல நாட்கள் போராடிய ஆசிரியர்களது சம்பள முரண்பாட்டைக் களைவதற்கு மட்டும் ரூபா 300 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்து 12 ஆண்டுகள் உருண்டோடி விட்டது. ஆனால் முப்படைக்கும் ஆன செலவு ஆண்டுதோறும் கூடிக்கொண்டு போகிறது. குறைந்தபாடில்லை. இலங்கை ஒரு சிறிய நாடு. அதன் மக்கள் தொகை 22.5 மில்லியன் மட்டுமே. அண்டை நாடு இந்தியா மட்டுமே. இரண்டு நாடுகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க முரண்பாடு இல்லை. எல்லைத்தகராறு இல்லை. பின் எதற்காக படைச் செலவு அதிகரிக்கப்படுகிறது?

இலங்கை இராணுவத்தில் 346,000 படையினர், 90.000 துணைப் படையினர், 8,000 காத்திருக்கும் படையினர், 8,000 ஐநா அமைதி காக்கும் பணியில் உள்ள படையினர். ஆக மொத்தம் 444,000 படையினர் இருக்கிறார்கள். விமானப்படை, கடற்படை வேறு இருக்கின்றன.

இராணுவத்துக்கு 1983 – 87 பாதுகாப்புச் செலவு அ.டொலர் 421 மில்லியன். 2009 இல் பாதுகாப்பு ஒதுக்கீடு ரூபா 214 பில்லியன். 2019 இல் ரூபா 306 பில்லியன். 2020 இல் ரூபா 312 பில்லியன். 2021 இல் ரூபா 355 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2019 ஆம் ஆண்டை விட 2020 இல் பாதுகாப்புக்கான ஒதுக்கீடு ரூபா 49 பில்லியன் (16%) அதிகரித்தது.

இலங்கை அடுத்த 5 ஆண்டுகளில் நாடு அ.டொலர் 29 பில்லியன் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். வட்டிக் கொடுப்பனவுகள் மட்டும் தற்போது அரசாங்காந்தியின் வருவாயில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் உள்ளது. இப்போது கடனை அடைக்க இலங்கை மேலும் கடன் வாங்குகிறது.

இதே சமயம் 2022 ஆம் ஆண்டு நல்வாழ்வுதுறைக்கு ரூபா153.5 பில்லியன், கல்விக்காக ரூபா 127.5 பில்லியன், போக்குவரத்து அமைச்சுக்கு ரூபா31.2 பில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், இரயில்வேக்காக ரூபா 26.2 பில்லியன் மூலதனம் மற்றும் தொடர் செலவீனமாக ஒதுக்கப்பட்டது. நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு ரூபா 250.2 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

2022, தொடர் மற்றும் மூலதனச் செலவுகள் இரண்டையும் சேர்த்து 2021 நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 33 பில்லியன் குறைந்துள்ளது.

இந்த நிதியில், விமானப்படைக்கு ரூபா 15 பில்லியன் மூலதனச் செலவுக்குக் கிடைக்கும், அதே நேரத்தில் கடற்படை மற்றும் இராணுவத்திற்கு முறையே ரூபா 9.2 மற்றும் ரூபா 7.4 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆயினும் கூட, பொருளாதாரத் தேவைகளை விட அரசியல் நோக்கங்கள் அரசாங்க செலவினங்களை வழிநடத்துவது தெரிகிறது. மேலும், நியாயப்படுத்த முடியாத செலவுகள் அதிகரித்துள்ளன.

இதற்கு மாறாக, கல்வி மற்றும் நல்வாழ்வுக்கான செலவு போதுமானதாக இல்லை. 2022 இல் மொத்த செலவு ரூ. 20 பில்லியனால் குறைக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது பசில் இராசபக்ச, 2022 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 8.8மூ வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறையை குறைக்கலாம் என்று கூறினார்.

நாடு குறைந்தளவு சுற்றுலாப் பயணிகளை எதிர்கொள்ளும் போது, வெளிநாட்டு ஊழியர்களின் பணம் அனுப்புதல் மற்றும் ஏற்றுமதி குறைந்து விட்ட நிலையில் இது அதீத எதிர்பார்ப்பாகவே இருக்கும். பன்னாட்டுச் சந்தையில் கச்சா மதகு எண்ணெய் விலை கடந்த 6 மாதங்களில் பீப்பா ஒன்றுக்கு அ.டொலர் 81.50 க்கு உயர்ந்து விட்டது. எனவே பற்றாக்குறையைக் குறைக்க வாய்ப்பே இல்லை.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் முக்கிய சுற்றுலாத் துறையை பள்ளத்தில் தள்ளிவிட்டதால் இலங்கையின் பொருளாதாரம் கடந்த ஆண்டு 3.6% சுருங்கியது.

சுதந்திரத்திற்குப் பிறகு இன, மதவாத அரசியலால் நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. பெரும்பான்மையான சிங்கள - பெளத்த வாக்காளர்கள், சிறுபான்மையினரான தமிழ் மற்றும் முஸ்லிம்களை அடிபணியச் செய்வதிலேயே தங்களுடைய செழிப்பு தங்கியுள்ளது என நம்புகிறார்கள். சிங்கள - பவுத்த பேரினவாதிகளால் சிங்கள - பவுத்த மக்கள் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர்.

பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் உறுதித்தன்மை இன்றியமையாதது. அரசியல் உறுதித்தன்மை என்பது ஒரு நாட்டின் அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆள்வோர் நாட்டு மக்களை இனவாரியாக, மதவாரியாக, மொழிவாரியாக பிரிக்கக் கூடாது. மாறாக நாட்டு மக்கள் எல்லோரும் சட்டத்தின் முன் சரிநிகர் சமம், எல்லோரும் ஒரு குலம், ஓரினம், ஓர் நிறை, ஓர்விலை எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற கோட்பாடுகள் ஏட்டில் மட்டும் இல்லாது நடைமுறையிலும் இருக்க வேண்டும்.

Scotiabank.

**Scotiabank's *StartRight*® Program helps newcomers with a fresh start in Canada**

*The StartRight® Program, with up to $1,300* in first year savings and bonuses, coincides with new influx of newcomers expected this fall.*

**TORONTO, November 12th, 2021 -** After months of waiting, newcomers to Canada have started to arrive in greater numbers following the recent easing of travel restrictions. Scotiabank has rolled out the welcome carpet with exciting benefits through the *StartRight* Program, designed especially for newcomers.

Between now and December 16th, 2021, customers who sign up with Scotiabank's *StartRight* Program can earn up to $1,300* in savings and bonuses, including no monthly account fees, no annual fee on select credit cards, and free international money transfers – all in the first year. This means considerable savings and bonuses for newcomers as well as the ability to build a credit history in a new country. The *StartRight* Program makes it easier to bank in Canada so that newcomers can settle in, start a new life and face their challenges with optimism and hope.

With the *StartRight* Program you can get a credit card with up to $15,000 in credit limit, even without previous credit history. Start building your credit history today with a card that also offers cash back or travel rewards.

"The transition to life in Canada is both exciting and overwhelming for many newcomers, which is why Scotiabank has tailored banking programs and products designed to help them get started," says Munsif Sheraly, Director of Multicultural Banking at Scotiabank. "Our talented team of trusted advisors understands their unique needs and is ready to support them meet their goals today while planning for their financial future."

As a newcomer, you can get a first-year value of up to $1,300 in bonuses and savings across several products and solutions, such as*:


- One year of no monthly account fees with unlimited debit transactions and Interac e-Transfer† transactions;
- Free International Money Transfers;
- Free safety deposit box for one year;
- Earn Scene+TM rewards points on everyday purchases;
- A credit card with no credit history required, plus first-year annual fee waiver on select credit cards;
- 10 free equity trades when you invest a minimum of $1,000 in a iTRADE® account.

To get started, visit Scotiabank.com/newcomers, a one-stop destination for those planning or preparing to settle in Canada.

* Conditions apply. For the complete terms and conditions, please visit *StartRight.scotiabank.com/newcomer-offer for more details*


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
தமிழ் மக்களின் நம்பிக்யைப் பெற்ற வெற்றிகரமான வர்த்தக நிறுவனமாக விளங்கும்
'சங்கர் அன் கோ' தனது வாடிக்கையாளர்களில் எதிர்பார்ப்பு கருதி, எதிர்வரும்
தீபாவளி பண்டிகைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் இறக்குமதி செய்துள்ளார்கள்.
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல் வாழதத்துக்கள்!
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# நினைவு கூர்தல் தொடர்பாக நான்கு ஆயர்கள் வெளியிட்ட அறிக்கை



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

அண்மை ஆண்டுகளில் கத்தோலிக்க திருச்சபையின் நான்கு தமிழ் ஆயர்களும் இணைந்து வடக்கு கிழக்கு கத்தோலிக்க ஆயர் மன்றம் என்ற பெயரில் ஓர் அணியாக செயல்பட்டு வருகிறார்கள். வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் அபிலாசைகளை அதிகம் பிரதிபலிக்கும் விதத்தில் இவ்வாறு தமிழ்ப்பகுதி ஆயர்கள் ஓரணியாக நிற்பது வரவேற்கத்தக்கதே. தெற்கில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஓரினச் சாய்வுடையவராக பார்க்கப்படும் ஒரு சூழலில் நான்கு வடகிழக்கு ஆயர்களும் ஒன்றிணைந்து முடிவெடுப்பது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் உடையது. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஈஸ்டர் குண்டுவெடிப்பை தொடர்ந்து வெளிப்படுத்தும் கருத்துக்கள் சர்ச்சைக்குரியவை. ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு உள்நாட்டில் உள்ள சில சக்திகள் ஈஸ்டர் குண்டுவெடிப்பை பயன்படுத்தியதாக அவர் நம்புவது தெரிகிறது. அதேசமயம் ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் நீதி கோரி குரலெழுப்பும் கர்தினால் தமிழ் பகுதிகளில் நிகழ்ந்த குறிப்பாக தமிழ் கத்தோலிக்கர்களுக்கு எதிராக நிகழ்ந்த தாக்குதல்களைக் குறித்து அந்தளவுக்கு குரல் எழுப்பவில்லை என்ற குற்றச்சாட்டு அவர் மீது உண்டு.

கத்தோலிக்க திருச்சபை ஈழப் போராட்டத்தோடு அதிகம் நெருக்கமாக காணப்பட்டது. இலங்கைத் தீவில் இன முரண்பாட்டை அதிகம் பிரதிபலித்த ஒரு திருச்சபையும் கத்தோலிக்க திருச்சபைதான். எவ்வாறெனில் பெரும்பாலான தமிழ் கத்தோலிக்கர்கள் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக இருந்தார்கள். அது காரணமாகவே சில கத்தோலிக்க மதகுருமார் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிலர் காணாமல் போகச் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேசமயம் சிங்களப் பகுதிகளில் கத்தோலிக்கத் திருச்சபையானது பெருமளவுக்கு சிங்கள கூட்டு உளவியலையே பிரதிபலித்தது.

கத்தோலிக்க திருச்சபை எவ்வாறு இன முரண்பாட்டை பிரதிபலித்தது என்பதற்கு ஒரு கூர்மையான உதாரணம் கூறப்படுவதுண்டு. பிலிப்பைன்ஸை தளமாகக் கொண்டியங்கிய வெரித்தாஸ் வானொலி முன்பு யுத்த காலங்களில் ஒலிபரப்பிய அதன் செய்திகளில் தமிழ் இயக்கங்களை தமிழ் செய்திகளில் போராளிகள் என்று விழித்தது. அதே சமயம் சிங்களச் செய்திகளில் ரஸ்தவாதிகள் அதாவது பயங்கரவாதிகள் என்று விழித்தது என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இவ்வாறான ஒரு பின்னணியில் தமிழ்ப் பகுதிகளில் உள்ள நான்கு ஆயர்களும் இணைந்து ஓர் ஆயர் மன்றமாக செயற்படுவது என்பது ஒருவிதத்தில் தவிர்க்க முடியாத தர்க்ககபூர்வ வளர்ச்சிதான். குறிப்பாக 2009க்கு பின் தோல்வியினாலும் அச்சத்தினாலும் ஒடுங்கிப்போய் இருந்த தமிழ் மக்கள் மத்தியில் ஓங்கி ஒலித்த ஒரே குரல் முன்னாள் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகையுடையது. குரலற்ற தமிழ் மக்களின் குரலாக அவர் ஒலித்தார். பெரும்பாலான மதத்தலைவர்கள் வாய் திறக்கப் பயப்பட்ட ஓர் அரசியல் சூழலில் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்கள் துணிந்து குரல் கொடுத்தார். தமிழ் கத்தோலிக்கர்கள் தமிழ் மக்களுக்குரிய நீதியின் பக்கம் தான் நிற்பார்கள் என்ற செய்தியை ஓங்கி ஒலித்த குரல் அது. இவ்வாறான ஒரு பின்னணியில்தான் அண்மைய ஆண்டுகளாக நான்கு தமிழ் ஆயர்களும் இணைந்து செயற்படுவதும் முக்கியமான விடயங்களில் பொது முடிவை எடுப்பதும் வரவேற்கத்தக்கதே. கடந்த மே 18 ஐ முன்னிட்டு அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். அதில் நடந்தது இனப்படுகொலையே என்று துணிச்சலோடு எடுத்துரைத்தார்கள். இனப்படுகொலையை கத்தோலிக்க வளாகங்களில் நினைவுகூர வேண்டும் என்று அறிவுறுத்தல்களையும் வழங்கினார்கள்.

நான்கு ஆயர்கள் இணைந்து நடந்தது இனப்படுகொலை என்று சொன்னது தென்னிலங்கையில் கத்தோலிக்க வட்டாரங்களில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அங்குள்ள கத்தோலிக்க ஆயர்கள் மத்தியில் இதுதொடர்பாக விமர்சனங்களும் எழுந்தன. தமிழ் ஆயர்களின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் வடக்கு-கிழக்கு ஆயர்கள் அது இனப்படுகொலையே என்ற நிலைப்பாட்டில் விட்டுக்கொடுப்பின்றி காணப்பட்டார்கள்.

ஆனால், அதே நான்கு ஆயர்களும் ஐந்து மாதங்களின் பின் அண்மையில் நினைவுகூர்தல் தொடர்பில் வெளியிட்ட ஓர் அறிக்கை சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. கத்தோலிக்கர்களை பொறுத்தவரை நொவம்பர் மாதம் எனப்படுவது இறந்தவர்களை நினைவு கூர்வதற்கான ஒரு பொதுவான மாதமாகும். பல நூற்றாண்டுகளாக கத்தோலிக்க திருச்சபையால் உலகம் முழுவதிலும் பின்பற்றப்பட்டு வரும் ஒரு வழமை அது. இம்மாதம் முழுவதிலும் இறந்துபோன கத்தோலிக்கர்களை அவர்கள் நினைவு கூருகிறார்கள். அதாவது இந்துக்களின் வார்த்தைகளில் சொன்னால் ஒரு பொதுவான ஆண்டுத் திவசம். இவ்வாறு நொவம்பர் மாதத்திற்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையிலுள்ள உறவின் பின்னணியில் போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூர்வது தொடர்பில் வடக்கு கிழக்கு ஆயர்கள் வெளியிட்ட அறிக்கை வாதப் பிரதிவாதங்களை எழுப்பியுள்ளது.

ஒருபுறம் மன்னாரில் மத முரண்பாடுகளை ஊக்குவிக்கும் தரப்புக்கள் அதனை தங்களுக்கு சாதகமாக வியாக்கியானம் செய்கின்றன. இன்னொருபுறம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் தேசிய பசுமை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகள் அந்த அறிவிப்புக்கு பதில்வினை ஆற்றியுள்ளன.

இது தொடர்பில் திருமலை மறைமாவட்டத்தின் ஆயர் தெரிவித்த கருத்து சர்ச்சையை தணிக்கப் போதுமானதாக இல்லை. அண்மை ஆண்டுகளில் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணிகளும் உட்பட சிவில் சமூக செயற்பாடுகளில் ஒப்பீட்டளவில் தீவிரமாக செயல்படுகிறார் திருமலை ஆயர். முன்னாள் மன்னார் ஆயரின் தொடர்ச்சியாக ஆனால் அமைதியாக செயற்படும் ஒரு மதத் தலைவரான அவர் கூறுகிறார் கத்தோலிக்க சமூகத்தை நோக்கியே அந்த அறிக்கை வெளியிடப்பட்டது என்று. ஆனால் அந்த அறிக்கையில் அப்படிப்பட்ட தெளிவான குறிப்புகள் எதுவும் கிடையாது என்று அதை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள்.

தமிழ்த் தரப்பில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகள் ஒவ்வொன்றும் தமக்கென்று தனித்தனியாக தியாகிகள் நாளை அனுஷ்டித்து வருகின்றன. இதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு நாட்டில் சட்டரீதியாக நெருக்கடிகள் உண்டு. ஏனைய தியாகிகளின் நாட்களை அனுஷ்டிப்பதற்கு தடைகள் ஏதும் கிடையாது. அதேசமயம் போரில் உயிர்நீத்த அனைவரையும் நினைவு கூரும் நாளாக அதாவது இனப் படுகொலையை நினைவு கூரும் நாளாக மே 18 கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக அனு‘டிக்கப்பட்டு வருகிறது. அதற்கும் நெருக்கடிகள் உண்டு.

இவ்வாறானதொரு அரசியல் பின்னணியில் சட்டரீதியாக தடுக்கப்படக்கூடிய ஒரு நினைவு நாளை உலகளாவிய கத்தோலிக்கர்களின் நினைவு கூரும் மாதத்துக்குள் போரில் உயிர் நீத்த பொதுமக்களின் நினைவுகளோடு இணைத்து பொத்தாம் பொதுவான ஒரு நினைவு கூர்தலாக வகைப்படுத்தியதுதான் சர்ச்சைகளுக்கு காரணம் என்று அந்த அறிக்கையை விமர்சிப்பவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். நான்கு ஆயர்களும் போரில் கொல்லப்பட்ட மக்களையும் போரில் ஈடுபட்டு இறந்தவர்களையும் ஒன்றாக நினைவு கூரும் ஒரு காலகட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

நான்கு ஆயர்களின் அறிக்கை மாவீரர் நாளை அனுஷ ˙டிக்க வேண்டும் என்பதனை மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது. உலகம் முழுவதிலும் உள்ள கத்தோலிக்கர்கள் இறந்தவர்களை நினைவு கூரும் ஒரு காலகட்டத்தில் மாவீரர்களையும் நினைவு கூருமாறு ஆயர்கள் மறைமுகமாக அழைப்பு விடுக்கிறார்கள். அதை நேரடியாகச் சொல்ல அவர்கள் தயங்குகிறார்கள். கடந்த மாவீரர் தினத்தின்போது விளக்கேற்றியதற்காக ஒரு மதகுரு கைது செய்யப்பட்ட சம்பவத்தின் அடிப்படையில் அவர்கள் அதிகம் முன்னெச்சரிக்கையோடு சிந்திப்பதாக தெரிகிறது. எனவே அவர்கள் நேரடியாக அரசியல் பேச விரும்பவில்லை என்று தெரிகிறது.

ஆனால் இங்கேயுள்ள விவகாரம் என்னவென்றால் நினைவுகூர்தல் என்பது ஓர் அரசியல் உரிமை ஆகும். அது ஒரு பண்பாட்டு உரிமை. அது ஒரு குணப்படுத்தல் செய்முறை. பண்பாடு சார்ந்தும் அரசியல் சார்ந்தும் அனைத்துலகச் சட்டங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு உரிமை. எனவே ஓர் அரசியல் உரிமை சார்ந்த விவகாரத்தில் அதன் அரசியல் உள்ளடக்கத்தை நீக்குவதற்கு பதிலாக அந்த அரசியலின் பாற்பட்ட கூட்டு உரிமைக்காக குரல் எழுப்புவதற்கு மதத்தலைவர்கள் ஏன் தயங்க வேண்டும்? அதனை ஒரு மதத்துக்கு உரியதாகவோ ஒரு இனத்துக்கு உரியதாகவோ கருதத் தேவையில்லை. மாறாக மனிதர்களாகப் பிறந்த எல்லாருக்குமான˙ பொதுவான் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு உரிமை அது. ஆயர்களின் அறிக்கையானது நினைவு கூர்வதற்கான தமிழ் மக்களின் கூட்டு உரிமையை வலியுறுத்தி வெளிவந்திருந்தால் இப்படி சர்ச்சைகள் எழுந்திருக்காது. பதிலாக அது கத்தோலிக்க நோக்கு நிலையிலிருந்து கத்தோலிக்க பாரம்பரியம் ஒன்றின் மறைப்புக்குள் நினைவு கூருமாறு கேட்கப்பட்டமைதான் ஒரு விவகாரமாக மேலெழுந்திருக்கிறது.

எனவே உலகளாவிய, மிகப் பலமான ஒரு ஆன்மீக பேரரசாகிய கத்தோலிக்க திருச்சபையின் நான்கு ஆயர்களும் இந்த விடயத்தில் துணிச்சலாக முடிவெடுத்து நினைவு கூர்தலுக்கான கூட்டு உரிமையை வலியுறுத்தி அந்த அறிக்கையை வெளியிட்டிருக்கலாம். ஆயர்கள் யாருக்கு பயப்படவேண்டும்? கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசாங்கத்துக்கு எதிராக தொடர்ச்சியாக கருத்துக்களைக் கூறி வருகிறார். ஈஸ்டர் குண்டு வெடிப்புக்கு நீதிகேட்டு அனைத்துலக சமூகத்தை அணுகவும் அவர் தயாராக காணப்படுகிறார். நடந்தது இனப்படுகொலையே என்பதனை தமக்குரிய அறத்தோடு வெளிப்படுத்திய நான்கு ஆயர்களும் அதன் அடுத்தகட்ட தர்க்கபூர்வ வளர்ச்சியாக தமது மக்களுடைய கூட்டு உரிமையை வலியுறுத்துவதே அதிகம் பொருத்தமாயிருக்கும்.


கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

**ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வழிபாடும்.**

வணக்கம்.

அன்புடையீர்.

மாவீரர் மாதமான கார்த்திகை மாதத்தை முன்னிட்டு, மாவீரர் வாரத் தொடக்க நாளான கார்த்திகை 21.11.21 முதல் 27.11.21 வரை தமது மத வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று, ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளையும், பூசை வழிபாடுகளையும் மேற்கொள்ளுமாறு, கனடா வாழ் ஈழத் தமிழ் மக்களைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் கேட்டுக் கொள்கின்றது.

மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தமது இளைய இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களுக்காகவும். ஈழ விடுதலைப் போரில் மரணமடைந்த மக்களின் ஆத்ம சாந்திக்காகவும், தாயகத்தில் இன்றுவரை துயர் சுமந்து வாழும் எமது உறவுகளின் நல்வாழ்வுக்காகவும், ஆலயங்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்யுமாறு அனைத்துத் தமிழ் மக்களையும் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் கேட்டுக் கொள்கின்றது.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619.
CTRO@tamilremembrance.com

(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 35)

# கல்கியின் பொன்னியின் செல்வன்


## வந்தியத்தேவனின் இலங்கைப் பயணத்தின் திருப்பம்

அப்போது ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, 'உனது நோக்கம் என்ன?' என்றார். அதற்கு அவர் 'ஐயா முதல் மந்திரி எனக்கு இந்த ஊமை ராணியை அழைத்து வரப் பணித்துள்ளார். அவள் காற்றை விட வேகமானவள் என்பது தெரியும். அவர் பணித்த கட்டளையை செய்ய வேண்டியுள்ளது' என்றார். 'சரி அந்த ஓடக்காரப் பெண் பூங்குழலியை இங்கே கூப்பிடு அவளை நான் எச்சரிக்கை செய்ய வேண்டும்' என்றார். அதன் படி ஆழ்வார்க்கடியான் பூங்குழலியை அழைத்தார். 'பெண்ணே உனக்கு நான் ஒரு பரிசு தரவேண்டும் சோழ நாட்டு படை வீரன் ஒருவனை திருமணம் செய்து தருகிறேன் உதவி செய்து விட்டாய் என்று இளவரசர் பக்கம் நெருங்காதே ஜாக்கிரதை' என்றார். இதைக் கேட்டு பூங்குழலியின் மனம் கொந்தளித்தது. அந்தக் கொந்தளிப்புடன் தான் படகை விட்ட இடம் நோக்கி நடந்தாள். இரவில் அந்தச் சுழிக்காற்று நடத்திய கோரச் செய்ல்களை எல்லாம் பார்த்து ரசித்துவிட்டு தூங்கி எழுந்தாள். கடலின் கொந்தழிப்பு அடங்கியிருந்தது. அப்போது கட்டு மரத்தில் ஒருவன் கரை ஒதுங்குவதைக் கண்டாள். ஓடிச் சென்றாள் அவனுக்கு உதவினாள். அவனும் 'இரவு சுழிக்காற்றின் பிடியில் எத்தனை கப்பல்கள் அகப்பட்டன தெரியுமா? ஓரு கப்பலில் தீ கூடப் பிடித்தது' என்றான். அப்பொழுது இளவரசர் பாத்திபேந்திரன் கப்பலில் சென்றார் அல்லவா? அவருக்கு ஒன்றும் ஆகியிருக்காது என்று மன அமைதி கொண்டாள். 'நானும் என் படகில் ஏறிச் சென்று தத்தழிக்கும் மனிதர்களுக்கு உதவுவேன்' என்று படகை கடலில் இழுத்து விட்டாள். துடுப்பை வலித்தாள். அமைதி பொங்கும் கடல் நடுவே ஆனந்தமாகப் பாடினாள். பாய் மரக் கட்டையை பிடித்து இரவு முழவதும் அலைகடலில் மிதந்து கொண்டிருந்த வந்தியத்தேவனும், இளவரசரும் கரையைத் தேடினர். வந்தியத்தேவனோ களைப்பாக இருந்தான். தாகம் ஏற்பட்டது தண்ணீரில் மிதந்தாலும் தண்ணீரைக் குடிக்க முடியவில்லை என்ற ஆதங்கம். இளவரசரை நோக்கி, 'என்னால் உங்களுக்கு இந்தக் கதி என்னை விட்டு விடுங்கள் தப்பிச் செல்லுங்கள் நான் மூழ்கிச் சாகிறேன்!' என்று விரக்தி கொண்டான். அதற்கு இளவரசர் தைரியம் கொடுத்தார். அந்த இனிய தருணம் பூங்குழலியின் இனிமையான பாடல் காதில் கேட்டு புத்துயிர் கொடுத்தது. அவ்வேளை இளவரசரும், வந்தியத்தேவனும் கட்டையைப் பிடித்தபடி கடலில் மிதப்பதைக் கண்டாள். பூங்குழலியின் படகு அவர்கள் அருகே வேகமாக வந்தது. இருவரும் படகில் ஏறிக் கொண்டனர். பூங்குழலியோ மகிழ்ச்சியில் தன்னை மறந்து கனவில் சஞ்சரிப்பதாக எண்ணிக் கொண்டிருந்தாள். படகு கோடிக் கரை நோக்கி பிரயாணம் செய்தது.

கடலில் ஏற்பட்ட சுழிக்காற்று கோடிக் கரைப் பகுதியை நாசம் செய்திருந்தது. மரங்கள் வேரோடு தரையில் சாய்ந்திருந்தது. வீட்டின் கூரைகள் பல சரிந்து இருந்தன. வெள்ளக் காடாக காட்சி அளித்தன. இளவரசரை சிறைப்படுத்த என சென்ற கப்பல்கள் கோடிக் கரை நோக்கி வருகிறது என்று தெரிந்த பழுவேட்டரையர் தனது பரிவாரங்களுடனும், இளையராணியுடனும் அங்கு வந்தார். ஏனென்றால் சுந்தர சோழ சக்கரவர்த்தியை பார்க்க புத்த பிக்குகள் தஞ்சைக்கு வந்திருந்தார்கள். அவர்கள் அரசர் குணம் பெற வேண்டும் என்று வாழ்த்துச் சொன்னார்கள். அத்துடன் இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கையில் தமக்கு செய்யும் தொண்டுகளைக் கூறி பெருமைப் பட்டார்கள். இலங்கையின் பழைமையான சிம்மாசனத்தை இளவரசருக்கு அளிக்க தாம் விரும்புவதாகவும் சொன்னார்கள். இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த பழுவேட்டரையர் சுந்தர சோழ சக்கரவர்த்தியிடம், 'உம் திருக்குமாரன் அருள்மொழிவர்மனை இங்கு வருமாறு எத்தனை ஓலை அனுப்பியும் பயன் இல்லை. நான் எத்தனையோ ஆட்களை அனுப்பியும் பயன் இல்லை எனக்கு ஒரு யோசனை உள்ளது. தங்களிடம் அதைச் சொல்ல அனுமதி வேண்டும்' என்றார். சக்கரவர்த்தியும் அதற்கு அனுமதிக்க பெரிய பழுவேட்டரையர் கூறலானார். 'இலங்கை சிம்மாசனத்தை கவர்ந்து முடி சூடிக் கொள்ள சதி செய்ததாக குற்றம் சாட்டி சிறை பிடித்துக் கொண்டு வர கட்டளை பிறப்பித்து அனுப்புவோம். அந்தக் கட்டளையை பூதி விக்கிரம கேசரி தடை செய்ய முடியாது அத்துடன் இளவரசர் கையில் ஒப்படைக்குமாறு ஓலையை அனுப்புவோம் அப்பொழுது இளவரசர் வந்தே தீருவார்.' என்று ஆலோசனை கூற சக்கரவர்த்தியும் ஆமோதித்தார். கப்பல்களும் அங்கு சென்றன. திரும்பி வரும் கப்பல்களை எதிர் நோக்கவே பெரிய பழுவேட்டரையர் இங்கு வந்தார். முக்கியமாக சுழல் காற்றினால் இளவரசருக்கு ஏதும் நேர்ந்தால் அது எனக்குப் பழியாகிவிடும் என்றும் பயந்து கொண்டார். இளவரசர் கோடிக்கரை வந்தால் அவர் இளைய பிராட்டியிடமோ அல்லது செம்பியன் மாதேவியிடமோ செல்லவதற்கு முன் தானே தஞ்சைக்கு அழைத்துச் செல்ல முற்பட்டார். நந்தினியும் அங்கு வந்திருந்தாள். குந்தவை அருள்மொழிவர்மருக்கு என்ன செய்தி அனுப்பிருக்கிறாள் என தெரிந்து கொள்ள மிக ஆசை கொண்டிருந்தாள்.

மேலும் மந்திரவாதி இலங்கை சென்றதால் அவனுடைய செய்தி என்ன என்பதற்காகவும் வந்திருந்தாள். அந்நேரத்தில் கடலில் ஒரு பெரிய மரக்கலம் ஒன்று வந்து நின்றது. உடனே அதில் இளவரசர் வரக் கூடும் என்று எண்ணி, பரபரப்புக் கொண்டு, தகவல் தெரிந்து வர ஒரு படகை அனுப்பினார். அந்தக் கப்பலில் இருந்து பாத்திபேந்திரன் வெளியே வந்தான். படகில் ஏறி கரையை நோக்கி வந்த பாத்திபேந்திரன் பழுவேட்டரையரைக் கண்டான். அவன் வந்தியத்தேவனைக் காப்பாற்ற கடலில் படகில் இறங்கிச் சென்ற இளவரசர் திரும்பி வராததினால் துக்கம் கொண்டு அவரைத் தேடி அலைந்து இறுதியில் கோடிக்கரையில் தேடிப்பார்க்க இங்கு வந்தான். அப்போது பெரிய பழுவேட்டரையர் கம்பீரமாக அங்கு நின்றார். பாத்திபேந்தினுக்கு பழுவூர் ராணியைப் பற்றி ஆதித்த கரிகாலர் சொன்னது நினைவுக்கு வந்தது. அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. அப்பொழுது அழகிய பெண் ஒருத்தி, 'இவர் யார்?' என்றபடி அருகில் வந்து நின்றாள். அவளைக் கண்டதும் மதி மயங்கி நின்ற பாத்திபேந்திரன், 'நான் பாத்திபேந்திரப் பல்லவன்' என்றான். உடனே பெரிய பழுவேட்டரையர் 'ஏன் உன் பட்டப் பெயரை முன் வைக்கவில்லை' என்றார். பின் நந்தினி, 'இவன் வேங்கியும், கலிங்கமும் வென்று, வீர பாண்டிய தலை கொண்ட பாத்திபேந்திரப் பல்லவன்' என்றாள். பாத்திபேந்திரன், 'நான் முக்கியமான துயரச் செய்தியுடன் வந்திருக்கிறேன். ஈழத்தில் இருந்து என்னுடன் புறப்பட்டு வந்த அருள்மொழிழவர்மர், சுழல் காற்று அடித்த பொழுது கடலில் குதித்துவிட்டார்' என்றதும் பழுவேட்டரையர் வேரறுந்த மரம் போல் தரையில் விழுந்தார். நந்தினி அவரை ஆறுதல் படுத்தி, சேவை புரிந்தாள். மயக்கம் தெளிந்து விழித்துக் கொண்ட பழுவேட்டரையர் மீண்டும் அலறினார். 'பொன்னியின் செல்வனைக் கடல் கொண்டு விட்டதா?' ஏன்று பாத்திபேந்திரனைப் பார்த்துக் கேட்க, 'ஐயா! நான் அவர் இறந்து விட்டதாக சொல்லவில்லை.' என்றான் பாத்திபேந்திரன். 'அவர் ஏன் உன் கப்பலில் வந்தார்? எதற்கு கடலில் குதித்தார்? நீ என்ன செய்தாய்?' என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டார் பழுவேட்டரையர். அதற்கு பாத்திபேந்திரன், 'ஐயா கடம்பூர் சம்புவரையரும், மற்றும் பலரும் சோழ குலத்திற்கு சதி செய்வதாக காஞ்சிக்கு செய்தி எட்டியது.' என கூறி முடிக்குமுன்பே, 'அது பொய் பொய்' என்று கத்தினார் பழுவேட்டரையர். பாத்திபேந்திரனோ, 'அதன் பெயரில்தான் திருக்கோவிலிலுள்ள மலையமானும், ஆதித்தகரிகாலரும் என்னை ஈழத்திற்கு அனுப்பினார்கள். அருள்மொழிவர்மரை அழைத்து வருமாறு எனக்கு உத்தரவிட்டார்கள்.' என்றபடி இலங்கையில் நடந்தவை யாவற்றையும் விபரித்தான். வரும் வழியில் நடந்தவற்றையும் கூறினான். பின்னர் பழுவேட்டரையர் பாத்திபேந்திரனிடம் 'நான் உன் கப்பலை சென்று பரிசோதனை செய்து வருகிறேன் தப்பியோடாமல் இங்கேயே இரு' என்றார். அவர் கப்பலிற்கு சென்ற பின்னர் பாத்திபேந்திரனும், பழுவூர் ராணியும் உரையாடினார்கள்.

அப்பொழுது பாத்திபேந்திரன், 'இரத்த வெறி பிடித்த ஆதித்தகரிகாலன் அச்சமயம் உன் விருப்பத்தை நிறைவேற்றவில்லை ஆனால் அதற்கு மூன்று வருடகாலமாக அவன் சித்திரவதை அனுபவித்து வருகிறான். இது உண்மை' என்றபடி 'அத்துடன் இளவரசர் வந்தியத்தேவனைக் காப்பாற்ற கடலில் குதித்தார். இருவருக்கும் என்ன நேர்ந்ததோ தெரியவில்லை' என்று வருந்தினான். அதற்கு நந்தினி, 'ஆ இது என்ன? பாவம் இளையபிராட்டி தான் நேசித்த இருவரையும் இழந்துவிட்டாள்' என்றாள். அவளையே நோக்கிய பாத்திபேந்திரனிடம், 'ஆம் அந்த வாலிபன் மீது மோகம் கொண்டு அவனைத் தப்புவிக்கவே இலங்கைக்கு ஓலை கொடுத்து அனுப்பினாள். அவளால் தான் இத்தனையும் நடந்தது. இதனை என் கணவர் பழுவேட்டரையரிடம் கூறும். என் அன்பிற்கு பாத்திரமாவீர்' என்றாள். 'நீங்கள் எதை வேண்டுமானாலும் கேளுங்கள் செய்கிறேன்' என்ற பாத்திபேந்திரன் 'என் சந்தேகத்தை உங்களிடம் கேட்கலாமா? என்றபடி நீங்கள் ஏன் இந்தக் கிழவனை திருமணம் செய்தீர்கள்? அப்படி அவரிடம் என்ன கண்டீர்கள்?' எனக் கேட்டான். 'அவரை இஸ்டப்பட்டுத்தான் மணந்தேன் காரணம் அரண்மனை வாழ்விற்கும், அதிகாரத்திற்கும் ஆசைப்பட்டேன். என்னை ஏழை என்றும், அனாதை என்றும் அரச குலத்தாரோடு விளையாட உரிமை இல்லாதவள் என்றும் ஏளனம் செய்தார்கள். இந்தக் குந்தவையை அதன் பொருட்டு கலங்க வைக்க வேண்டும் அது என் ஆசை' என்றாள். பழுவேட்டரையர் திரும்பி வந்தார். அப்பொழுது பாத்திபேந்திரன், 'குந்தவை ஓலை கொடுத்து அனுப்பியதால் இத்தனையும் நடந்தது' என்றான். அதற்கு பழுவேட்டரையர் 'சுழல் காற்றின் போது கப்பலில் இருந்து இளவரசர் இறங்கும் போது நீ தடுக்கவில்லை. நீயும் அவர் மரணத்திற்கு பொறுப்பாளி ஆகிவிட்டாய்' என்றார். அப்பொழுது நந்தினி, 'இவரைத் தஞ்சாவூர் அழைத்துச் செல்வோம் சக்கரவர்த்தியிடம் நடந்ததை நடந்தபடி சொல்லட்டும்' என்றாள். அதற்கு பாத்திபேந்திரனும் சம்மதித்தான். அவ்வேளை ஆந்தைச் சத்தம் கேட்க நந்தினி திடுக்கிட்டாள். 'நாதா நாம் இங்கு இரு நாட்கள் தங்கி விட்டுப் போவோம்' என்றாள். அதன்படி அங்கு தங்கியிருந்தனர். பூங்குழலியின் படகில் ஏறிய இளவரசரும், வந்தியத்தேவனும் இப்பொழுது நாம் எங்கே செல்ல வேண்டும் பழையாறைக்கா? தஞ்சைக்கா என்று வாதாட்டம் செய்தனர். 'எப்படி பழுவேட்டரையர் கண்ணில் படாது பழையாறை செல்வது?' என்று இளவரசர் கேட்க, பூங்குழலியும், 'இருபுறமும் அடர்ந்த காடுகளிற்கிடையில் கால்வாய் ஒன்று உள்ளது' என்றாள். 'சரி நண்பா உன் கருத்துப்படி நான் கோடிக்கரை சென்றால் பழுவேட்டரையர் சிறைப்படுத்தி என்னைத் தந்தையிடம் அழைத்துச் செல்வார். சோழ தேசத்து மக்களும் துக்கம் கொள்வர். கலத்தில் தனியாக பழையாறை போகும் படி சொன்னீர்கள் அல்லவா? என் நிலையில் நான் எம லோகம் செல்வேன் போல் தோன்றுகிறது' என்றார் இளவரசர். 'இது என்ன இப்படி நடுங்குகிறீர்கள்' என்று வந்தியத்தேவன் கேட்க, 'இதுவா இலங்கையில் வரும் ஒரு வித விசக்காய்ச்சல் இதிலிருந்து தப்புவது கடினம்' என்றார் இளவரசர். பூங்குழலி துடிதுடித்துப் போனாள். வந்தியத்தேவன் கதி கலங்கி நின்றான். 'பூங்குழலி நாம் என்ன செய்வோம் எங்கே போவோம்?' என்று கேட்க, 'கோடிக்கரையில் பழுவூர் ஆட்கள் தங்களைப் பிடிக்க நேரும். அதோ பெரிய கப்பலும் ஒன்று அங்கு நிற்கிறது. கோடிக்கரை கலங்கரை விளக்க உச்சியில் ஆட்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். நாம் கோடிக் கரை மேற்கு கால்வாய்க்குச் செல்வோம்' என்றாள். அதன்படி அங்கு சென்று இளவரசரையும், வந்தியத்தேவனையும் விட்டு விட்டு நிலைமையை விசாரிக்கச் சென்றாள். குளவர் கோயிலை அடைந்தாள். குருக்கள் பூங்குழலியைக் கண்டு திடுக்கிட்டு, 'எங்கே போயிருந்தாய்? இங்கு பழுவூர் ராணியும், பெரிய பழுவேட்டரையரும், அவர் பரிவாரங்களும், பாத்திபேந்திரனும் இருக்கிறார்கள். அதுவும் பெரிய சோகம் இளவரசர் கடலில் சுழிகாற்றின் போது கப்பலில் இருந்து குதித்து விட்டாராம். மீண்டும் வந்து' சேரவில்லையாம். என்றார். பூங்குழலி 'அப்படியா!' என்றபடி குருக்களிடம் பிரசாதம் வாங்கியபடி திரும்பிச் சென்றாள். பெரிய பழுவேட்டரையரும், பாத்திபேந்திரனும் கடற்கரையில் உலாவச் சென்றனர் நந்தினி தனியாக இருக்க, ராக்கம்மாள் இவள் பூங்குழலியின் அண்ணி. நந்தினியைப் பார்த்து வியந்து நின்றாள். அப்பொழுது, 'ஏன் இந்த வியப்பு நீ யார்?' என்றாள் பழுவூழர் ராணி. 'என் பெயர் ராக்கம்மாள் ஈழத்தில் ஊமைப் பெண் ஒருத்தி இருக்கிறாள். அவளைப் போல் இருக்கிறீர்கள்!' என்றாள் ராக்கம்மா. 'சரி ஏன் இங்கு வந்தாய்?' என்றாள் நந்தினி. 'ஆந்தைக் குரல் கேட்டீர்களா தேவி! மந்திரவாதி உங்களை அழைத்து வருமாறு என்னை அனப்பினார்' என்றாள் ராக்கம்மாள். பின்பு இருவரும் கோயிலுக்குச் சென்றனர். அதைத் தொடர்ந்து மந்திரவாதி இருக்கும் இடத்தை அடைந்தனர். மந்திரவாதியும், பழுவூர் ராணியும் பேசிக் கொண்டனர். 'இளவரசரைக் கடல் கொண்டது என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஓரு சிறிய படகு தூரத்தில் தெரிந்ததாக ராக்கம்மாள் சொன்னாள். காஞ்சி ஒற்றனுக்கு எல்லா இரகசியமும் தெரியும் நீங்கள் கிழவரை அழைத்துக் கொண்டு உடனே செல்லுங்கள்' என்ற மந்திரவாதி, 'ராக்கம்மா சொல்லு பூங்குழலி அவர்களை அழைத்து வந்தால் எங்கே வைத்திருப்பாள்?' அதற்கு ராக்கம்மாள், 'மறைந்த மண்டபம் ஒன்று உண்டு அது அவளுடைய அந்தரங்க வாசஸ்தலம்.' என்றாள். 'சரி நாம் அங்கு சென்று பார்க்கிறோம் நீங்கள் புறப்படுங்கள்' என்றான் மந்திரவாதி. பிரசாதம் பெற்றுத் திரும்பிய பூங்குழலி அனைத்தையும் கேட்டுக் கொண்டு நின்றாள். 'இது என்ன அவர்கள் அங்கு போனால் எமக்கு ஆபத்து' என்றபடி ஓடோடி வந்த பூங்குழலி அங்கு படகு இல்லாததைக் கண்டு ஏக்கத்துடன், 'மறைந்த மண்டபம் போயிருப்பார்களே!' ஏன்று நினைத்து அங்கு போக முனைந்தாள். தன்னை யாரோ பின் தொடர்வதாக தென்பட்டது அவளால் சண்டை செய்யத் தெம்பு இல்லை. உயிரைக் காப்பாற்ற காட்டில் புகுந்து ஓடினாள். களைத்து விட்ட அந்த நேரத்தில் 'பொன்னார் மேனியனே...' என்ற பாடல் கேட்டு கலகல என்று சிரித்தபடி, 'அத்தான் நீ தானா?' என்றாள். 'ஆம் ஆம் உன்னைத் தொடர்ந்து யாரோ வந்தார்கள் உனக்கு எச்சரிக்கை செய்யவே நான் பாடினேன். உன்னைத் தேடி வந்தேன். இளவரசரையும், வந்தியத்தேவனையும் கண்டேன். இளவரசரை மறைந்த மண்டபத்தில் விட்டு விட்டு வந்தேன்' என்றான் சேந்தன் அமுதன். ஓளிந்திருந்த மந்திரவாதி வெளிப்பட்டு, 'பெண்ணே எங்கே அவர்களை ஒழித்து வைத்துள்ளாய் சொல்' என்று மிரட்ட பூங்குழலி ஓட்டம் பிடித்தாள். சேந்தன் அமுதன் அவனைத் தடுக்க அவள் ஓடினாள். மந்திரவாதி சேந்தன் அமுதனைத் தாக்கி விட்டு பூங்குழலியைத் தொடர்ந்தான். திடீர் என்று வந்த சேற்று நிலத்தில் கால் வைத்துவிட்டான் மந்திரவாதி. அவனால் மீள முடியவில்லை. பூங்குழலியோ, 'இரவு முழவதும் சேற்றில் இரு விடிந்ததும் யாராவது உன்னைக் காப்பாற்றுவார்கள்' என்று கூறிவிட்டு மறைந்த மண்டபம் வந்தாள். வந்தியத்தேவன் பழையாறை போவதாக முடிவாயிற்று. சேந்தன் அமுதனுடன் பூங்குழலியும், இளவரசரும் நாகபட்டணம் புறப்பட ஆயத்தம் செய்தனர். இளவரசருக்கு நினைவு தெளிந்தது 'நாம் ஏன் நாகபட்டணம் போகிறோம்? உங்கள் தமக்கை குந்தவை செய்தி கொடுத்துள்ளார் என் அத்தான் சேந்தன் அமுதனிடம் அனுப்பியுள்ளார்' என்றாள் பூங்குழலி. 'ஏன் என்னை புத்த சங்கத்தில் சேர்க்கச் சொல்கிறாய்' என்றார் இளவரசர். படகு நாகபட்டணம் நோக்கி நகர்ந்தது. இளவரசரை பூங்குழலி கவனமாகப் பார்த்துக் கொண்டாள். நாகபட்டணம் சோழ நாட்டின் முக்கிய துறைமுகம். இங்கு மாற விஜயோதுங்க வர்மன் என்பவன் சூடாமணி விகாரையைக் கட்டினான். இந்த விகாரைக்கு படகு வந்தது சேந்தன் அமுதன் தலைமைப் பிக்குவைப் பார்க்கச் சென்றான். அவரிடம் 'நாம் ஒரு நோயாளியைப் படகில் கொண்டு வந்துள்ளோம். அவருக்கு சிகிச்சை தரவேண்டும்' எனக் கேட்டான். அதற்கு தலைமைக் குருவும் நோயாளியைப் பார்க்க அங்கு வந்தார். படகில் பூங்குழலியைக் கண்டு, 'இது என்ன விகாரைக்கு பெண்கள் வரலாகாது' என்றார். பின்பு படகுக்கு அருகில் வந்து, 'இது இளவரசர் அருள்மொழிவர்மரா?' என்று கேட்டுக் கொண்டு வியப்பில் ஆழ்ந்தார். குந்தவை தேவி இளவரசருக்கு அடைக்கலம் தருமாறு கேட்டுக் கொண்டிருந்தது நினைவு வந்தது உடனே இளவரசரை சிகிச்சைக்காக உள்ளே அழைத்துச் சென்றார்.




---

Jenita.Jaffna@gmail.com

தொகுப்பு, எழுத்தாக்கம்:
மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன்

# ஈழத்துத் திருக்கோவில்கள் 973



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருகோணமலை

*"மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த*
*அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்*
*பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே*
*பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்து பின்னே."*

அந்நியர் ஆட்சிக்குட்பட்ட இலங்கை போத்துக்கேயர், ஒல்லாந்தர் எனப் பல அந்நியர்களாலும் ஆளப்பட்டு, சுதந்திரம் அடையும் வரை பிரித்தானியர்களால் ஆளப்பட்டது. பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் திருகோணமலையில் கடற்படைத்தளம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஆங்கிலேயர் ஈடுபட்டனர். இத்தளத்திலே பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து சீக்கியமக்களையும், பஞ்சாபி மக்களையும் அழைத்து வந்தனர். இவ்வாறு வந்த மக்கள் தமது நாடுகளிலே கடைப்பிடித்து வந்த மதவழிபாடுகளையும், அவற்றோடு தொடர்புடைய விழாக்களையும் திருகோணமலையிலும் பின்பற்றத் தொடங்கினார்கள். இவற்றுள் பஞ்சா எடுத்தல் என்ற விழாவும் முக்கியமானதாகக் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு விழாவாகும்.

பஞ்சாக்கள் காகம்போல முக்கோணவடிவிலே கட்டப்படும். இதனைத் தேர்போல அலங்கரித்து அதில் பஞ்சா என்ற சின்னத்தை வைத்து வீதிதோறும் கொண்டு சென்று பெருவிழாவாக இம்மக்கள் கொண்டாடுவது அக்கால வழக்கமாகக இருந்துள்ளது. இவ்விழாவிற்கு திருகோணமலையின் பல இடங்களிலிருந்தும் இஸ்லாமியர்களும் ஏனையோரும் வந்து கலந்து சிறப்பிப்பர். பஞ்சா என்னும் விழா திருகோணமலையிலுள்ள பல பள்ளிவாசல்களிலும் நடைபெற்றது. அழகாக அலங்கரிக்கப்பட்ட பஞ்சாக்களை அலங்கரிக்கப்பட்ட குதிரை வண்டியில் வைத்து வீதிதோறும் கொண்டுசெல்வர். விழா முடிவில் அந்தப் பஞ்சாக்களை, வில்வபத்திரிக் கோணேசர் கோயிலுக்கு அருகிலிருந்த குளத்திலே போட்டுவிடுவார்கள். இக்காரணத்திலால் இக்குளத்திற்குத் தக்கியாக்குளம் என்ற பெயர் ஏற்பட்டது.

பஞ்சாபி மக்கள் கடற்படைத்தளம் அமைக்கும் ஒப்பந்தம் முடிந்து, தமது நாட்டுக்குத் திரும்பிய பின்னர் இவ்விழா சிறிது சிறிதாக அருகிப் பின்னர் மறைந்து விட்டது. ஆனாலும் இங்குள்ள இந்துக்கள் பஞ்சாவிழாவைக் கும்பவிழாவாக நடத்த ஆரம்பித்தார்கள். விஜயதசமியன்று இக்கும்பவிழா பரவலாக நடைபெறும். கும்பவிழாநாளில் கும்பங்கள், கரகங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு பக்திபூர்வமாக கலைச்சிறப்புடன் வீதிகளில் வருவதைக் காணலாம். எல்லா ஆலயங்களிலிருந்தும் கும்பங்கள் புறப்பட்டு வீதிவழியாக ஒரு ஆலயத்தின் கும்பம், இன்னொரு ஆலயத்தின் கும்பத்தோடு எதிர்ப்படாதவகையில் ஒழுங்கு முறையுடன் அனைத்துக் கும்பங்களும் வீதிவழியே வலம்வரும். இவ்வேளையில் கும்பம், கரகங்களைத் தாங்கி வருவோர், ராஜமேளம் அடிக்கப்படும் தாளத்திற்கமைய ஆடிக்கொண்டு வருவார்கள். இவ்வேளையில் உடுக்கடித்துக் காவியங்கள், காவடிச்சிந்து ஆகியவற்றைப் பாடுவது வழக்கம். மங்களவாத்தியங்களும் வாசிக்கும் வழக்குண்டு. கும்பம், கரகங்களைத் தாங்கி வருவோர் உருவேறி ஆடியபடி வருவர். இவ்வேளையில் அருள்வாக்குக் கூறுவதுமுண்டு. விஜயதசமி இரவுபூராவும் இவ்விழா நடைபெறும். இவ்வாறு வீதியுலா வரும் கும்பம், கரகம் ஆகியவற்றை வரவேற்க, மக்கள் தமது வீட்டுவாசல்களில் நிறைகுடம்வைத்துக் காத்திருப்பர். ஒவ்வொரு ஆலயங்களிலிருந்தும் கும்பம், கரகம் ஆகியவை புறப்பட்டு ஏனைய ஆலயங்களுக்குச் சென்று தரிசித்துக்கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்தைப் போய்ச் சேர்வதோடு கும்பவிழா நிறைவுபெறும்.

கும்பம் எனப்படுவது பெரிய செப்புக் குடத்தில் வேப்பம் பத்திரத்தினால் நிலையான அடித்தளம் அமைத்து, சுமார் பத்தடி உயரத்திற்குத் தேர்போல மலர்களாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரித்து, கட்டப்பட்டிருக்கும். எல்லா ஆலயங்களிலுமிருந்து புறப்படும் கும்பங்களும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு வந்து தரிசித்தே செல்லும். இக்காரணத்தினால் கும்பவிழாவன்று பெருந்திரளான மக்கள் இவ்வாலயத்தில் கூடுவர். இவ்விழாவின் மூலம் தமிழர்களின் பாரம்பரியக் கலைகளான உடுக்கு, மேளம், மங்களவாத்தியங்கள், காவடிச்சிந்து, காவியப்பாடல்கள், கரகாட்டம் போன்றவற்றிற்குப் புத்துயிர் கொடுக்கப்படுகின்றது. அத்தோடு இவ்விழாவைக் காணும் வாய்ப்புப்பெற்ற இளந்தலைமுறையினரும் இம் மரபுக்கலைகளைப்பற்றி அறிய கும்பவிழா ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்விழாவின்போது தமிழ் மக்கள் ஒன்று கூடி வழிபாடு செய்யக் கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பமாக இவ்விழாவைக் கருதுவர்

இதே நாளன்று இவ்வாலயத்தில் மானம்பு திருவிழாவும் நடைபெறும். அம்பாள் ஆலயத்திற்கு எதிரேயுள்ள மைதானத்தில் மானம்பு திருவிழாவிற்காக எழுந்தருளுவார். இவ்விடத்தில் கோணேசர் ஆலயத்திலிருந்து மாதுமை அம்பாளும், சிவன் கோவிலிலிருந்து விசாலாட்சி அம்பாளும் எழுந்தருளி வந்து மானம்பு விழா நடத்திச் செல்வர். மானம்பு விழாவில் வன்னிமரம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. வன்னிமரத்தோடு தொடர்புடைய பல கதைகள் காணப்படுகின்றன. ஒரு சமயம் உமாதேவியார் வன்னிமரத்தின் கீழ் இளைப்பாறியதாகவும், இராமன் சீதையைத் தேடிப் புறப்பட்டுச் செல்லுமுன் வன்னிமரத்தை வலம் வந்து புறப்பட்டுச் சென்று வெற்றி பெற்றதாகவும் கூறுவர். இவ்வாறே பாண்டவர்கள் நாடிழந்து காடேகி வாழ வேண்டிய நிலை ஏற்பட்ட காலத்தில் பாதுகாப்புக் கருதி, வன்னிமரப் பொந்துகளில் தமது ஆயுதங்களை ஒளித்துப் பாதுகாத்தனர்.

அஞ்ஞாதவாசம் முடிந்து தங்களைப் பாதுகாத்த துர்க்கையைப் போற்றி ஒன்பது நாட்கள் வழிபாடு செய்தனர். பத்தாம் நாளாகிய விஜயதசமியன்று ஆயுதங்களைக் கையிலெடுத்துத் தேவியை வணங்கி, மீண்டும் தமது நாடேகினர். பஞ்ச பாண்டவர்கள் ஸ்ரீ துர்க்கா நட்சத்திர மாலிகா துதி என்ற இருபத்தியேழு சுலோகங்களைக் கொண்ட துதியைப் பத்து நாட்களும் ஓதி, வழிபட்டுப் பல பேறுகளைப் பெற்றனர். இவ்வாறான பல கதைகளோடு வன்னிமரம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. வன்னிமரத்தினை நினைவுகூர்ந்து அன்னையின் அருளைப் போற்றும்வகையில், வன்னிமரக்கிளையொன்றை வாழைமரத்திலே கட்டிவைத்து பூசை செய்து வன்னி வாழைவெட்டு நடைபெறும். இவ்வாறு நடைபெறுவதையே வழக்கில் மானம்பு என அழைப்பர். வெற்றிகளையும், வளங்களையும் அருளவல்ல நவராத்திரி விரதத்தினை மாநோன்பு என்றே ஆதியில் அழைத்துள்ளனர். இச் சொல் பிற்காலத்தில் மருவி வாழைவெட்டன்று நடைபெறும் விழாவை மானம்பு என அழைக்கும் வழக்கமாக மருவியுள

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# இவ்வார ராசிபலன்

**19-11-2021 வெள்ளி தொடக்கம் 25-11-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும் வாரம். நண்பர்களால் நன்மை உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வயிற்று உபாதைகளும் உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. மற்றவர்களால் மேன்மையுண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். உத்யோக இடமாற்றம் ஏற்படும். வணிகத்தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். உடலில் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் கடுமையாகும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. கணவன், மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டு. உங்களின் தனித்தன்மை வெளிப்படும். நன்மை தரும் நேரம்.
வழிபட வேண்டிய தெய்வம்: வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 1,4,7,9
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,J




**ரிஷபம்:** கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும் வாரம். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில்போட்டி அதிகமாகும். புதிய உடன் உருவாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். நண்பர்களால் நன்மையுண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. காரிய வெற்றி கிட்டும். உத்தியோகம் உயர்வு தரும். மன அமைதி கூடும். பணவரவு அதிகரிக்கும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். காரிய அனுகூலம் கிடைக்கும். சுபச்செய்தி வரும். சம்பள உயர்வு கிடைக்கும். முதுகில் வலி வந்து போகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரக பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,0,3
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**மிதுனம்:** காதல் கைகூடும் வாரம். விரயங்கள் அதிகரிக்கும். போட்டிகள் மறையும். விவாக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். சக ஊழியர்கள் உதவிகள் உண்டு. ஆரோக்கியம் சீராகும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. புண்ணியம் சேரும் நாள். கலைத்துறையில் முன்னேற்றம் தரும். மாணவர்கள் திறமைகள் பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். ஆடை, அணிகலன் சேரும். உடல்நலம் திருப்தி தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர்கள் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். சகோதரியால் லாபம் உண்டு. கமி'ன் தொழில் திருப்தி தரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,7,9,2
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,O




**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வாரம். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. தொழில் நன்மை தரும். செலவுகள் தவிர்க்கவும். வேலைபளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதிய பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செல்வாக்கு அதிகமாகும். இடமாற்றம் நன்மை தரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். அரசியலில் பொறுமை தேவை. வீண் வம்பு வரும். பாதகமான சூழ்நிலை விலகும். வினோதமான எண்ணங்கள் விலகும். பிரியமானவர்களின் சந்திப்பு ஏற்படும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். வாகனச் செலவுகள் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பணியில் பாராட்டு கிட்டும். கௌரவமான காலம். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். கலைத்தொழில் லாபம் தரும். கண்நோய் வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 6,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,H




**சிம்மம்:** முயற்சிகள் வெற்றி தரும் வாரம். வீண் வம்பு அகலும். வியாபாரத் தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைக்கூடும். வேலை பளு கூடும். சந்தோஷமான காலம் முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. திருப்புமுனை ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். காதல் கசக்கும். மனோ பயம் அகலும். மங்கலச் செய்தி வரும். குடும்ப வளர்ச்சி கூடும். பழையக் கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். கல்வியில் ஆர்வம் கூடும். கட்டிட தொழில் லாபம் தரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீக சொத்துக் கிடைக்கும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவு ஏற்படும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 9,7,5,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D




**கன்னி:** அணிகலன் சேரும் வாரம். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்துபோகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கடன் பிரச்சனை உருவாகும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாக திறன் கூடும். உடன்பிறந்தோரால் உதவி கிடைக்கும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கொடுக்கும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். போதிய வரவு திருப்தி தரும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஓடி மறையும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். மனைவி வழி சொந்தம் வறுமை ஏற்படும். எதிர்புகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவுகள் உண்டு. வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பேரியோர்களின் ஆலோசனைப் பலன் தரும். திட்டம் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகன், அதிர்ஷ்ட எண்: 4,7,9,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**துலாம்:** தொழில் லாபம் பெருகும் வாரம். நண்பர்கள் உதவி கிடைக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான சூழ்நிலை அமையும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். வேலை பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். நன்மதிப்பு உருவாகும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றி தரும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆபரணப் பொருள்கள் சேரும் காலம். எண்ணிய காரியம் கைகூடும். தொழிலில் எதிர்பாராத லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவி உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு ஆறுதல் தரும். வழக்குகள் சாதகமாகும். இல்லத்தில் நல்லவை நடக்கும். சுபகாரியம் கூடி வரும். பொதுபணியில் ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: 3,4,2,0
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z




**விருச்சிகம்:** உற்சாகம் அதிகரிக்கும் வாரம். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூர பயணம் உண்டு. சொத்துக்கள் சேர்க்கை உண்டு. வியாபாரம் லாபம் தரும். வாய்ப்பேச்சில் கவனம் வேண்டும். வறுமை நிலை மாறும். உற்சாகம் அதிகரிக்கும். தீய எண்ணம் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கூடும். பூர்வீகச் சொத்துச் சேரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். அரசு பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். மற்றோரின் வாழ்த்து கிடைக்கும். புத்தாடை ஆபரணம் சேரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். கடனால் பிரச்சனை வரும். விவசாயம் விளைச்சல் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். மனதெளிவு கிட்டும். கலைத்தொழில் உயர்வு பெறும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். எடுத்தக் காரியத்தில் தொடுத்த வெற்றி அடைவீர்கள். அரசு உதவிகள் கிடைக்கும். பூர்வீகச் சொத்து சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 7,9,1,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,K





**தனுசு:** இனிய செய்தியால் மனம் மகிழும் வாரம். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பேரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் தனவரவு உண்டு. அரசியலில் புகழ் சேரும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். பழைய நண்பர் உதவி கிட்டும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். எதிரிகள் பலம் குறையும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். கூட்டுத்தொழிலில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்றம். உத்தியோகத்தில் திருப்தி ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். கல்வி சலுகைகள் கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து போகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,3,7,4
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,C




**மகரம்:** கலைஞர்களுக்கு புகழ் கூடும் வாரம். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றியாகும். வீடு, மனை யோகம் உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமம்பட்ட காரியங்கள் நிறைவேறும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். அணிமணிகள் சேரும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேலை பளு கூடும். சொந்த வீடு வாங்க முயற்சி செய்யலாம். திருமண முயற்சி வெற்றி தரும். பயணம் அனுகூலம் தரும்ட. கலைத்தொழில் முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. பொதுப்பணியில் ஆர்வம் கூடும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 4,2,8,7
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கும்பம்:** சுபச்செய்தி வரும் வாரம். நலிவுற்ற தொழில் பொலிவு பெறும். புதிய ஆடைகள் சேரும். அலுவலகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வாகன செலவுகள் ஏற்படும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். வயிறு உபாதை தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவிகள் கிட்டும். வாக்குவாதங்கள் உருவாகி மறையும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். குடும்ப பாசம் அதிகரிக்கும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெயர் புகழ் கௌரவம் தொல்லை தரும். பிராயணம் தொல்லை தரும். மாலை நேரத்தில் இனிப்பான செய்தி வரும். உணவு பிரியம் அதிகரிக்கும். காதலில் புத்துணர்வு இருக்கும். முகப்பொலிவு கூடும். பண நடமாட்டம் கூடும். மனக்கசப்பு நீங்கும். வாழ்த்துக்கள் வந்து சேரும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். முத்தான வாய்ப்புகள் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** நிர்வாகத்திறமை அதிகரிக்கும் வாரம். நினைத்தது நிறைவேறும். முன்னேற்றம் காணும் முக்கியமான காலம். மாலை நேரத்தில் மனம் மகிழும் செய்தி வரும். அந்தஸ்து அதிகமாகும். பழையக் கடன் ஒழியும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்படும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். வீண் பழி அகலும். அரசியலில் புகழ் கூடும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமை குறையும். துன்பம் விலகும். உணவு விடுதி லாபம் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. முன்னேற்றம் காணும் முக்கியமான நாளாக அமையும். ஆடை, ஆபரணச் சேர்க்கையுண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்கசப்பு ஏற்படும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சோதனைகள், சாதனைகளாக மாறும். பேரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். பங்குச்சந்தை லாபம் தரும். பழைய பகை மாறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,8,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,A

# தமிழியல் பன்னாட்டு மாநாடு 2021

மலேசிய மடல்



கோலாலம்பூர், நவ.19:

மலாயாப் பல்கலைக்கழக தமிழ் ஆய்வியல் துறை, மலேசியத் தமிழர் சங்கம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை ஆகியவை இணைந்து தமிழியல் பன்னாட்டு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளன என்று மாநாட்டுச் செயலாளர் பரமசிவம் மருதை அறிவித்துள்ளார்.









வாழ்வியல் மேம்பாட்டிற்குத் தமிழின் கொடை என்னும் கருப்பொருளில் இயங்கலைவழி நடைபெறவுள்ள இம்மாநாடு, நிகழும் நவம்பர்த் திங்கள் 24 முதல் 28-ஆம் நாள் வரை 5 நாட்களுக்கு நடைபெற உள்ளது. (மலேசிய நேரம் முன்னிரவு 7:00 முதல் இரவு 10:00 மணி வரை (இந்திய நேரம் மாலை 4.30 முதல் இரவு 7.30 மணி வரை)

இந்த மாநாடு தொடர்பில் மலாயாப் பல்கலைக்கழக தமிழ் ஆய்வியல் துறைத்தலைவர் முனைவர் சு. மணிமாறன், மலேசியத் தமிழர் சங்கத்தலைவர் வழக்கறிஞர் எம்.ஜெ. கணேசன், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் கு. பழனி ஆகியோர் தலைமையில் ஏற்பாட்டுக்குழு அமைக்கப்பட்டு மாநாட்டுப் பணிகள் ஆக்கப்பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

இந்த மாநாட்டின் புரவலராக தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத் தலைவரும் டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி-இலக்கிய அறவாரியத் தலைவருமான டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம் விளங்குகிறார்.

வாழ்வியல் மேம்பாட்டிற்குத் தமிழின் கொடை என்னும் முதன்மைப்பொருளுக்கு ஏற்ப, தமிழ் மொழியின் தொன்மை, தமிழர்தம் பண்பாட்டு மேன்மை, கலை கலாச்சார செம்மை, சமய மாண்பு, அறிவியல் ஆளுமை, வர்த்தகத் தொழில்நுட்பத்திற்குத் தமிழின் பங்கு, உலகளாவிய உயர் சிந்தனைக்கு வித்திடும் தமிழ் போன்ற பல்வேறு கூறுகள் குறித்து, இம்மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள் வெளிப்படுத்திக் காட்டும்.

இதுவரை 120 ஆய்வுக் கட்டுரைகள் கிடைத்துள்ளன. பல நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர் பெருமக்களிடம் இருந்து இவை கிடைக்கப் பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் முறைப்படுத்தப்பட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் நூலாக பதிப்பிக்கப்பட்டு உலகெங்கிலும் உள்ள தமிழர்களுக்கு அனுப்பப்படும்.

எதிர்வரும் நவம்பர் 24ஆம் நாள் மாலை 7:00 மணி அளவில்(மலேசிய நேரம்)) இம்மாநாடு அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட உள்ளது. தமிழ்நாட்டு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மலேசிய மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ மு. சரவணன் ஆகியோர் தொடக்கி வைத்து உரையாற்றுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இம்மாநாட்டில் தமிழ் அறிஞர் பெருமக்களின் முதன்மை சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் தமிழ் உணர்வாளர்களும் இயங்கலை வழி இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாநாட்டுக் குழு அழைப்பு விடுக்கின்றது.

இதன் தொடர்பில் மேல் விவரத்திற்கு ம.பரமசிவத்துடன் +601135231429 என்ற எண்வழி தொடர்பு கொள்ளலாம். தமிழியல் பன்னாட்டு மாநாடு 2021-இல் கலந்து கொள்ள விழையும் அன்பர்கள், https://us02web.zoom.us/meeting/register/tZAvd-qtrD4qGtUo9ZssFN_KU0C9PKy1WSBj என்னும் இணையப் பக்கத்தில் முன்கூட்டியே பதிந்துகொள்ள வேண்டும். அங்ஙனம் பதிந்தபின், சம்பந்தப்பட்ட அன்பர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பப்படும். அதில், இந்த மாநாட்டில் இணைவதற்கான விவரம் தெரிவிக்கப்படும்.இணைய மாநாட்டில் இணையும்பொழுது பயன்படுத்தப்பட வேண்டிய ஐ.டி. எண்: 84203525001 கடவுச் சொல் ஏதும் தேவையில்லை.

தமிழோடு உயர்வோம்! தரணியை வெல்வோம்!!

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI
PAWN BROKERS





25
வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

ஜீவன் முக்தி (பகுதி ) 130

# ஜீவன் முக்தியை வாழ்வதற்கான நேரடியான தீர்வு

*(சென்ற வார தொடர்ச்சி...)*



## விட்டு விடுங்கள் .... பரமஹம்ஸர்களாவீர்கள்.

ஒரு சின்ன உதாரணம். சின்னக்கதை.

வட இந்தியாவில் வேட்டைக்காரர்கள் பறவைகளை பிடிப்பததை நான் பார்த்திருக்கிறேன. மதுரா, ஆக்ரா இந்தப் பக்கம் எல்லாம் காட்டில் ஒரு சின்ன குச்சியைக் கட்டி தொங்க விட்டு விடுவார்கள். குச்சியை கட்டி இரண்டு மரக்கிளைகளுக்கு நடுவில் தொங்க விட்டு விடுவார்கள்.

நீங்கள் நினைக்கலாம். இதில் எப்படி பறவையைப் பிடிக்க முடியும் என்று. குச்சி தொங்கிக்கொண்டு இருக்கும்பொழுது, பறவை ஒரு பக்கமாக வந்து உட்காரும். உட்காரந்தால் பறவையைவிட லேசான குச்சி என்னவாகும், பளிச் சென்று தலைகீழாகத் திரும்பிவிடும். இப்போது பறவை தலைகீழாகத் தொங்கிக் கொண்டு இருக்கும்.

நன்றாக ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள். இந்த கயற்றை இப்படி கட்டி விட்டுவிடுவார்கள். பறவை வந்து ஒரு பக்கமாக வந்து அமரும். உட்கார்ந்த உடனேயே, குச்சி தலைகீழாகத் திரும்பிவிடும். பறவையினுடைய கனத்தினால் தலைகீழாகத் தொங்கித் திரும்பிவிடும். பறவையும் தலைகீழாக பிடித்துக் கொண்டிருக்கும். இப்படியே அந்தப் பறவை ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ தொங்கிக் கொண்டிருக்கும்.

அந்தப் பைத்தியகாரப் பறவைக்குத் தெரியாது. குச்சியைவிட்டால் பறந்து போய்விடலாம் என்று.

எப்படி அந்த மூடப்பறவை, அந்தக் கோலை விட்டால் பறந்துவிடலாம் என்று தெரியாமல் பிடித்துக் கொண்டே தொங்கிக்கொண்டிருக்கிறதோ, அதேமாதிரிதான் நாமும், நம்முடைய மனத்தை விட்டால், பரமஹம்ஸர்களாக மாறிவிடலாம் என்று தெரியாமல் மனதை பிடித்துக் கொண்டு தொங்கிக்கொண்டே இருக்கிறோம்.

மூடப்பறவை கோலைப்பிடித்து தொங்கிக்கொண்டிருப்பது போல, நாமும், நம் மனதை பிடித்துக்கொண்டு தொங்கிக்கொண்டே இருக்கின்றோம். அந்தப் பறவை, கோலை, பாதுகாப்பு என்று நினைத்து தொங்குகிறது.. அந்தப் பறவை கோலை, பாதுகாப்பு என்று நினைத்துத் தொங்குகிறது. ஆனால், வேடன் வந்து இந்தப்பறவை எதை பாதுகாப்பு என்று நினைத்ததோ, அதையே பிடித்து இழுத்து விடுகிறான். எடுத்து கூண்டுக்குள் போட்டுவிடுகிறான்.

அதேமாதிரிதான் நாமும், நம் மனதை பிடித்துத் தொங்கிக்கொண்டு இருந்தோமென்றால் ஒருநாள் எமன் வருவான். வந்து அந்த மனத்திலிருந்தும் நம்மை மரணம் மூலமாக பிடித்து இழுத்து அதையும் எடுத்துவிடுவான். நம்மை எடுத்து துக்கம் என்கின்ற கூட்டிற்குள்ளே அடைத்து விடுவான்.

அதனால், வேடன் வருவதற்கு முன் அந்தப் பறவை பறக்க வேண்டும். எமன் வருவதற்கு முன், நீங்கள் மனதை விடவேண்டும்.

ஏற்கனவே ஒரு பறவை, அந்த மாதிரி பிடித்ததிலிருந்து, கீழே விட்டுவிட்டு, கீழே விட்டதனால், தரையில் விழுந்து அடிபடாமல் பறந்த ஒரு பறவை. இந்த மாதிர பரமஹம்ஸமாக வந்திருக்கிறது.

'மரம் சொல்கிறது. விதை வெடித்தால்தான் நான் வெளியில் வர முடியும்'. விதை சொல்கிறது. 'நீ வெளியில் வந்த பிறகு நான் வெடிக்கிறேன். ஏனென்றால் வெடித்தபிறகு நீ வெளியில் வரவிலிலையென்றால், நான் இறந்து போய்விட்டால் என்னாவது' என்று.

இரண்டிற்கும் நடுவில் இந்த மாதிரி தொங்கிக்கொண்டு இருக்கிற பறவையிடம் வந்து, 'அப்பா, உன்னை மாதிரித்தான் நானும் நினைத்தேன். கையை விட்டால் கீழே விழுந்து அடிபட்டு விடுவோம் என்று நினைத்துக்கொண்டு இருந்தேன். ஆனால், எப்படியோ கையை விட்டுவிட்டேன். விட்டபிறகுதான் எனக்குத் தெரிந்தது. என்னால் பறக்க முடியும் என்று. நீயும் விட்டுவிடப்பா' என்று சொல்வதுதான் தீட்சை.

ஏற்கனவே தொங்கிக் கொண்டிருந்த பறவை 'அப்பா நான் விட்டதனால் எனக்கு அடிபடவில்லை. பரமஹம்ஸமாகப் பறந்துவிட்டேன. நீயும் உன்மனதை விட்டுவிடு. உன் மனதை விட்டுவிடுவதனால் எந்த அடியும் படாது, எந்த வலியும் வராது. ஆனந்தமாக பரமஹம்ஸமாக தான் மாறுவாய்' என்று நம்பிக்கையைக் கொடுக்கிறது ஏற்கனவே பறந்த ஒரு பறவை. வலையில் சிக்கிப் பறந்த பறவை வலையில் மாட்டிக்கொண்டிருக்கின்ற இன்னொரு பறவைக்குப் போய், அறிவுரை செய்து தைரியத்தை கொடுப்பதுதான், இப்போது நாம் செய்கின்ற நித்ய தியான தீக்ஷை. இது குருவிற்கும், சீடனுக்கும் இருக்கின்ற உறவு.

ஏற்கனவே, மனம் என்ற ஒன்றைப் பற்றிக்கொண்டு வாழ்ந்ததனாலும், இப்போது அதை விட்டு விட்டு ஆனந்தமாக வாழ்வதனாலும், உங்களுக்கும் உரைக்கின்றேன், நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். மனதை விடுவதனால், ஆனந்தத்தில் தான் வாழ்வீர்கள், துக்கம் வராது.

ஒரு விதை வெடிப்பதற்கு முன்பு அதற்கு பயம் வரும். 'நாம் வெடித்தால் மரமாக மாறுவோமோ? மாறமாட்டோமோ?' என்று.

விதை மரத்திடம் 'மரமே நீ வெளியில் வா, அதன்பிறக நான் வெடிக்கிறேன் என்று சொல்லும். ஆனால் மரமோ விதையிடம், நீ வெடித்தால்தான் நான் வெளியே வரமுடியும்' என்று.

ஏற்கனவே விதையாக இருந்து விருட்சமாக மாறிய மரம் அங்கே வந்து. ஸூ அப்பா, விதையே1 கவலைப்படாதே!. வெடிக்கும் முன் நானும் உன்னை மாதிரித்தான் இருந்தேன. ஆனால் வெடித்த உடனே மரமாகத்தான் மாறி இருக்கிறேன்.

'நீயும் வெடி. மரமாகத்தான் மாறுவாய்' என்று அந்த விதைக்கு தன்னம்பிக்கையை கொடுப்பதுதான் 'தீட்ஷை'.

அதனால் குச்சியைப் பற்றிக்கொண்டு, மனதைப் பற்றிக்கொண்டு, தொங்கிக்கொண்டிருக்கின்ற நீங்கள் எல்லோரும் கவலைப்படாடல், மனதை விடுங்கள். விடுபடுத்திக் கொள்ளுங்கள்.

'Be unclutched" - விடுபடுத்திக் கொள்வதனால், நீங்கள் ஒரு நாளும் கீழே விடமாட்டீர்கள். மண்டை உடையாது. துக்கம் வராது. பறப்பீர்கள். 'பரமஹம்ஸர்களாக' மாறுவீர்கள்.

இதை ஆழ்ந்து புரிந்துகொண்டு, இந்த சத்தியத்தை உள்வாங்கி மனம் என்கிள்ற குச்சியைப் பிடித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, 'பரமஹம்ஸர்களாக மாறுவீர்களாக' என்று ஆசிர்வதித்து முடிக்கின்றோம்.

**நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880-8585**




# கடந்தவையும் கடப்பவையும் (10)

- உமா மோகன் -

அன்றோடு தொடங்கியது மாபெரும் போராட்டம்
நின்றாடினோமா களத்தில்? அதுவும் இல்லை

இவ் உயிரைக் காப்பதற்கே என்னாளும் போராட்டம்
எவ்வளவு ஓடலும் ஒளிதலும் ஆனாலும்

அவ்வப்போது படிப்பதை விடவில்லை
'செல்வரா வேளையேனும் உள்ளதைப் படியுங்கோ'

கட்டளைக்குக் கீழ்ப்பணிந்து புத்தகத்தை எடுப்பதுண்டு - அது
கட்டுக்கோப்பாய் ஓரிடத்தில் படிப்பது போல் இருந்திடுமா?

இன்றைய கொரோனாக் காலத்தில் கண்ணாலே பார்கிறோமே
என்னவெல்லாம் நடக்குது என்று

இக்காலப் பிள்ளைகளைப் பார்க்கும் போது
அக்கால எம்நிலையும் வந்து போகும்

இருகாலப் படிப்பின் நிலையையும்
ஒருதரம் நின்று நாம் பார்ப்போமே - ஆம்

இன்று

செல்லமாய் வளரும் பிள்ளைகள் தான் சில இடத்தில் இப்படி,
மெல்லமாய் அலாரம் வைக்கின்றார்கள் - அடித்த பின்பும்

அசையாமற் படுக்கின்றார்கள், எழுப்பிவிட்டால்
சைகையாலே கேட்கின்றார்கள் இரண்டு நிமிடம்

மறந்து போய் இருந்துவிட்டால் பதறுகின்றார்
பறக்கின்றார் ஐயகோ நேரம் போட்டுதெண்டு

முகத்தை மட்டும் கழுவிவிட்டு மேற்சட்டையை
வேகமாக மாற்றிவிட்டு மறுபடியும்

மெத்தையில்த்தான் ஏறுகிறார் - அங்கு
லாப்ரொப்பைத் திறந்து ஆசிரியருக்கு - தம்

முகத்தைக் காட்டாமல் படிக்கின்றார் இடையிடையே
அருகிருக்கும் கைபேசியையும் தட்டுகிறார்

மெள்ள எழும்பிப்போய் கட்டளையும் இடுகின்றார்
உள்ளே வரும் உணவை கட்டிலில் இருந்தபடி உண்கின்றார்

ஐயோ பாவம், கொரோனா காலத்துப் படிப்பும் கூட கொடுமைதான் - ஆனாலும்

பதுங்கு குழி வாசலில் படித்து வந்த எம்மை விட - கொரோனாவிற்காய்
ஒதுங்கி வாழும் இவர்கள் வாழ்வு பரவாயில்லை

அன்று

வீட்டிற்கு ஒரு பதுங்கு குழி கட்டாயம்
வெட்டியே இருப்பதுண்டு - அதை
வசதிக்கேற்ப அமைத்திடுவர்

வீட்டைக் கூட்டுறோமோ இல்லையோ
சேட்டை விடேலாது பதுங்கு குழிப் பராமரிப்பில்

பூரான் பூச்சிகள் மட்டைத்தேள் கொடுக்கன் - ஏன்
விசப் பாம்பும் கூட இருக்கும் என்று சொல்லியதால்

பார்த்துப் பார்த்து பலதடவை
நேர்த்தியாகக் கூட்டுவது பெரும் வேலை - அன்று

எந்நேரமானாலும் குண்டு வரும் ஆனாலும்
பின்னேரம் ஆனால்த்தான் பெரும் பயமும் வரும்

முன்கூட்டியே பதுங்கு குழி வாசலை அண்டியே
எம் படுக்கைகளும் போடப்படும் - போர்

கடுமையான காலமது மின் விளக்கு
விடுபட்டு பலகாலம் ஆனதனால்

சிறு விளக்கில் சீவிக்க சிக்கனமாய்
ஒரு விளக்கு மண்ணெண்ணைக்கு

மாற்றீடாய் தேங்காய் எண்ணை விளக்கொன்று - அதை
ஏற்றிவைத்து அதைச்சூழ நாமிருந்து படித்துள்ளோம் - வானில்

இரையும் சத்தம் ஒன்று கேட்டுவிட்டால் - மிக
விரைவாய் அவ்விளக்கும் அணைக்கப்படும்

கதிரை மேசை மெத்தை என அத்தனையும்
இருந்து என்ன
எதிலையும் இருக்கேலாது முதற்குத்தின் எதிர்பார்ப்பு

அது என்ன?

செல்லடிக்கும் போது லோட் பண்ணும் சத்தமது
எல்லாரும் முதற்குத்து என்று உசாராவது உண்டு

அச்சத்தம் கேட்டுவிட்டால் அவசரமாய் இறங்கிடலாம்
மற்றைய சத்தமது விழுந்த பின் வெடிப்பது

எங்கு விழுந்தாலும் இங்குபோல் இருக்கும் அது
திக்குத் திக்காய் ஓடவைக்கும் திகில் அடையச் செய்து விடும்

சத்தமது ஓய்ந்தபின்தான் வந்து பார்ப்போம்
அங்கு விரிந்து வைத்த புத்தகத்தை.

கொரோனா காலத்திப் பிள்ளைகளும் பாவம் தான்
போர்க்கலத்து நாமும் கூடப் பாவம் தான்

(தொடரும்)

# ஆரோக்கியமான வாழ்க்கை



ஆரோக்கியமான வாழ்க்கையை நீடித்துக்கொள்வது என்பது அவர் அவர் மேற்கொள்ளும் செயல்களை கொண்டே இருக்கிறது. மேலும் ஆரோக்கியமான வாழ்க்கை என்பதில் நோயற்ற வாழ்வு, உடல் ஆரோக்கியம், சுறுசுறுப்பு போன்ற உள்ளடங்கும். இது நபருக்கு நபர் வேறுபடுகிறது. ஆரோக்கியமான வாழ்க்கையை நீடிக்க சிறந்த உணவு, உடற்பயிற்சி, மற்றும் உடல் கவனிப்பு மிக முக்கியமானதாகும்.

உங்களுக்காக ஆரோக்கியமான வாழ்க்கையை நீடிக்க சில எளிய முறையில் ஹெல்த்தி டிப்ஸ்:

• தினமும் காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் முடிந்த அளவு 2 ல் இருந்து 3 லிட்டர் தண்ணீர் குடிப்பது நல்லதாகும்.

• காலை, மாலை என இரு நேரமும் ஒரு மணி நேரமாவது நடை பயிற்சி (வாக்கிங்) மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் உடல் உறுப்புகளில் நல்ல செயல்பாடு ஏற்பட்டு நரம்புகளுக்கும், சதைகளுக்கு பலம் கிடைக்கும்.



• நேரத்திற்கு உணவு உட்கொள்ளவது. ஒரு நாளில் நாம் மூன்று வேலை சாப்பிடுகிறோம் இதில் காலை 9- 9:30 மணிக்குள் சாப்பிட வேண்டும். மதியம் 1:30 - 2 மணிக்குள் சாப்பிட வேண்டும். மற்றும் இரவு 7-7:30 மணிக்குள் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

• நாம் தினமும் சாப்பிடும் உணவில் அளவான சாப்பாடு இருந்தால் மிகவும் நல்லது. அல்லது காலை, மாலை நன்றாக சாப்பிட்டால் இரவு உணவில் குறைந்த அளவு சாப்பாடு இருந்தால் செரிமானம் சீராக ஏற்படும்.

• தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வது நல்லது. தினமும் உடற்பயிற்சி செய்வதால் உடல் உறுப்புகளுக்கு நல்ல செயல்பாடு ஏற்பட்டு மூளைக்கும், இதயத்திற்கும் புத்துணர்ச்சி கிடைப்பதோடு நல்ல ஆரோகியம் கூடும்.

• நமது தினசரி வேலையை நேரத்திற்கு செய்வது அவசியம். ஒரு நாளைக்கு நாம் செய்யும் வேலையை நாம் மற்ற நாளிலும் அதே நேரத்திற்கு செய்ய வேண்டும்.

• கொழுப்பு சத்து நிறைந்த உணவை தவிர்க்க வேண்டும். கொழுப்பு சத்து நிறைந்த உணவை உட்கொள்வதால் தேவையற்ற கொழுப்பு நம் உடம்பில் ஏற்படுகின்றது. இதனால் உடல் பருமனாகி உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. முடிந்த அளவு கொழுப்பு சத்து நிறைந்த உணவை தவிர்ப்பது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு நல்லதாகும்

• நாம் உட்கொள்ளும் உணவில் காய் கரிகள் அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டும். பயிர்கள் சாப்பிடுவது நல்லது அதிலும் ஊறவைத்து சாப்பிடுவது மிகவும் நல்லது. அசைவ உணவை இரவில் தவிர்ப்பது உடல் செரிமானத்திற்கு நல்லது.

• நீரிழிவு பிரச்சனை இருப்பவர்கள் முடிந்த அளவு மூன்று அல்லது நான்கு மாதத்திற்கு ஒரு முறை உடலை பரிசோதித்துக்கொள்வது மிகவும் நல்லது.

***"பல செல்வங்களை விட ஆரோக்கியத்தை தேடி செல்லும் பயணம் என்றும் நிலையானது"***

**- இரா சஹானா**

# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

## கனடா தமிழ் திருச்சபைகள்

இணைந்து நடாத்தும்

# ஞாயிறு திருவிருந்து ஆராதனை

SUNDAY

28th NOV

09:00 am - 12:00 pm



'அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும்,
அப்பம் பிட்குதலிலும்,ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.'

அப் 2:42

VENUE

METROPOLITAN CENTER

3840 Finch Ave.East.Scarborough ON
M1T 3T4

நேரடியான ஒளிபரப்பை (ஒலி) காணத்தவறாதீர்கள்

tamil one

HOLY GOD TV

zoom

ID: 767 656 5454

Sangamum Tamil Christian Radio

கிறிஸ்து இயேசுவிற்குள் அன்பான சகோதர, சகோதரிகளே!
கனடா தமிழ் ஊழியர் ஐக்கிய சபைகள் இணைந்து நடாத்தும் இவ் ஆராதனையில் சகல சபைகளையும், விசுவாசிகளையும் பங்குபற்றுமாறு அன்புடன் வரவேற்கிறோம்.
வாருங்கள்! வந்து ஒருமனதோடு எமது ஆண்டவரை ஆராதிப்போம்!!

# அன்பின் தொனி - 630

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள்** - Be Holy

**7. தேவனுடைய உண்மை** - The faithfulness of God

தேவன் உண்மையுள்ளவர் என்பது அவருடைய தேவத்துவத்தின் தன்மைக்குத் தேவையான ஒரு குணாதிசயம். அது அவரிடம் இல்லாவிட்டால் அவர் சர்வ வல்ல தேவனாய் இருக்க முடியாது, தேவன் உண்மையற்றவராய் இருப்பது அவருடைய இயல்பிற்கு எதிர்மாறானது, அது முடியாத ஒரு நிலைப்பாடு. நாம் உண்மையற்றவர்களாய் இருந்தாலும் தேவன் எப்போதும் உண்மையுள்ளவராகவே இருக்கிறார், ஏனெனில் அவர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார். தேவன் உண்மையாய் இருப்பதென்பது தேவ நியதியின் அதி உன்னதமான பரிபூரணத்தை வெளிப்படுத்துகிறது, அதை அவர் தனது உடையாக அணிந்திருக்கிறார்.

ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்புகூர்ந்து, தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும், - **உபாகமம் 7: 9**

நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார், அவர் தம்மைத்தாம் மறுதலிக்க மாட்டார்.
- **2 தீமோத்தேயு 2: 13**

சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைப்போல் வல்லமையுள்ள கர்த்தர் யார்? உம்முடைய உண்மை உம்மை சூழ்ந்திருக்கிறது.
- **சங்கீதம். 89: 8**

உம்முடைய நீதியை நான் என் இருதயத்திற்குள் மறைத்துவைக்கவில்லை, உமது சத்தியத்தையும் உமது இரட்சிப் பையும் சொல்லியிருக்கிறேன், உமது கிருபையையும் உமது உண்மையையும் மகா சபைக்கு அறிவியாதபடிக்கு நான் ஒளித்துவைக்கவில்லை. கர்த்தாவே நீர் உம்முடைய இரக்கங்களை எனக்குக் கிடையாமற் போகப்பண்ணாதேயும், உமது கிருபையும் உமது உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது. - **சங்கீதம் 40: 10-11**

ஆனாலும் என் கிருபையை அவனை விட்டு விலக்காமலும், என் உண்மையில் பிசகாமலும் இருப்பேன். என் உடன் படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதைமாற்றாமலும் இருப்பேன். - **சங்கீதம் 89: 33-34**

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலை தோறும் புதியவைகள், உமது உண்மை பெரியதாயிருக்கிறது. - **புலம்பல் 3: 22-23**

**தேவனின் குணாதிசயங்கள்**

a) **தேவன் நல்லவர்**

அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மை யைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே, நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். - **மத்தேயு 19: 16-17**

கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.
- **சங்கீதம் 100: 5**

b) **தேவன் தயவும் கண்டிப்புமானவர்**

ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார், விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார், அந்தத்தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும், நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்.
- **ரோமர் 11: 22**

c) **பரிசுத்தரும் பூரணருமானவர்**

ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயி ருக்கக்கடவீர்கள்.
- **மத்தேயு 5: 48**

நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் சொல்லவேண்டியது என்னவென்றால்: உங்கள் தேவனும் கர்த்தரு மாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். - **லேவியராகமம் 19: 2**

d) **நீதியும் நீயாயமும் உள்ளவர்**

அப்பொழுது தண்ணீர்களின் தூதன்: இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்.
- **வெளிப்படுத்தல் 16: 5**

இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா. இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது, அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்.
- **வெளிப்படுத்தல் 19: 1-2**

தேவன் அநியாயஞ் செய்யாமலும், சர்வவல்லவர் நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே. - **யோபு 34: 12**

மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது, நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம். - **சங்கீதம் 97: 2**

தொடரும்...

## வீணாவின் கவிக்கணை

மழை பெய்து வெள்ளம் பெருகி,
ஊர் நடுவே ஓடமும் ஓடி,
வீடுகள் மூழ்கி, மக்களும்
தத்தளித்து, உணவின்றி
தவித்தது மழையின் குற்றமா?
அல்லது, அவை செல்லும்
பாதையை முடக்கி, அதில்
வீடுகளை அடுக்கி,
இயற்கையை வருத்தியது
ஆறறிவு கொண்ட நம் குற்றமா?
யார்மீது குறையென்று
யாரறிவர் இன்று???


**31ம் நாள் அந்தியெட்டியைத் தொடர்ந்த**

**நன்றி நவிலல் நிகழ்வு**

**அன்னை மடியில்** 17 02 1944

**இயற்கையின் பிடியில்** 09 10 2021



**கவிஞர் சபா அருள்சுப்பிரமணியம் M.A**

(ஓய்வுபெற்ற மாதகல் St. Joseph மகாவித்தியாலய அதிபர், கொத்தணிப் பாடசாலை அதிபர், கனடா தமிழ்ப் பூங்கா பள்ளி நிறுவுனரும் ஆலோசகரும் மற்றும் கனடா தொல்காப்பிய மன்றத்தின் தலைவரும் ஆவார்)

அன்னாரது நிகழ்வு பற்றிய அறிவித்தல்

இடம்: ஐயப்பன் ஆலயமண்டபம்
635 Middlefield Road, Scarborough, M1V 5B5

காலம் November 21, 2021

நேரம் காலை 10:00 மணி தொடக்கம்


இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் நலன்விரும்பிகள் அனைவரும் ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| யோகா | மனைவி | 647 706 6123 |
| அசோக் | மகன் | 416 999 7193 |
| அருண் | மகன் | 647 281 0306 |
| பாபுஜி | மகன் | 416 931 5570 |

# 19ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 - 02 - 1984



ஆண்டவன் அணைப்பில்
23 - 11 - 2002

## செல்வன் சந்திரபோஸ் நிர்மலன் (Shan)



அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இடைநடுவில் பறித்து விட்டான்...
துன்புற்றோர் துயர் துடைத்து துணைக் கரமாய்
அடைக்கலம் தந்த உம்மை ஆண்டவன் ஏனழைத்தான்?
பண்புள்ளோரை பல காலம் வாழவிடக் கூடாதென்றோ....
என் செய்வோம் இறைவன் சித்தம் இது இனி காணமுடியாத
சோகநிலையோடு இங்கிருந்தே ஏங்குகின்றோம்
கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீர் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் எம் நினைவோடு இருப்பீர்..

மறாத நினைவுகள்

என்றும் உன் நீங்காத நினைவுகளுடன் உனது குடும்பம்
(905) 554-2433

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளுர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25ஆவது வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE, TRANSMISSION, RUSTPROOFING, OILCHANGE, TYRES, AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1337 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 19, 2021

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேற்குலகப் பயணம் தொடர்பில் தமிழர்களுக்கு சந்தேகம்





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கான விஜயம் ராஜபக்ச அரசுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுமா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

*(உள்ளே விபரமான கட்டுரை 7ம் பக்கத்தில்)*

# வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களின் மாணவர்கள் தர்ஷிகன் வித்தியானந்தன் சண்ஷிகன் வித்தியானந்தன் ஆகியோரின் மிருதங்க அரங்கேற்றம்







கனடாவில் புகழ் பூத்த மிருதங்க பயிற்சிக் கூடமாக விளங்கும் “மிருதங்க சேஸ்திரம் நிறுவனத்தின் நிறுவனர் வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களின் மாணவர்கள் இசை செல்வர்கள் தர்ஷிகன் வித்தியானந்தன் மற்றும் சண்ஷிகன் வித்தியானந்தன் ஆகியோரின் மிருதங்க அரங்கேற்றம் கடந்த 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கனடா ஸ்கார்பரோ நகரில் அமைந்துள்ள கந்த சுவாமி ஆலய மண்டபத்தில்.. சிறப்பாக நடைபெற்றது அரங்கேற்றத்தை பி.எஸ்.சுதாகரன் அவர்கள் தொகுத்து வழங்கினார். பிரதம விருந்தினராக “உதயன்“ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கமும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி தேவதாஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். வயலின் இசை வழங்கியவர் ஸ்ரீமதி தனதேவி மித்ரதேவா. பாடல்- கலைஞர் நிரூபன் நாகேந்திரன். மோர்சிங்- மோகனன் ரவீந்திரன். கஞ்சிரா: வின்ஸ் ரவீந்திரன். கடம் கலையரசன் சிங்கராஜ் ஆகியோர் இந்த இரட்டை அரங்கேற்றத்திற்கு பக்கவாத்திய இசை வழங்கிப் பாராட்டுக்களைப் பெற்றார்கள். இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# மன்னார் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பொதுச் சுடர் ஏற்றும் பீடம் இராணுவத்தால் இடித்தழிக்கப்பட்டது



மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தின் பிரதான சுடர் ஏற்றும் பீடம் இராணுவத்தினரால் முற்றாக இடித்தழிக்கப்பட்டது.

அரச பயங்கரவாதத்தின் மிலேச்சத்தனமான செயல் என மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H.Selvanayagam Broker

# மொன்றியால் நகரில் ‘நண்பன்' விருது விழாவில் கௌரவிக்கப்பெற்ற நால்வருக்கும் குவியும் பாராட்டுக்கள்










கடந்த 13ம் திகதி சனிக்கிழமை மொன்றியால் நகரில் ‘உதயன்’ வெள்ளி விழா மற்றும்’ நண்பன்’ விருது விழா இடம்பெற்ற மேடையில் மொன்றியால் வாழ் நான்கு கலைஞர்கள் கௌரவிக்கப்பெற்றனர்.

எல்லோரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் - கட்புலன் இழந்த நிலையிலும் தாயக மக்களின் கண்ணீர்த் துளிகளைத் துடைத்தெறிய வேண்டும் என உயர்ந்த இலட்சியத்துடன் இசை நிகழ்ச்சிகளின் மூலம் நிதி உதவிகள் வழங்கி வரும் இளம் பாடகர் செல்வன் - கௌரீஸ் சுப்பிரமணியம், கடந்த 30 ஆண்டுகளாக ‘நாட்டிய ஷ்ருங்கா’ நடனப்பள்ளியின் நிறுவனராகவும் - பிரதம ஆசானாகவும் - கலைத் தொண்டும் - சமூகப்பணியும் ஆற்றிவரும் திருமதி. தாரகா சற்குணபாலா, நாடகச் சித்திரங்களை எழுதியும், மேடையேற்றியும், கலைப் பணி புரிந்து வரும் நாடகக் கலைஞரின் தொடர் சேவையைப் பாராட்டி திரு.கந்தையா – திரு.லோகநாதன், இலங்கையிலும் - தமிழகத்திலும் - ஐரோப்பிய நாடுகளிலும் பொப்பிசை – மெல்லிசை பாடல்கள் மூலம் புகழ்பெற்ற பாடல் கலைஞர், வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற திரு.அமுதன் அண்ணாமலை ஆகிய நால்வருக்கும் - 2021க்குரிய ‘நண்பன்’ விருது வழங்கப்பெற்றமை வரலாற்று நிகழ்வாகிவிட்டது, அவை தொடர்பான படங்களை இங்கே காணலாம் (படங்கள்: சத்தியன்)